உ
சிவமயம்

கிளிநொச்சி

# அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான

# மஹா கும்பாபிஷேக மலர்



மண்டலாபிஷேக பூர்த்தி வெளியீடு


12.03.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக மலர் சிறப்புற்று வெளிவர வாழ்த்துகின்றோம்.

# சிவனருட்செல்வன்

## அரிசி ஆலை



No 1 சிவப்புநாடு

No 1 தீட்டற்பச்சை

No 1 அரிசிமா

மிளகாய்த்தூள்,

சரக்குத்தூள் வகைகள்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்,

வீட்டுத்தேவைக்குரிய நெல், மிளகாய், உழுந்து, பயறு போன்ற அனைத்துத் தானிய வகைகளை சிறந்த முறையில் அரைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.





பெரியபரந்தன், கரடிப்போக்கு,

கிளிநொச்சி

TP No : 0213208027, 0777531771



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# கிளிநொச்சி
# அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான
# மஹா கும்பாபிஷேக மலர்

**விகிர்தி வருடம் தைத்திங்கள் 24-01-2011 திங்கட்கிழமை**

கௌரவ ஆலோசகர் :
**உயர்திரு. தி. இராசநாயகம் (முன்னாள் அரச அதிபர்)**
**சிவஸ்ரீ. கு. இரத்தினேஸ்வரக் குருக்கள்**

மலராசிரியர் :
**திருமதி செல்வராணி சோமசேகரம்பிள்ளை**
(கிளி. மாவட்ட சைவ மங்கையர் கழகச் செயலாளரும்,
இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகரும்)

**மண்டலாபிடேக பூர்த்தி வெளியீடு**

**12-03-2011**

**ஆலய பரிபாலன சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

**அன்புள்ளம் கொண்ட அன்புடையீர்!**

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே பொருந்தியிருக்கும் கரைச்சிப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிளிநொச்சிப் பதியினிலே அழகன் முருகன் கந்தசுவாமி தேதவஸ்தானத்திலே எழுந்தருளி அடியார்கட்கு அருள் பாலித்து வருகின்றான் வண்ணமயிலேறி வனப்புடன் காட்சிதரும் எழிலார்ந்த முருகப் பெருமான் நகரின் மத்தியிலே வீற்றிருந்து வேண்டுவார் வேண்டும் வரமனைத்தினையும் நல்கி காத்தருளுவது சிறப்புமிகு பேரருட்டிறனாகும்.

எமது நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழலால் மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்து பேரிழப்பின்பின் மீள்குடியேறி சரவணனின் ஆலயத்தை மெருகிட்டு மீளமைத்து பெருஞ்சாந்தியென்னும் குடமுழுக்கினை 24-01-2011 அன்று சுபமுகூர்த்தத்திலே நிறைவு செய்து மனவமைதி பெற்றுள்ளனர். அவனருளாலே யாவும் சிறப்பான முறையிலே நிறைவுபெற அயராது உழைத்த பரிபாலனசபையினர் போற்றப்பட வேண்டியவர்களாவர். அவர்களது உள்ளத்திலே கிளர்ந்தெழுந்த பேரவா காரணமாக மஹாகும்பாபிஷேகம் சிறப்பு மலரொன்றை வெளியிட வேண்டுமெனச் சிந்தை கொண்டனர்.

அவர்களது விருப்பிற்கிணங்க மலராக்கற் குழுவினர் இம்மலரை இயன்றவரை சிறப்புடன் உருவாக்கியுள்ளனர்.

இம்மலரில் பல்வேறு ஆக்கங்கள் கந்தசுவாமி கோவிலின் சிறப்புக்கள் கும்பாபிஷேக விளக்கங்கள் நிழற்படங்கள் என்பனவற்றை இடம்பெறச் செய்துள்ளோம். பெரியார்களின் ஆசிச் செய்தி, வாழ்த்துரை, அருளுரை என்பன இம்மலரின் சிறப்பிற்கு துணையாக விளங்குகின்றன. சைவ பெருமக்கள் இம்மலரை நுகர்ந்து இறையருள் பெற அவனது மலர்களிற் சமர்ப்பிக்கின்றோம்.

**- மலர்க் குழுவினர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகசபை உறுப்பினர்களும் திருவிழா உபயம் செய்யும் நிர்வாகசபை உறுப்பினர்களும்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திரு. சரவணபவான் ஸ்ரீகௌரிபாலா** |
| செயலாளர் | : | **திரு. செல்லையா செல்வரத்தினம்** |
| பொருளாளர் | : | **திரு. சின்னத்துரை சிவானந்தம்** |
| உபதலைவர் | : | **டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி** |
| | | **திரு. இரத்தினசிங்கம் சரவணபவானந்தன்** |
| உபசெயலாளர் | : | **திரு. சுந்தரம்பிள்ளை வரதராசா** |

நிர்வாக உறுப்பினர்கள் :

**திரு. ஞா. செல்வரத்தினம்** (கிராம சேவையாளர்)
**திரு. ஞா. அந்தோனிப்பிள்ளை** (சமாதான நீதிபதி)
**திரு. இ. முருகேசு**
**திரு. சி. முருகேசு**
**திரு. அ. விசுவலிங்கம்**
**திரு. விகிர்தன்** (பொறியியலளார், நீர்ப்பாசனத் திணைக்களம்)
**திரு. என். சுதாகரன்** (பிரதிப்பணிப்பாளர், நீர்ப்பாசனத்திணைக்களம்)
**திரு. யோ. தயேந்திரன்**
**திரு. அ. சுப்பிரமணியம்**
**திரு. வ. மு. தவராசா**
**திரு. கா. இரத்தினம்**
**திரு. த. தங்கராசா**
**திரு. ஐ. வீரய்யா** (அருச்சுனன்)
**திரு. க. கடம்பசீலன்** (பொறியியலாளர்)
**திரு. சு. ஏகாம்பரம்**
**திரு. சு. சுப்பிரமணியம்**
**திரு. சு. சோமசேகரம்பிள்ளை**
**திரு. கோ. பத்மநாதன்**
**திரு. இ. செல்வராசா**
**திரு. பொ. விசுவலிங்கம்** (பிள்ளையார்)
**திரு. சி. சிவகுமார்** (குரு பல்பொருள் வாணிபம்)
**திரு. மு. சிவநேசன்**
**திரு. சிவசுதன்** (தும்பிக்கையான் பல்பொருள் வாணிபம்,
பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு
ப.நோ.கூ. சங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பணி சபை உறுப்பினர்கள்

தலைவர் : திரு. சரவணபவான் ஸ்ரீகௌரிபாலா

செயலாளர் : திரு. செல்லையா செல்வரத்தினம்

பொருளாளர் : திரு. சின்னத்துரை சிவானந்தம்

நிர்வாகசபை உறுப்பினர்கள் :

திரு. மு. சிவனேசன்

திரு. வ. மு. தவராசா

திரு. சு. தர்மலிங்கம்

திரு. கு. இராமச்சந்திரன்

## தேர்த்திருப்பணிச் சபை

தலைவர் : திரு. க. கடம்பசீலன்

பொருளாளர் : திரு. சின்னத்துரை சிவானந்தம்

உபதலைவர் : திரு. ச. ஸ்ரீகௌரிபாலா

நிர்வாக உறுப்பினர்கள் :

திரு. சி. விஜேந்திரன்

திரு. கு. இராசேந்திரம்

திரு. சி.. சுப்பிரமணியம்

திரு. செ. நவரத்தினம்

திரு. ஐ. வீரய்யா (அருச்சுனன்)

திரு. யோ. தயேந்திரன்

திரு. வ. கருணாநிதி

திரு. அ. சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மலர்க்குழு உறுப்பினர்கள்

**திருமதி செல்வராணி. சோமசேகரம்பிள்ளை**
(கிளி மாவட்ட சைவமங்கையர் கழகச் செயலாளர்)

**திரு. தாயுமானவர் நிகேதன்**
(கிளி. வலயக் கல்விப் பணிமனை
ஆசிரிய ஆலோசகர்)

**திரு. செல்வநாயகம் சிவஞானம்**
(இந்துநாகரிக ஆசிரியர், கிளி. மத்திய வித்தியாலயம்)

**திரு. மார்க்கண்டு சந்திரகுமார்**
(கிளி மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர்)

**சைவப்புலவர் கு. றஜீபன்**
(கரைச்சி பிரதேச செயலகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கந்தரலங்காரம்

பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவிடேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மான்திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளென்றன் கையதுவே.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர் வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## பிள்ளையார் வணக்கம்

உச்சியின் மகுடமின்ன ஒளிதரு நுதலினோட
வச்சிர மருப்பினொற்றை மணிகள் கிம்புரி வழங்க
மெய்ச் செவி கவரிதுங்க வேழமாமுகங்கொண்டுற்ற
கச்சியின் விகடசக்கர கணபதிக் கன்பு செய்வோம்.

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சந்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதமானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்



## முருகன் துதி


சண்முகக் கடவுள் போற்றி
சரவணத் துதித்தாய் போற்றி
கண்மணி முருகா போற்றி
கார்த்திகை பால போற்றி
தண்மலர் கடப்ப மாலை
தாங்கிய தோளா போற்றி
விண்மகு வதன வள்ளி
வேலவா போற்றி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்.....


| | பக்கம் |
|---|---|
| ஆசியுரைகள் | viii - xiii |
| வாழ்த்துரைகள் | xiv - xxxiii |
| விடயங்கள் | |
| உள்ளமெனும் கோயிலிலே | 01 - 03 |
| அருள்மிகு கிளிநகர் கந்தசுவாமி கோவில் வரலாறும் வழிபாட்டுமுறைகளும் | 04 - 05 |
| திருக்கோயில் வழிபாட்டில் மூர்த்தி தல தீர்த்த மரபு | 06 - 08 |
| கிளிநொச்சியின் பண்பாட்டுத் தொன்மையும் தொல்லியல் மூலகங்களும் | 09 - 14 |
| சாங்கியத்தின் நுண்ணுடன் பற்றிய கொள்கையும் சைவசித்தாந்தத்தின் கருத்து நிலையும் | 15 - 16 |
| அருள்மிகு கிளிநொச்சி முருகன் ஆலயம் | 17 - 20 |
| நாட்டுப்புற வழிபாடு | 21 - 25 |
| கந்தசஷ்டியின் மகிமை | 26 - 27 |
| சிந்தை குளிர்ந்திட நல்லருள் தருவான் முருகன் | 28 |
| மகாசிவராத்திரி மகிமை | 29 - 30 |
| சுவாமி விவேகானந்தர் | 31 - 36 |
| கும்பாபிஷேக மகிமை | 37 - 43 |
| அருகிவரும் சமய விழுமியங்களைப் பேணுவதில் இளைஞர்களின் பங்கு | 44 - 45 |
| சைவசமயமும் தமிழர் வாழ்வும் | 46 - 48 |
| ஈழத்தில் முருக வழிபாடு | 49 - 50 |
| வாழ்த்துப்பா | 51 |
| கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான திருவூஞ்சல், திருப்புகழ் | 52 - 54 |
| நன்றியுரை | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிள்ளையார் ஆலயத்தின் தோற்றம்



நடராஜப்பெருமான் சந்நிதியின் தோற்றம்



தெட்சணாமூர்த்தி சந்நிதியின் அழகிய தோற்றம்



சண்டேஸ்வர மூர்த்தி சந்நிதியின் அழகிய தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறுமுகசாமியின் அழகிய தோற்றம்



வைரவர் சந்நிதியின் தோற்றம்



வசந்தமண்டபத்தின் அழகிய தோற்றம்



கருவறை மண்டபம், கொடித்தம்பம் ஆகியவற்றின் அழகிய தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

## தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார்
## கிரியாதத்வநிதி
## சிவஸ்ரீ கு. இரத்தினேஸ்வரக் குருக்கள்
### வழங்கிய
# ஆசியுரை

கலியுகவரதனாம் கந்தவேற்பரமன் வள்ளிமணவாளன் வண்ணமயிலேறும் வடிவழகன் கிளிநொச்சி அருட்திருமுருகன் சந்நிதானத்தில் இவ்வாண்டு நடைபெறும் திருக்குடத் திருமஞ்சனப் பெருவிழாவைக்காண நாம் எல்லோரும் பூர்வஜென்ம பாக்கியம் பெற்றவர்களே!

பல்லாண்டு காலமாக இந்துக்களின் இதயத்தில் மனோலயமாக இருக்கும் கிளிநொச்சி அருட்திருமுருகன் சகல மக்களும் உயிரினங்களும் சீரும் சிறப்புமாக இப்புவியில் வாழவும் கல்வியிற் சிறந்தவர்களாகவும் அன்பும் பண்பும் கொண்டவர் களாகவும் வாழ அருள்புரிந்து வருகின்றார்.

இவ்வாலயத்தில் நிகழும் பிரதிஷ்டை நித்திய பூஜை, மகோற்சவம் ஏனைய விழாக்கள் அனைத்தும் சிவாகம மரபிலும் அவை கூறும் பிரமாணங்களுக்கேற்ப வழிகாட்டல் நூல்களாகிய பத்ததிகளை கொண்டும் குருபரம்பரையாக உபதேசிக்கப்பட்ட நிலையிலும் நடாத்தப்பட்டு வருகின்றது. மேலும் 2005ஆம் ஆண்டு முதல் உலக அமைதிக்காகவும் அனைத்து மக்களின் சுபீட்சத்திற்காகவும் இறைவனைப் பிரார்த்திப்பதுடன் ஒவ்வோர் மனிதரின் உள்ளத்திலும் புதைந்து கிடக்கும் ஆன்மீக சக்திகளை வெளிக்கொணரும் நோக்குடனும் சுயநலச் சிந்தனைகளை அகற்றி சத்தியத்தின் பாதையில் ஏறுநடைபோடவும் மனிதப் பிறவியின் உண்மையான பயனை இயன்றவரை அடைந்துகொள்ளவும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் அதிகாலையில் ஆன்மீக வழிபாடு நடைபெற்று வருகின்றது.

எமது ஆலயத்தின் பாரிய புனருத்தாபன வேலைகளைப் பூர்த்தி செய்து விழாக்கள் சமய நிகழ்வுகள் யாவும் சிறப்புற நடைபெற இறைபணியாற்றிய ஆலய பரிபாலன சபையினருக்கும் அனைத்து உதவிகளும் புரிந்த மக்களுக்கும் கந்தவேற் பரமன் அருளாசி கிட்டுமென நம்பிக்கை கொண்டுள்ளதுடன் முருகன் திருவருளால் எதிர்காலத்தில் எடுக்கப்படவிருக்கும் திருப்பணி வேலைகளும் சமுதாய சேவைகளும் சிறப்புற நடைபெற திருமுருகன் திருவடி பணிந்து நல்லாசி கூறுகின்றேன்.

"ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே"

**சிவஸ்ரீ. இரத்தினேஸ்வரக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

மகாதேவா ஆச்சிரமம், ஜெயந்திநகர், கிளிநொச்சி

# கணேசானந்தா மகாதேவ சுவாமிகள்

வழங்கிய

# ஆசியுரை

*முருகனே செந்தி முதல்வனே மாயோன் மருகனே*
*ஈசன் மகனே ஒருகை முகன் தம்பியே*
*உன்னுடைய தன்டைக்கால் எப்பொழுதும்*
*நம்பியே கைதொழுவேன் யான்.*

கலியுகவரதனாம் கந்தக் கடவுள் கலியுக காலத்தில் சிவபரம்பொருளே கந்தக் கடவுளாக வந்துதித்தவர். கந்தக் கடவுளை வணங்குபவர்க்கு சிவபரம்பொருள்ளை வணங்கிய பெறுபேறு கிடைக்கும். இது சிவபெருமானுடைய வாக்கு. இது கந்தபுராணத்தில் சிவபெருமான் கொடுத்த வாக்கு. கிரேதாயுகத்திலும் சண்டை நடந்தது. திரேக யுகத்திலும் சண்டை நடந்தது. கலியுக யுகத்திலும் சண்டை நடந்துகொண்டிருக்கின்றது. ஆகவே நாங்கள் எதற்கும் அஞ்சக்கூடாது. எம்பெருமானுடைய பணியைச் செய்யச் செய்ய உள்ளம் பரிசுத்தமாகும்.

எம்பெருமானுடைய நாமத்தை சொல்லச்சொல்ல வாக்கும் மனமும் பரிசுத்தமாகும். எல்லாம் எப்பொழுதோ முடிந்த காரியம் என்னும் வாக்கியத்தை தவத்திரு செல்லப்பா சுவாமிகள் சிவயோக சுவாமிகளுக்கு உபதேசம் செய்தார். எனவே அஞ்சுவதும் இல்லை. அஞ்சவருவதும் இல்லை என்று அப்பர் சுவாமிகள் திருமுறையில் எடுத்துக்கூறியிருக்கிறார்.

பட்டத்து யானை விழுந்து வணங்கியது முருகப் பெருமானை போற்றி வணங்கிப் பிரார்த்தனை செய்து தேவர்கள் உய்வு பெற்றார்கள்.

*நன்னிர்க்னியாய் ஓலம்*
*ஞானநாயகனே ஓலம்*
*பண்ணவர் நிரையே ஓலம்*
*பரஞ்சுடர் முதலே ஓலம்*
*கண்ணுதல் பெருமான் நல்கும்*
*கடவுளே ஓலம் ஓலம்*

கந்தபுராணத்திலே தேவர்கள் அடைக்கலம் அடைக்கலமென முருகப் பெருமானை வணங்குகிறார்கள். முருகப் பெருமானை பிரார்த்தித்து தவமிருந்து எத்தனையோ அடியார்கள் தாங்கள் வேண்டிய பிரார்த்தனைகளையும் வரத்தையும் வேண்டியுள்ளார்கள். முறையே கதிர்காமம், செல்வச்சந்நிதி, நல்லூர் முருகன் இவர்களுடைய அற்புதம் அளப்பரியது. செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் தவமிருந்த இடம் நல்லூர். சகல மக்களின் தேவைகளை உணர்ந்து கலியுகவரதனாம் முருகப்பெருமான் வேண்டுதலை ஈந்தளிக்கின்றார்.

கந்தர் அலங்காலம், கந்தரனுபூதி, கந்தர் கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை இவற்றைப் பொருள் உணர்ந்து பாராயணம் பண்ணினால் நினைத்த பலனும் கிடைக்கும். முத்திப் பேறும் கிடைக்கும். மனிதப் பிறவியின் பலனை எளிதிற் கிடைப்பதாக.

**கணேசானந்த மகாதேவ சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

வழங்கிய



# அருளாசிச் செய்தி

**முருகனடியார்களுக்கு,**

கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்டகாலமாக எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் முருகப் பெருமானுக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றோம். வன்னி நிலப்பரப்பில் நடுநாயகமாக விளங்கும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் சைவத்தமிழ் மக்களை நிறைவாகக் கொண்ட இவ்விடத்தில் உள்ள ஆலயங்களில் தனக்கென தனிஇடம் வகித்துக்கொண்டு ஆன்மீக வளர்ச்சிக்கு நீண்டகாலமாக இவ்வாலயம் முருகனுடைய திருவருளை அனைவருக்கும் நிறைவாக வழங்கும் ஆலயமாக விளங்குகின்றது. இவ்வாலயம் எல்லா மத மக்களுக்கும் வழிபாட்டு இடமாக விளங்குகின்றது சிறப்பானதாகும்.

வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு கலியுகவரதனாம் முருகப்பெருமான் இவ்வாலயத்தில் எழுந்தருளி அருள்புரிகின்றார். பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் இவ்வாலயத்தில் நடைபெறுவது வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் அனைவருக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். மனிதனை மனிதனாக வாழ வைப்பது ஆலய வழிபாடு. இதனை அடிப்படையாகக் கொண்டே நம் சமயத்தில் "நித்தலும் எம்பெருமான் கோயில் புக்கு" என்றும், "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் நம் சமயம் போதிக்கின்றது.

இதனை நம் சமய மக்களுக்கு உணர்த்தும் வகையில் ஆலயம் அமைத்து வழிபடுவது பெருமைக்குரியதாகும். இன்று இங்கு நடைபெறும் கும்பாபிஷேகத்தை நிதர்சனமாக்கும் பொருட்டு மலர் வெளியிடுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இப்புனிதப் பணியை செய்யும் ஆலய பரிபாலன சபையினருக்கும், இங்குவாழ் மக்களுக்கும் திருவருள் கிடைப்பதாக. அனைவரும் முருகனை வழிபாடு செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக! "என்றும் வேண்டும் இன்ப அன்பு.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய**
**ஞானசம்பந்த பரமசாரிய சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

"கிரியா பூசணம்", கிரியாசிரோண்மணி", வேதாகம கிரியா ஜோதி"
"சிவாச்சாரியார் திலகம்"

## சிவஸ்ரீ. ஜெக. ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்கள்

(பிரதமகுரு, ஸ்ரீ முருகன் தேவஸ்தானம், குமரபுரம், பரந்தன்)

வழங்கிய

# அருளாசிச் செய்தி

மனித நம்பிக்கைக்கு ஆதாரம் தெய்வ நம்பிக்கை, தெய்வ நம்பிக்கையை ஏற்படுத்துவது ஆலயங்கள். இவை எமக்கு இறைவனை நினைவுபடுத்த ஏற்பட்டவை ஆகும்.

ஆலயங்கள் நமது பண்பாட்டின் உயிர்நாடியாக இருந்து வருகின்றன. எனவேதான் "ஆலயம் தொழுவது சநாலவும் நன்று" என்கின்றோம்.

சிவபூமி என திருமூலரால் அழைக்கப்பட்ட இலங்கைத் திருநாட்டின் கண் அமைந்து நீர்வளமும், நிலவளமும் பொலிந்து சைவமும், தமிழும் சிறந்து விளங்கும் வன்னி வள நாட்டின் கிளிநொச்சி மாநகரில் இந்துக்கள் பெருமை கொள்ளும் வகையில் அருள்மிகு கந்தசுவாமிப் பெருமானின் நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் 24-01-2011 அன்றை சுபமுகூர்த்த வேளையில் ஆசி கூறுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கிளிநொச்சி மக்கள் செய்த பெரும்பேறு காரணமாக இத்திருக்குடமுழுக்கை கண்டு களித்துள்ளார்கள்.

இடப்பெயர்வுகளையும் இன்னல்களும் நிறைந்த எமது வாழ்வின் துயர்களை துடைத்து எம்பெருமாக் கிருபாகடாட்சமும் பெற வாழ்வை இறை அர்ப்பணிப்புடன் வாழ்ந்தால் எம்பெருமான வாழ்விப்பான், ஈற்றில் முக்தியும் தருவான்.

இக்குடமுழுக்கு திருநாளில் நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலைத்து சைவமும் தமிழும் ஓங்க எல்லாம் வல்ல முரகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து நல் ஆசி வழங்குகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.


(சுபமஸ்து)

**சிவஸ்ரீ. ஜெக. ஜெகதீஸ்வரக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர்

## செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

அருள்நிறைந்த கிளிநொச்சி கந்தசாமி பெருமான் திருக்கோயில் சிறப்பு பெருமைக்குரியது. யோகர் சுவாமிகள் முதல் பல சித்தர்களின் நடமாட்டத்தால் மேன்மைபெற்ற திருக்கோவில். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்த விவசாயிகளின் காணிக்கையில் எழுந்த கோவில். அல்லும் பகலும் ஆயிரமாயிரம் அடியார் பெருவீதியில் கைகூப்பி வணங்கும் கோவில்.

இத்திருக்கோவில் போரின் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு மீளவும் அடியார்கள் கட்டியெழுப்பி இருப்பது அறிந்து ஆனந்தம் அடைகிறேன். வன்னி பெருநிலப்பரப்பில் வளமுடன் மக்கள் வாழ வழிகாட்டிய தெய்வீகத் திருக்கோவிலை பாதுகாக்க வேண்டியது எம் கடனாகும். இத்திருக்கோவில்ச் சூழலை மீளவும் அருள்நிறைந்த ஆன்மீக நிழலாக மாற்றும் பணியில் ஆலய நிர்வாகசபை ஆற்றிவரும் பங்களிப்பு மெச்சத்தக்கது.


கந்தப் பெருமானின் மஹாகும்பாபிஷேக விழாவோடு அல்லற்படும் மக்கள் ஆறுதலடைய வேண்டி, நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் சமர்ப்பித்து அமைகிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரைதானே"

**ஆறு. திருமுருகன்**
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

"கிரியா ரத்னம்" "கிரியா சிரோன்மணி"
"கிரியா வித்தகர்"

## சிவஸ்ரீ. ஜெ. ஜெயந்தக் குருக்கள் அவர்கள்

(உதவிக்குரு, அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம், கிளிநொச்சி)

வழங்கிய

# அருளாசிச் செய்தி

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழிக்கிணங்க கிளிநொச்சி மாநகரின் மத்தியில் கோயில் கொண்டு அடியார்கட்கு அருள்பாலித்துவரும் முருகப்பெருமானின் குடமுழுக்கு காணக்கண் கோடி வேண்டும்.

இம் மஹா கும்பாபிஷேக வேளையில் ஆசி கூறுவதில் நான் மிகுந்த பெருமையும், சந்தோசமும் அடைகின்றேன்.

ஆலய வழிபாடு, தொண்டுகள், கோபுர தரிசனம் இவை மக்கள் இன்புற்றிருக்க சிறந்த வழிமுறைகள் எனலாம்.

வளங்களும், வனப்பும் நிறைந்த கிளிநொச்சி நகரின் புகழ்பூத்த முருகப் பெருமான் அடியவருடன் அடியராக துன்பங்களையும், துயரங்களையும் சுமந்து இன்று குடமுழுக்கு பெற்று அடியார்களின் துயர் தீர்க்கின்றார்.

தமிழர் வாழ்வில் நிலவிவந்த இன்னல்கள் அனைத்தும் விலகி ஆனந்தமான வாழ்வு பெறவும் இப்பெருவிழாவினால் சாந்தியும் ஐக்கியமும் நிலைத்திட எல்லாம் வல்ல முருகப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து எனது நல் ஆசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"இன்பே சூழ்க எல்லோரும் வாழ்க"

(சுபமஸ்து)

**ஜெ. ஜெயந்தக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலய பரிபாலன சபைத் தலைவரும்
ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர்களும்



ஆலய பரிபாலன சபையினரும்
ஆலய உதவி அர்ச்சகர் பிரம்மஸ்ரீ ஜெ.ஜெகதீபனசர்மாவும்



ஆலய பரிபாலன சபையினரும்
ஆலய தொண்டர் சபை மாணவர்களும்



கும்பாபிஷேக கிரியைகளின் போது
துவஜா ஆரோகணம் (கொடியேற்ற நிகழ்வு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்
# சாந்தி நாவுக்கரசன் அவர்கள்
வழங்கிய
# வாழ்த்துச்செய்தி

சைவசமயத்தின் உயர்தத்துவப் பொருளாகவும், அதோமுகச் சிவனாகவும் முருகப் பெருமான் கொள்ளப்படுகிறார். அத்தகைய முருகனை மக்கள் வழிபாடு செய்யும் வழக்கம் மிகத் தொன்மையானதாகும். இலங்கையிலும் முருக வழிபாடு தொன்மை நிறைந்ததாகவும் வரலாற்றுக் கதைகளுடன் தொடர்புடையதாகவும் காணப்படுகின்றது. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் பழம்பெரும் ஆலயங்களில் ஒன்றாக அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் விளங்குகின்றது. இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு எதிர்வரும் 24ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். அவ்விழாவிற்கும் அதனை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மக்கள் ஆன்மீகத் தத்துவங்களைப் புரிந்து வாழவும், பாரம்பரிய பண்பாட்டு மரபுகளைப் பேணும் இடமாகவும் ஆலயங்கள் விளங்குகின்றன. இதன் மூலமாக எமது இளம் சந்ததியினரிடையே சமய கலை, கலாசார விழுமியங்களைப் பரவச் செய்கின்றன. இத்தகைய உயர் பணிகளைச் செய்யும் ஆலயங்கள் புனரமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்து பராமரிக்கப்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

அந்த வகையில் கிளிநொச்சி அருள்மிகு கந்தசுாவமி தேவஸ்தானத்தின் கும்பாபிஷேகத்தினைச் சிறப்பாக நடாத்தவுள்ள பிரதம குருவுக்கும் ஏனைய ஆச்சாரிய பெருமக்களுக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். மேலும் கும்பாபிஷேகம் சிறந்த முறையில் நடைபெறுவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் பொறுப்புடன் மேற்கொண்டுள்ள ஆலய பரிபாலன சபையினருக்கும் எனது நல்வாழ்த்துக்கள் உரியதாகும். எல்லாம் வல்ல முருகப் பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன்**

இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்,
காலிவீதி,
கொழும்பு - 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருநெறிக் கழகத் தலைவர்
# திரு. வே. மகாலிங்கம் அவர்கள்
### வழங்கிய
# வாழ்த்துச்செய்தி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

அகிலத்திலே வாழுகின்ற மக்கள் சீரிய ஒழுக்கமான பண்பான நற்குணவியல்புகளைக் கொண்டவர்களாக வாழவேண்டியது அவசியமாகும். எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழவேண்டும். தனது குடும்பம், அயல், கிராமம், ஊர், தேசம் என்ற விரிந்த மனப்பாங்குடன் நாமும் நல்லாழ்வு வாழ்ந்து மற்றவர்களும் வாழவேண்டும் என்கின்ற மனப்பாங்குடன் வாழவேண்டும். இளம் சந்ததியின் மனதிலே சமய வாழ்வு, அதாவது சீரிய வாழ்வு வாழவேண்டும் என்கின்ற உளப்பாங்கை பிஞ்சிலேயே உருவாக்க வேண்டும். இதற்கு உற்ற பருவம் மாணவப் பருவம். கிளிநொச்சி மாவட்டத்தின் திருநெறிக்கழகம் 1952ஆம் ஆண்டு பெரியார் அமரர் திரு. த. நல்லதம்பி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு பஜனை, சமயப் பிரசங்கம், மாணவர்களுக்கான சைவசமயப் பரீட்சை. பண்ணிசைப்போட்டி போன்றவற்றை நடாத்தி இளம் உள்ளங்களில் பதியவைக்க வேண்டுமென்னும் பெருவிருப்போடு செயற்பட்டு வருகின்றது. எமது நாட்டுச் சூழல் பல முட்டுக்கட்டைகளைப் போட்டபோதும் யாம் தளர்வடையவில்லை. "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" சிந்தனை மேலானதாக எப்பொழுது எவருக்கும் இருக்க வேண்டியதவசியமானதாகும்.

கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தானத்தை மக்களைக் கொண்ட சபை மூலம் வளர்ச்சியடையச் செய்வதற்கு கால்கோள் வகுத்தது திருநெறிக்கழகம் என்பதை இந்நேரத்தில் சிந்தை கொள்வோமாக. காலத்திற்கு காலம் அழிவினைச் சந்தித்த இவ்வாலயம் அழகோடும் அருளோடும் எழுந்து நிற்பதற்கு ஆலய பரிபாலன சபையினரின் அயராத முயற்சியேயாகும். எதிர்காலத்தில் செய்யப்படவேண்டிய கோபுரம், சித்திரத்தேர், தீர்த்தம், விருட்சம் போன்றவற்றை நிறைவுசெய்யவும் சபை திடசங்கற்பம் பூண்டுள்ளது. இவை நிறைவேற அருளுடைய உள்ளங்களின் உதவிக்கரம் நீளவும்.

"காதற்ற ஊசியும் வராதுகாண் கடை வழிக்கே"

இஃது யாவர்க்கும் புரிந்ததொன்றாகும். இருந்தபோதிலும் ஆன்மாவைப் பீடித்துள்ள மும்மலங்கள் நற்பணி செய்யும் உளப்பாங்கினை திரையிட்டு விடுகின்றது. மெய்ஞானத்தாற் திரையை விலக்கி நற்பணி புரியும் உள்ளங்கள் பல என்றும் இவ்வுலகில் இருக்கத்தான் செய்கின்றது. சிவபெருமானின் திருவடியை அடைதற்குரிய நான்கு மார்க்கங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிமுறையைக் கைக்கொண்டு முறையே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் இறைபதம் அடைந்தனர். இவ்வழிகாட்டிகளின் குருபூசைத் தினங்களை ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் கொண்டாடுவது அவசியம். இதனை எமது கழகம் நடைமுறைப்படுத்தி வந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட முருகனின் ஆலயம் இதுவேயாகும். பரிபாலன சபையினர் அவனருளாலே சிதைவடைந்த ஆலயத்தை புதுக்கி சித்திர வேலைப்பாடுகளால் மக்களின் மனதிலே இறையுணர்வை ஊட்டியுள்ளனர். இன்று கையறு நிலையில் வாழும் மக்களின் தண்ணளியுடன் கூடிய உதவியினாற் திருப்பணியை நிறைவுசெய்து 24-01-2011இல் பெருஞ்சாந்தி என்னும் குடமுழுக்கை நிறைவடையச் செய்துள்ளனர். ஆலய வழிபாடு ஆன்மீக வீடுபேற்றிற்கு முக்கியமானதாகும். இதற்கான முழு முயற்சியை மேற்கொண்டு நிறைவடையச் செய்த பரிபாலன சபையினருக்கும், உதவிகள் புரிந்த இறையன்பர்களுக்கும், வழிபாடியற்றும் அடியார்களுக்கும் எல்லாம் வல்ல கந்தப் பெருமானின் அருள் கிடைக்க வாழத்தி நிற்கின்றேன்.

சாந்தி சாந்தி!! சாந்தி!!

**வே. மகாலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களின் பிராந்திய ஆணையாளர்

# திரு. தி. இராசநாயகம் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமைந்த கிளிநொச்சிப் பகுதியினிலே வீற்றிருக்கும் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெறவுள்ள பெருஞ்சாந்தி (குடமுழுக்கு) நிகழ்வையொட்டி வெளியீடு செய்யப்படவுள்ள மகாகும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துரை வழங்குவதிற் பேருவுகையடைகின்றேன். கலியுக தெய்வமாம் கந்தக் கடவுள் தேவர்கள் துயர் துடைக்க சூரனைச் சங்காரம் செய்வதற்காகத் திருவவதாரஞ் செய்தார். ஆன்மாவைப் பீடித்துள்ள ஆணவம், கா்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அழித்தாற்றான் இறைவன் எனும் சற்சமுத்திரத்துட் கலக்கமுடியும் என்பதை யாம் உணர வேண்டும். மானிடப்பிறவி கிடைத்தற்கரிய பிறவியாகும். இதனைப் பெற்ற யாம் தனக்காக வாழாது பிறருக்காக வாழப்பழக வேண்டும். 1948ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆலயம் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள முருக தலங்களுட் சிறப்பு வாய்ந்ததாகும். நகரின் மத்தியிலே இருந்து வள்ளி தெய்வானை சமேதரராக முருகப் பெருமான் எழுந்தருளி அருளாட்சி செய்து வருகின்றார்.

"குடமுழுக்குக் காணாது போதியோ பூம்பாவாய்" என்ற சம்பந்தரின் அருள் வாக்கிலிருந்து மகா சாந்திப் பெருவிழாவின் சிறப்பினை யாம் உணர்ந்து கொள்ளலாம்.

பிரதமையில் சிவபெருமானது நெற்றியில் இருந்து தெறித்த பொறிகளாறும் சரவணப்பொய்கையில் ஆறுருக்களாகி கிருத்திகைமுதலுறுவரும் பாலூட்ட வளர்ந்து உமாதேவியார் அணைத்தெடுக்க ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கைகளுமுடைய ஒருருவாய் எழுந்தருளிய நாளாகிய இந்த ஷஷ்டி நாளினை இவ்வாலயத்தினர் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

"மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுகு உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தில்
வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந்தருளினானே"

ஆறுமுகனின் குடமுழுக்குக் காட்சி காண்பதற்கரிய காட்சியாகும். பூர்வீகத்திலே புண்ணியஞ் செய்தவர்கட்கே குடமுழுக்கினைக் காணும் பாக்கியம் கிட்டும். கிளிநொச்சி மாவட்ட மக்கள் இப்பெருஞ்சாந்தி விழாவைக் கண்டு பெரும் பேறெய்த வேண்டுமென்னும் உளங்கொண்டு பெருமுயற்சியால் இக்குடமுழுக்கை நடாத்தும் ஆலய பரிபாலன சபையினர் போற்றுதற்குரியவர்கள் ஆவர்.

நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதத்தினாற் சேதமடைந்திருந்த இவ்வாலயத்தினை ஆகம விதிமுறைகளிற்கமைய பாலாயம் (பாலத்தாபனம்) செய்து ஆலயத் திருப்பணிகளைச் சீராக நிறைவு செய்ய அருளாளர்களின் நன்கொடைகளைப் பெற்று பெருமுழுக்கை நடாத்திக் கொண்டிருக்கின்றனர். இவ்விழாவில் வேதம் ஓதி மந்திர உச்சாடனத்தினால் மூர்த்திக்கு கீர்த்தியை ஏற்படுத்திய அந்தணப் பெருமக்கள் வணக்கத்திற்குரியவர்களாவர். குடமுழுக்கைக் காணும் பாக்கியம் பெற்ற மக்கள் முருகனருள் பெற்று பிறவிப்பிணி நீங்கி சகல சௌபாக்கியங்களும் பெற்று மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றேன்.


இறையாசி எங்கும் நிலவுக.

**தி.இராசநாயகம்**
வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்

# திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

கிளிநொச்சி நகரின் பொலிவிற்கு மெருகூட்டுவதே கந்தசுவாமி கோவில்தான். இக்கோவில் பல வருடங்களாக நிலைத்து நிற்பதே கந்தன் அருளாற்றான் என்றால் அது மிகையாகாது. ஒரு காலத்தில் திருவிழாக்கள் புதுப்பொலிவுடன் ஆரம்பித்தவுடன் மக்கள் பக்திப் பரவசத்துடன் கந்தனை வந்து வணங்கிச் செல்வார்கள். மீண்டும் அந்தநிலை வரவேண்டும். மக்களுக்கு ஏற்பட்ட துன்ப துயரங்கள் ஏராளம். இனிவரும் காலங்களில் மக்கள் நிம்மதிப் பொருமூச்சுவிட்டு பட்ட கஷ்ரங்கள் எல்லாவற்றையும் ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு கந்தன் அருளால் அமைதி பெறவேண்டும்.

கிளிநொச்சி மண்ணிற்கு மீண்டும்வந்து தனக்கு ஒரு செய்தி எழுத என்னைப் பணித்த கந்தனின் கருணையை எண்ணி நான் பூரிப்படைகின்றேன். அதேநேரத்தில் எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாய் நிற்கும் எம்மக்களுக்கு இனிமேல் கந்தனின் அருள் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டும். அதற்கு அவன் அருள்வேண்டி அனைவரும் துதிப்போம். எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலின் பரிபாலனசபையினர் இப்பணியை செய்ய முன்வந்துள்ளமைக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவிப்பதோடு அவர்களுக்கு எல்லாம் வல்ல கிளிநொச்சிக் கந்தனின் அருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

**வீ. ஆனந்தசங்கரி**
தலைவர்
தமிழர் விடுதலைக் கூட்டணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

## திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

நீர்வளமும், நிலவளமும் கொண்ட இயற்கை எழில்கொஞ்சும் ஈழமணித் திருநாட்டின் தட்சணகைலாயம் எனப் போற்றப்படுகின்ற வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் நகரமத்தியில் இருந்து வரும் அடியவர்களுக்கு அருள் பாலித்து வரும் ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்விற்கு ஆசிச்செய்தி வழங்க வாய்ப்புக் கிடைத்தமைக்கு பெருமானின் பெரும் கருணையைப் போற்றுகின்றேன்.

இவ்வாலயம் பலநெடும் காலமாக இந் நகர மத்தியில் அருளாட்சி புரிகின்ற தன்மை எல்லோரும் அறிந்த விடயம். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைக்கு பின்பும் மீண்டும் புதுப்பொலிவுடன் கிளிநொச்சி சைவமக்கள் இவ் ஆலயத்தில் ஊர்கூடி மீண்டும் பொழிவுடன் இப்பெரு விழாவை நடத்துகின்றனர்.

இவ்வாலயத்தில் வருடாவருடம் நடைபெறும் திருவிழாவும் அத்தோடு கந்தசஷ்டி விரதமிருந்து அடியார்கள் தங்கி நின்று விரதக் கடனை நிறைவேற்றி இறுதிநாள் நிகழ்வில் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி நடத்துகின்ற விழா சிறப்பு வாய்ந்தது.

அத்துடன் நின்றுவிடாது அருள்பணியுடன் அறப்பணியும் செய்துவருகின்ற இப்பிரதேச சைவக்குடிமக்கள் இவ்ஆலயத்தின் திருவிழா விஷேட காலங்களில் அன்னதானப் பணியுஞ் செய்து வருகின்றனர்.

**"விழிக்குத் துணைநின் திருமென்மலர்ப் பாதங்கள்"**

என்ற கந்தரலங்காரப் பாடல் அடிகளுக்கு அமைய எல்லோரும் அற்புதமாக தாம் வேண்டிவரும் வரங்களை வாரி வழங்கிவரும் சிவசுப்பிரமணிய பெருமானின் அருளாட்சி எல்லா அடியார்களுக்கும் கிடைக்க வேண்டி பாதாரவிந்தங்களை வேண்டிக்கொள்கின்றேன்.


பலாலி றோட்,
யாழ்ப்பாணம்.

**திருமதி விஜயகலா மகேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்

## கௌரவ. சிவஞானம் சிறிதரன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

## ஆசுவாசப்படுத்தும் ஆதாரசுருதி

எழில்வளம் நிறைந்த வன்னியெம்பதியின் கிளிநொச்சி மருதநிலத்தில் எழுந்தருளி எட்டுத்திக்கும் அருள்பாலித்துத் தேவசேனாதிபதியாய் திகழும் முருகப்பெருமான் கும்பாபிஷேகம் காண்பது எண்ணி நான் ஆனந்தம் அடைகிறேன். தமிழ்க்கடவுளாய் தமிழர்தம் பாரம்பரியத்தோடு கலந்துவரும் பக்திப்பெருங்கடலின் சிறப்புக்கு கிளிநொச்சி அருள்மிகு கந்தன் ஆலயத்தின் வரலாறும் வானளாவியது. போரில் பல்வேறு காலச்சுழல் எம்பெருமானின் தேவஸ்தானம் சிதிலப்பட்டும் அவனருளின் மேன்மையில் மீண்டும் மீண்டும் எழுந்து நின்று மாந்தரை ஆசுவாசப்படுத்தும் ஆதாரசுருதியை நான் அனுபவித்து வந்துள்ளேன்.

முருகப்பெருமானின் திருவடியில் இருந்துவிரிந்த தமிழும் அறமும் தமிழர்தம் பாரம்பரியமும் கட்டிக்காக்கும் சீரிய நெறியும் எங்கும் தழைத்தோங்கவேண்டுமென இக்கும்பாபிஷேக நன்நாளில் நான் அவாவுறுகின்றேன். அதை கிளிநொச்சி கந்தப்பெருமான் கண்ணெதிரே காட்டுவான். எச்சங்களோடு மட்டும் மீண்டுமோர் வாழ்வை சிருஷ்டிக்க எண்ணும் எம்தமிழினத்துக்கு கந்தன் கருணை கிட்டுவதாக. கிளிநொச்சி நகரின் மத்தியில் இருந்து பன்னெடுங்காலம் திரண்டமக்களின் நம்பிக்கையின் அடிநாதமாக காப்பரணாக விளங்கும் கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் சிறப்புற நான் மனதார வாழ்த்துகின்றேன். போரில்வீழ்ந்துபோன எம்தமிழின மாந்தர்தம் உறவுகளின் மனம் திடப்பட்டு வாழ்வின் யதார்த்தத்தின் வழிதெளிந்து புன்னகை பெற்றும் எம் புனித நிலத்தில் மங்காப் புகழ் சமைக்க எம்பெருமானின் அருள்வேண்டுகிறேன்.

நன்றி

இவ்வண்ணம்
**கௌரவ. சிவஞானம் சிறிதரன்,**
பாராளுமன்ற உறுப்பினர்,
தமிழ் தேசிய கூட்டமைப்பு,
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

உதவி அரசாங்க அதிபர்

# திருமதி சுலோஜினி குகன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

மருவும் அடியார் மனதில் விளையாடுபவன் முருகன். அம்முருகனுக்கு ஈழத்தில் அருள் நிறைந்த தலங்கள் பல உள. கிளிமாவட்டத்திலே கந்தசுவாமிக்கு தலைசிறந்த தலமாக விளங்குவது கிளி. அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானமாகும். அடியாருள்ளக் குகையினிலே களி நடனம் புரிவதனாலே குகனெனவும் அழைக்கப்படுகின்றான் என்றும் இளமையுடன் இருப்பதனால் முருகன் எனப்பட்டான். இவன் கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாக விளங்குகின்றான். பொற்புடன் கோயில் கொண்டிருக்கும் சரவணபவனுக்கு இவ்வாலய பரிபாலனசபையினர் பெருஞ்சாந்தி எனப்படும் பெரு முழுக்கினை பெருஞ்சிரமத்தின் மத்தியில் செய்து கொண்டிருப்பது பாராட்டுதற்குரியது. அறப்பணிக்கு அள்ளி வழங்கிய அன்பர்கள் யாவரும் போற்றுதற்குரியவராவர்.

கதிர்காமத்துறை கந்தன் பாடிவீடமைத்து சூரனைச் சங்காரஞ் செய்தார் என்று கூறப்படுகின்றது. ஆன்மாவோடு பின்னிப் பிணைந்திருக்கும் மும்மலத்தையும் வேரறுக்கும் பாவனையே சூரசங்காரமாகும். "அழிவிற்கு முன் அகந்தை" யாம் எமது வாழ்வில் அகங்கார மமகாரங்களை ஒழித்து வித்தாரமும் செருக்குமின்றி வாழவைப்பதற்காகவே சரவணப் பொய்கையிற் சரவணன் அவதரித்தான்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்னும் தெய்வப் புலவரின் கூற்றிற்கமைகய அன்புடையவர்களாகவும் தண்ணளியுடையவர்களாகவும் பண்பு நிறைந்தவர்களாகவும் வாழவேண்டும். "அன்பு செய்தால் அல்லல் தீரும் அல்லல் தீர்ந்தால் அமைதி பெருகும். அமைதி பெருகினால் அதுவே இன்பம்" இப்பூவுலகிலே அரிய மானிடப் பிறவியினைப் பெற்ற யாம் தீய எண்ணங்களை விட்டொழிப்போமாயின் துன்பமற்ற வாழ்வை பெற்று வாழமுடியும்.

கிளி மாவட்டத்தின் பழம்பெரும் ஆலயமாகிய கந்தசுவாமி ஆலயத்தில் நிகழவுள்ள மகாகும்பாபிஷேகத்தையொட்டி வெளியீடு செய்யவுள்ள மலருக்கு வாழ்த்துரை வழங்கச் சந்தர்ப்பத்தை நல்கிய ஆலய பரிபாலன சபையினரும் மாவட்ட மக்களும் அவனருளாலே அவன்தாள் வணங்கி பேரின்ப வாழ்வினை வாழ்த்தி நிற்கின்றேன்.


ஓம் சாந்தி!

**திருமதி சுலோஜினி குகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின்
பிரதித் தலைவருமான

# கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

## கிளிநொச்சியின் வாழ்வோடும் வரலாற்றோடும் இரண்டறக் கலந்தது கிளிநொச்சி கந்தசுவாமி கோவில்.

கிளிநொச்சி நகர மக்களாலும் நகரத்தை அண்டிய பரவிப்பாஞ்சான், கணேசபுரம், திருநகர், ஜெயந்திநகர், மருதநகர், 3ஆம், 4ஆம், 5ஆம் வாய்க்கால், ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளின் மக்களாலும் உருவாக்கப்பட்ட இந்தக் கோவில் இன்று மாவட்டத்தின் முக்கிய ஆலயமாக போற்றப்படுகின்றது.

இந்த ஆலயமானது அனைத்து மக்களையும் ஆன்மீகத் தளத்திலும் சமூக உணர்வுத்தளத்திலும் இணைக்கின்ற ஒரு சிறந்த மையமாகவும் சமூக நிறுவனமாகவும் விளங்குகின்றமை இதன் பெருஞ்சிறப்பாகும்.

குறிப்பாக இந்த ஆலயத்தின் நிர்வாகம் எப்போதும் மக்களின் நலன்சார்ந்த விடயங்களில் அக்கறையோடு செயற்பட்டு வருகின்றமையே இதற்குக் காரணமாகும்.

ஒரு ஆலயமானது தானிருக்கும் சூழலின் மீதும் தனது பிரதேச மக்களுடைய உணர்வுகளின் மீதும் கொண்டுள்ள அக்கறையை இந்த ஆலயம் வெளிப்படுத்தி வருகிறது. இந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் பிரச்சினைகளை அரசாங்கத்துக்கும் ஜனாதிபதி அவர்களுக்கும் தெரியப்படுத்தி அதன் மூலம் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண முயற்சிக்கும் இந்த ஆலயத்தின் நன்நோக்கையிட்டு நான் மகிழ்கின்றேன்.

இந்த மண்ணில் வேர்விட்டு விருட்சமாக நிழல்பரப்பி நிற்கும் இந்த ஆலயம் இன்று புத்தெழுச்சியோடு மீண்டும் எழுந்திருப்பதையிட்டு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த எழுச்சியானது இந்த மாவட்டத்தின் எழுச்சியாகவும் இந்த மாவட்ட மக்களின் எழுச்சியாகவும் அமைகிறது என்று கூறி இந்த ஆலயத்தின் பணி சிறக்க வேண்டுகின்றேன்.

**திரு. முருகேசு சந்திரகுமார்**
கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும்
பாராளுமன்ற குழுக்களின்
பிரதித்தலைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினரும்,
முன்னாள் பரிபாலன சபைத் தலைவரும், தற்போதைய உபதலைவருமான

# இரத்தினசிங்கம் சரவணபவானந்தன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

## சரவணப்பொய்கையில் உதித்த குமரனுக்கு ஓர் குடமுழுக்கு

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் மக்களுக்கெல்லாம் ஆதாரமூர்த்தியாக விளங்குபவர் முருகப் பெருமானே. அப்பெருமான் உறையும் இத்திருத்தலமே கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் ஆகும். இது கடந்த காலத்தில் யுத்த சூழ்நிலை காரணமாக பொலிவிழந்த நிலையில் காணப்பட்டது. இன்று கிளி மாவட்ட மக்களுடைய ஆதரவினாலும் வர்த்தகப் பெருமக்களாலும் மீண்டும் பொலிவுற்று 24-01-2011 அன்று குடமுழுக்கு வைபவம் பெருஞ் சிறப்புடன் நடைபெற்றது. அதை சிறப்பிக்கும் வகையில் கும்பாபிஷேக மலர் ஒன்றினை வெளியிட ஆலய பரிபாலன சபையினர் முன்வந்தமை பாராட்டத்தக்க விடயமாகும். அம்மலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நீண்ட காலமாக மக்களுக்கு நல்லருள் புரியும் கலியுகவரதனான கந்தன் ஆலயத்தில் நடைபெறும் சகல திருப்பணிகளிலும், திருவிழாக்களிலும் எம்மாலான பங்களிப்பினை செய்து வந்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். கடந்த காலத்தில் அதாவது வர்த்தக சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காலத்தில் கண்டாமணி, வசந்தமண்டபம், அன்னதான மடம் என்பவற்றை அமைத்து முருகப் பணியில் ஈடுபட்ட வர்த்தகப் பெருமுகர்களுக்கும் இவ்விடத்தில் நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு முருகப் பெருமான் சிறந்த வளங்களைக் கொடுத்து அவருடைய நல்லாசிகளைப் பெற வேண்டுகின்றேன். மேலும் முருகப் பெருமானின் தேர்த்திருப்பணியில் ஈடுபடும் காலங்களில் எல்லாம் போர்க்காலங்களில் ஏற்படும் தடைகளையிட்டு மேலும் இப்பணியை சைவ அடியார்கள் அனைவரும் எம்பெருமானுக்கு ஒரு திருத்தேர் அமைக்க முன்வரவேண்டும் என்று இறைவனின் அருளை வேண்டுகின்றேன். எமக்கு ஏற்படும் இன்னல்களை நீக்கும் முருகனின் அருள் தமிழ் மக்களுக்கு என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்பதுடன் சைவப் பணியில் எமது மாவட்ட மக்களும் வர்த்தகப் பிரமுகர்களும் ஈடுபட்டு அறப்பணிகளுக்கு சகல உதவிகளையும் வழங்கி செயற்பட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம். எல்லா வளமும் எம்மக்கள் பெற எம்பெருமான் திருவருள் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

**இ. சரவணபவானந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் (த.பீ)

# ப. ஜெயராணி அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

எழில் சிந்தும் இலங்கைச் சிறுதீவின் வடபுலமாம் கிளிநகரின் மையத்தை ஊடறுத்துக் கரும்பாம்பாய் வளைந்தோடும் ஏ9 வீதியோரம் அமர்ந்திருந்து அருள்சுரக்கும் எம்பெருமான் கந்தனவன் சந்நிதியை எவரறியார்? அவன் சுரக்கும் அருள் மழையில் நனைந்தறியார் யாருமிலர். அருகிருந்து அரவணைக்கும் "அவனருளாலே அவன்தாழ் வணங்கி" எம்பெருமான் கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் என்னுள்ளம் இறும்பூது கொள்கின்றது. இடர்கள் மிகுந்தபோதும், இடப்பெயர்வு தொடர்ந்தபோதும் உடனிருந்து எமைக்காத்து மீட்டு வந்து மீண்டுமெம்மை ஊர்மடியில் உலவவிட்டு வீற்றிருக்கும் வேலனுக்கு கும்பத்தால் அபிஷேகம் செய்கின்ற பெரும்பேறு எம்மவர்க்குக் கிடைத்துள்ளது.

காலத்துக்குக் காலம் கிளிநொச்சி மண்ணும், ஆலயமும், ஆலயச் சூழலும் கண்டுவந்த மாற்றங்கள் காரணமாக போரின் வடுக்களைத் தாங்கி நின்றிருந்தபோதும் ஆலயத்தின் மகிமையோ, தூய்மையோ அகன்றுவிடவில்லை. இத்தகைய நிலமைகள் காரணமாக பல தடவைகள் அநாவர்த்தன, ஆவர்த்தன, புனராவர்த்தன இப்பிரதிஷ்டைகளையும் கும்பாபிஷேக பெருவிழாக்களையும் கண்டு பெருமிடுக்காய் புகழ்பரப்பி, அருள்வீசி, ஒளிபாய்ச்சிக் கொலுவிருக்கும் எங்கள் கிளிநொச்சி கந்தசுவாமிப் பெருமானின் ஆலயத்தில் இம்முறையும் கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறுவது நம்மிடையே இன்னும் இன்னும் நம்பிக்கையை வளர்க்கின்றது.

அடியவர்களின் ஆதங்கங்களும், ஏக்கப்பெருமூச்சுக்களும் ஆலயச் சூழலை அழகுபடுத்தி இருக்கும் இவ்வேளையில் நடைபெறும் இக்கும்பாபிஷேக திருவிழாவினால் ஆலயம் மேலும் புனிதமுற்று என்றும் குறையாத கந்தன் கருணையினால் அடியவர்கள் அகம் குளிரவும் நாட்டில் ஐக்கியமும் சமாதானமும் நிலவ இப்பெருவிழா வழிசெய்ய வேண்டியும் இவ்விழா சிறப்புற நடைபெறுவதோடு இவ்விழாவையொட்டி வெளியிடப்படும் இக்கும்பாபிஷேக மலர் சிறப்புற வெளிவர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**ப. ஜெயராணி**
உதவி அரசாங்க அதிபர் (த.பீ)
கிளிநொச்சி மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்

## உயர்திரு சி. ஸ்ரீநிவாஸன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

நெடுந்துயரங்களைச் சுமந்து வாழ்வின் அத்தனை இழப்புக்களையும் சந்தித்த மக்களின் "நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி" என்பதே மூச்சாக மிஞ்சி இருக்கும் நிலையில் எமது மக்களின் வாழ்வின் எழுச்சிக்கு மதவழிபாடுகள் மிக இன்றியமையாதனவாக மிளிர்கின்றன. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ9 வீதியின் அருகே இருந்து உலக மக்களுக்கெல்லாம் அருள்சொரியும் கிளிநொச்சி கந்தசுவாமியார் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தினை ஒட்டி வெளியிடவுள்ள மலருக்கு வாழ்த்துச்செய்தி எழுதுவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

அழகன், குமரன், ஞானவடிவினன் "ஓம்" என்னும் பிரணவ மந்திரத்தின் பொருளினை தந்தைக்கு எடுத்துரைத்த ஞானகுரு கிளிநொச்சி மாவட்டத்தில் உறைந்து மக்களுக்கு அருள்பாலித்து வருவதுடன் மக்களது துன்பங்களை நீக்கி ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கு வழிகாட்டியாகவும் அமைந்திருக்கும் குமரனைத் தொழ எமது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலமும் நீங்கி முத்தியடைவதற்குரிய வழி கிடைக்கும். எம் எல்லோருக்கும் முருகன் அருள் கிடைக்க வேண்டுமென திருக்கை வேலனைப் போற்றி வாழ்த்தி நிற்கின்றேன்.

"திருக்கைவேல் போற்றி போற்றி"

கிளிநொச்சி

**செ. ஸ்ரீநிவாசன்**
மேலதிக அரசாங்க அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

வவுனியா மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்

# திரு. ப. அரியரத்தினம் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

இலங்கா புரியின் வடபால் அமைந்துள்ள கிளிநொச்சி மாநகரின் நடுநாயகமாக கண்டி வீதியின் அருகே விளங்குவதுதான் எமது முருகன் ஆலயம்.

செந்நெல் வயல்களும் மா, பலா, வாழை எனக் கூறப்படும் முக்கனி வளம் நிறைந்த கிளிநொச்சி மாநகரில் 1946இல் திருவாளர் முகாந்திரம் வெற்றிவேல் அவர்களின் அனுசரனையில் இவ்வாலயம் ஆரம்பமானது. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற வாக்கிற்கமைய இவ்வாலயம் அமைக்கப்பட்டது. இவ்வாலயத்தின் புதுமை என்னவெனில் கிழக்குத்திசை நோக்கியுள்ள மூலஸ்தானம் அர்ச்சகர் கனவிற் தோன்றி "தான் மேற்குத் திசை நோக்கி அமர்ந்து கண்டிவீதியில் வரும் அடியவர்களுக்கு அருள்பாலிக்க வேண்டும் எனக் காட்சி கொடுத்து மறைந்தார்" எம்பெருமான் நடந்தவற்றை நிர்வகாத்திடம் பிரதமகுரு கூறிய அன்றே மூலமூர்த்தியாகிய வேலாயுதம் மேற்குத்திசை நோக்கி அமர்ந்து அருளாட்சி கொடுப்பது போலும் சிறப்பாக அமைகின்றது.

விக்கினங்களைத் தீர்க்கும் வேலாயுதர் 1996இல் ஏற்பட்ட வன்னி இடப்பெயர்வில் வன்னேரிக்குளம் ஐயனார் ஆலயத்திலும் 2008இல் ஏற்பட்ட இடப்பெயர்வில் புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்திலும் சென்று அமர்ந்து தம் மக்கள் துயர் துடைத்தார். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் மஹாகும்பாபிஷேக குடமுழுக்கு நடைபெறவேண்டும் என்பது நியதி. ஆயினும் எமது ஆலயம் காலம் செய்த கோலத்தினால் ஏற்பட்ட அனர்த்தத்தினால் சிதைவடைந்து காணப்பட்டது. எம்பெருமானை பிரதிஷ்டை செய்து அமர்த்த வேண்டி ஆலயத் திருப்பணி வேலைகள் துரிதமாக மேற்கொண்டு துவிதள விமானத்தோடு பரிவார மூர்த்திகள் சூழ சிறப்பு வேலைப்பாடுகளுடன் வர்ணம் தீட்டி அழகுற மிளரச் செய்து 24-01-2011இல் குடமுழுக்கு நடாத்தப்படுகின்றது என்றால் கந்தனின் பெருமை கூறவும் வேண்டுமா?

கையறு நிலையில் இருக்கும் தம் மக்களை கருணை உள்ளம் கூர்ந்து தம்பால் ஈர்த்து அடியவர் மனதிற் குடிகொண்டு வெகு சீரும்சிறப்புமாக மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று கும்பாபிஷேக மலரும் வெளிவருவது கந்தனின் கருணையை எடுத்துக்காட்டி நிற்கின்றது.

கிளிநொச்சி மாநகர் வானுற வளர்ந்து மக்கள் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வந்ததற்கு வழிசமைத்துக் கொடுக்கும் நல்லூராம் வன்னிப் பெருநிலம் அடுத்தடுத்து எற்பட்ட போர் வழுக்களினால் நாடு சீர்குலைந்து காணப்படினும் திரும்பவும் புதுப்பொலிவுடன் காணக்கூடிய அளவிற்கு தன் வளத்தைப் பெருக்கும் நகர்தான் கிளி நகரம். அவ்வாறு ஆட்டிப் படைப்பவன் கந்தக் கடவுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆட்டுவித்தார் ஆரொருவர் ஆடாதாரே" என்ற வாக்கிற்கமைய கந்தக்கடவுள் கோயில் கொண்டு தம் மக்களை இடர் களைந்து இன்னல் துடைத்து வாழ்வாங்கு வாழ வழிசமைத்து வருகின்றார்.

என்றும் இளமையும் அழகும் நிறைந்த எம்பெருமான் மூர்த்திவேலும் வள்ளி தெய்வ யானை சமேதரரான சுப்பிரமணியரும் அப்பன் அம்மையுமாகிய நடேசர் பார்வதியும் அண்ணன் விநாயகரும் சந்தானகோபாலர், தட்சணாமூர்த்தி, நவக்கிரகங்கள், வயிரவேஸ்வரர், சண்டேஸ்வரர் எனப் பரிவார மூர்த்திகள் சகிதம் அழகுற அமைக்கப்பட்டு அருளாட்சி தருகின்றது எமது கந்தசுவாமி கோவில்.

"வேண்டுவார் வேண்டுவதை ஈவான்" எம்பெருமான் ஆலய பரிபாலனசபையினரின் விடாமுயற்சி இவ்வாலய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்துள்ளது. கும்பாபிஷேக குடமுழுக்குப் பெருவிழாவை தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகமும் இறுதிநாள் சங்காபிஷேகமும் நடைபெறுவது மேலும் சிறப்பம்சமாக அமைகின்றது.

ஆலயப் பிரதம குருவான பிரம்மஸ்ரீ. இரத்தினேஸ்வரக் குருக்கள் அவர்தம் பாட்டனார் காலத்தும் பழம்பெரும் கோயில்தான் எமது கந்தசுவாமி கோவில். அவரின் வழித்தோன்றல்களினால் இன்றுவரை பரம்பரை வழுவாது திருப்தியாக பூசை வழிபாடுகள் இயற்றி வருவது சிறப்பம்சமாகும்.

எமது ஆலயச் சூழலில் அன்னதான மடம், குருமார் குடிமனை, நந்தவனம், சுவாமி அலங்கரித்து பூமாலை தொடுப்போர் குடிமனை எனத் தன்னகத்தே கொண்டதுதான் எமது ஆலயம்.

இவ்வாலயத்தின் மகிமை போற்றுதற்குரியது. இன்னலுற்று கண்ணீர் மல்கும் அடியவர் உள்ளங்களில் வேலோடு வினை தீர்த்து நல்லருள் பாலிக்கும் முருகமூர்த்தியை கைதொழுவார் தம் வினை தீர்ப்பான் என்பது திண்ணம்.


"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**ப. அரியரத்தினம்**
மேலதிக மாவட்ட
கல்விப் பணிப்பாளர்

வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

### ஆலய பரிபாலனசபைச் செயலாளர்

## திரு. செ. செல்வரத்தினம் அவர்கள்

**வழங்கிய**

# வாழ்த்துச்செய்தி

நெய்தலும் மருதமும் ஒன்றுசேர்வளம்பெறு கிளிநொச்சி நகர் மத்தியில், செந்நெல் வயல்களும் செழிப்பொடு வளங்களும் சூழ்ந்த இடமதில் அமர்ந்து அருளாட்சி புரியும் எம் முருகப் பெருமானின் திருப்பாதக் கமலங்களைப் பணிந்து, இந்நான்காவது குடமுழுக்குப் பற்றிய சில தகவல்களை வழங்க எண்ணியுள்ளேன்.

பாரிய திருப்பணி வேலைகளுக்கான பொருட்தேவை, பல்வேறு செயற்பாடு களுக்குமான இடவசதி, கும்பாபிடேகத்திற்குத் தேவையான நிதி போன்ற தேவைகளையும் எண்ணி மனம் கலங்கிநின்ற வேளையில், எமது ஆலய பிரதம குருக்கள், நிர்வாகத் தலைவர் ஆகியோர் முருகப் பெருமான் மீது பூரண நம்பிக்கை வையுங்கள், தொடர்ந்து மனமுருகி வேண்டுங்கள் எல்லாம் நாங்கள் நீங்கள் எதிர்பார்த்ததைவிட சிறப்பாக நடைபெறும் எனக் கூறினார்கள்.

இதற்கமைய, எமது அன்புக்குரிய தலைவர் தன்னைப் பூரணமாக அர்ப்பணித்து நிர்வாகத்துடன் பல கலந்துரையாடல்கள் மூலம் திட்டங்களைச் செயற்படுத்தும் விபரங்களை விளக்கினார். அதன்படி இம்மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு மக்களின் பங்களிப்பும், நிதி உதவியும் சேர்க்கப்பட வேண்டும் என்று அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தகர்கள் எனும் பல்வேறு தரப்பினரையும் அணுகி வேண்டி கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம் சென்றுவர தீர்மானித்தோம். அதன்படி எமது தர்மகர்த்தாசபை உறுப்பினர் அன்புக்குரிய திரு. கு. சிவதாஸ் மனோஜ் ஸ்தாபன உரிமையாளர், தம்பி மனோகரன் ஆகியோர் தம்மை அர்ப்பணித்து நாம் அதிசயிக்கும் அளவிற்கு பொருள் தேடித் தந்துள்ளார்கள். இதுவும் எம்பெருமான் முருகனின் பெருங்கருணையே ஆகும். இவர்கள் பெருமானின் கருணை என்றென்றும் கிடைக்க வேண்டுமென வேண்டி, பொருள்களையும், நிதியினையும் தத்தமது நிலைமைக்கேற்ப வாரிவழங்கிய அடியார்களுக்கும், மலரைச் சிறப்பாக்க ஆக்கங்களை அளித்தவர்களுக்கும், இன்முகத்துடன் விளம்பரங்களைத் தந்த வர்த்தகர்களுக்கும், அச்சேற்றிய மலர்க்குழுவினருக்கும், மற்றும் அனைவருக்கும் வாழ்த்துக் கூற கடமைப்பட்டுள்ளேன். வாழ்த்து மனமாரத் தெரிவிக்கின்றேன்.

அடுத்து இவ்வாலய வளர்ச்சியில் 1946ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்த பஞ்சாயத்துச் சபை உறுப்பினர்கள், முகாந்திரம் வெற்றிவேலு, விதானையார் குடும்பத்தினர், திருநெறிக் கழக நிர்வாகத்தினர் எல்லோரது சேவையினை ஒருகணம் மனக்கண்முன் நிறுத்தி, இவர்களுக்கு எம்பெருமான் முருகனின் அருட்கடாட்சம் என்றென்றும் கிடைக்க வேண்டியும் ஆலயத்தில் தொடர்ந்து சில பல திருப்பணி வேலைகள் நிறைவேற்ற வேண்டியும் உள்ளன என்பதையும் நினைவுபடுத்தி இருந்தும் ஆலயத்திற்கு ஒரு வருமானம் வரக்கூடிய செயற்பாட்டை முன்னெடுக்கவேண்டும் எனக்கேட்டு எனது நிர்வாகத்தினரையும் அடியார்களையும் நிதி வாரி வழங்கிய வள்ளல்களையும் இருகரம் கூப்பி வேண்டி எனது இவ் வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி வணக்கம்

கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

**செல்லையா செல்வரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## ஆலய பரிபாலனசபைத் தலைவர்
# திரு. ச. ஸ்ரீகௌரிபாலா அவர்கள்
வழங்கிய
# வாழ்த்துச்செய்தி

இவ் ஆலயத்தின் நிர்வாகக்குழு தலைவராக 24-02-2010ஆம் திகதியன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நான் முருகனுடைய கிருபையால் தெரிவுசெய்யப்பட்டேன். கந்தனின் கட்டளையென இதனை ஏற்றுக்கொண்டேன். ஆனால் பாரிய பணியான இக்கோயிலின் கும்பாபிஷேக விழாவினை எவ்வாறு நிறைவேற்றி முடிப்பேன் என நான் மனதில் ஆதங்கப் பட்டேன். கந்தனின் கடாட்சமென கிளிநொச்சி மாவட்ட மக்கள், வர்த்தகர்கள், கொழும்பு, யாழ்ப்பாணம், வவனியாவைச் சார்ந்த வர்த்தகர்கள், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் முருகனின் அன்பர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச திணைக்களங்கள், கல்விச் சமூகத்தினர் வாரி வழங்கிய நன்கொடை மூலம் நான் எதிர்பார்த்தைவிட பன்மடங்கு சிறப்பாக இக்கும்பாபிஷேக விழா நிறைவேற்றப்பட்டமையையிட்டு நான் அக மகிழந்தேன்.

குருக்கள்மார்கள் தங்க இடவசதியின்மை இருந்தபோது எமது ஆலயப் பிரதம குருக்களின் அயராத முயற்சியினால் பல குருக்கள்மார்கள் ஒன்றிணைத்து இக்கும்பாபிஷேக விழா சிறப்பாக நிறைவேறியுள்ளது. இவ் விழாவினைச் சிறப்பித்த குருக்கள்மார்களிற்கும், மற்றும் கலந்துகொண்ட அனைவரிற்கும் முருகப்பெருமானின் திருவருள் என்றென்றும் கிடைக்க வேண்டும் என இத்தருணத்தில் வாழ்த்தி நிற்கின்றேன்.

இவ் ஆலய வரலாற்றினை ஆவணப்படுத்த வேண்டும் என அனைவரும் விரும்பியதற்கிணங்க எமது நிர்வாகத்தினால் மலர்க்குழு ஒழுங்கு செய்யப்பட்டு மண்டலாபிஷேக பூர்த்தியன்று வெளியீடு செய்ய வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கிணங்க இன்று இம்மலரினை உங்கள் கைகளில் தவழவிடுவதில் நான் மனம் மகிழ்கின்றேன். இம் மலரினைச் சிறப்பாக வெளியீடு செய்வதற்கு ஆசியுரை, ஆக்கங்கள், விளம்பரங்கள் வழங்கிய அனைத்து உள்ளங்களிற்கும் எனது மனமார்ந்த ஆசியினையும் நன்றியினையும் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**ச. ஸ்ரீகௌரிபாலா**
தலைவர்

கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கரைச்சி – கிளிநொச்சி

# இந்து இளைஞர் பேரவை

வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

ஒவ்வோர் ஆலயத்துக்கும் ஒவ்வொரு வரலாறும் சிறப்பு அம்சங்களும் உண்டு. அந்த வகையில் கிளிநொச்சி நகரில் திருவருள்பாலிக்கும் அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தின் வரலாறும் அதன் சிறப்பும் போற்றுதற்குரியது. இதற்கு உறுதுணையாக இருந்து இறைபணி செய்த பேரியோர்கள், அந்தணப் பெருந்தகைகள், சைவ அடியார்கள். பரிபாலனசபையினர் நினைவு கொள்ளப்பட வேண்டியவர்கள். இவர்களின் வழியில் கடந்த 24-01-2011 அன்று எம்பெருமானின் புனராவர்த்தன கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

கும்பாபிஷேக நிகழ்வையொட்டி வெளிவரும் கும்பாபிஷேக மலரை வாழ்த்தி எழுதுவதில் கரைச்சி இந்து இளைஞர் பேரவை பெருமை கொள்கிறது. கரைச்சி இந்து இளைஞர் பேரவை ஆரம்பிக்கப்பட்ட காலம்முதல் எமது நிர்வாகசபை உறுப்பினர்களது அயராத உழைப்பால் இறைபணியுடன் கூடிய சமூகப் பணிகளையே முன்னின்று செயற்படுத்தி வந்துள்ளது. 1996ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வின்போது இவ்வாலயத்தின் பெறுமதிமிக்க விக்கிரகங்களையும், பொருட்களையும் பாதுகாத்து ஆலய பரிபாலன சபையினரிடம் ஒப்படைத்த பணியை செய்த இந்து இளைஞர் பேரவை நிர்வாக உறுப்பினர்கள், பணியாளர்களை நாம் இன்று நினைவுகொள்கின்றோம்.

கும்பாபிஷேக நிகழ்வையொட்டி வெளிவரும் இம்மலர் சிறப்புற அமைய வாழ்த்துவதோடு மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கு அமைய ஆலயங்கள் சமய நிறுவனங்கள் சமூகப்பணிகள் செய்ய முன்வர இறையருள் கிடைக்க வேண்டி கந்தா உன் கழல் தொழுகின்றோம்.

வேல் உண்டு வினைதீர்க்க மயில் உண்டு எமைக்காக்க.

கரைச்சி,
கிளிநொச்சி.

**இந்து இளைஞர் பேரவை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# டாக்டர் K.V.K திருலோகமூர்த்தி அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் மத்தியில் கோயில் கொண்டு அருளாட்சி புரியும் முருகப் பெருமானின் மேல் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை அளவிட முடியாது. இன்றைய நிலையில் போர் அனர்த்தங்கள் தொடர்ந்து பரம்பரை பரம்பரையாக தேடிய சொத்துக்கள் யாவும் இழந்த நிலையிலும் நமது நம்பிக்கையின் சின்னமாகிய முருகன் ஆலயம் முக்கியம் என்பதை உணர்ந்து முதற்கண் ஆலயத்தை பாலஸ்தாபனம் செய்து வணங்கிக் கொண்டு திருப்பணி வேலைகளையும் மிகப்பெரிய அளவில் நிதி சேர்த்து நிறைவேற்றி குடமுழுக்கு காண்பதையிட்டு நாம் பூரிப்படைகின்றோம்.

இருந்தும் பூரணமாக ஆலயக் காணியை இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து பெறப் பெரிதும் முயற்சி செய்தும் பெறமுடியாமல் பல கஷ்டங்கள். பொது மலசலகூடம், பொதுக்கிணறு குழுக்கள் வதிவிடங்கள் என்பவை அற்ற நிலையில் கந்தக்கடவுள் மேல் வைத்துள்ள நம்பிக்கையில் இவ் குடமுழுக்கு விழாவை நிறைவேற்றிய மக்களுக்கும் இவ் நிர்வாகத்தினருக்கும் நாம் வாழ்த்து கூறுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

மேலும் ஆலய நிர்வாகம் பொது சமூக சேவையிலும் தம்மை அர்ப்பணித்து சேவை செய்ய வேண்டும் என வேண்டி இந்நிர்வாகத்தினருக்கும் மக்களுக்கும் எம் முருகப் பெருமான் ஆசி கிடைக்கவேண்டுமென வேண்டி இம்மக்களுக்கு மேலும் வாழ்த்துக் கூறி விடைபெறுகின்றேன்.

**கண்ணன் கோவிலடி,**
**கிளிநொச்சி.**

**K.V.K திருலோகமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயப் பொருளாளர்

# சி .சிவானந்தம் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் மத்தியில் எழுந்தருளி எம்மக்களுக்கெல்லாம் அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தின் இரண்டு கும்பாபிஷேகத்திற்கு பொருளாளராக இருந்து இவ்விழாவைக் காண்பது நான் செய்த புண்ணியம் என மகிழ்வடைகின்றேன். மிகப்பெரிய இடப்பெயர்வைச் சந்தித்த எம்மாவட்ட மக்கள் நிதியை அவரவர் நிலைக்கேற்ப வாரி வழங்கி இப்பரிபாலஸ்தாபன திருப்பணி கும்பாபிஷேக நிகழ்வை 24-01-2011 நிறைவேற்றியுள்ளமை இம்மாவட்ட மக்களதும் நிர்வாக உறுப்பினர்களது அயராத முயற்சி என்பதை நாம் என்றும் மறக்க முடியாது.

இருந்தும் சகல ஆவணங்களையும் இழந்த நிலையில் மீண்டும்ஆவணம் முக்கியமென உணர்ந்த நிர்வாகத்தினர் கும்பாபிஷேக மலரை மலர்க்குழு மூலம் ஒழுங்குபடுத்தி வெளியிடுவதும் பெருமைக்குரிய விடயமாகும். ஆகையால் குடமுழுக்கு விழா நிறைவுசெய்த குருக்கள்மார்களுக்கும் நன்றியையும், மற்றும் யாவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்தையும் தெரியப்படுத்தி முருகப்பெருமானின் கருணை யாவர்க்கும் என்றென்றும் கிடைக்க வேண்டுமென வேண்டி நிற்கின்றேன்.

**சி. சிவானந்தம்**

❖❖❖

## கிளிநொச்சி மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியச் செயலாளர்

# திரு. க. முருகவேள் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி நகரில் A9 சாலைக்கு அருகே அமர்ந்திருந்து எல்லோருக்கும் அருளாட்சி செய்யும் கலியுகக் கடவுள் முருகப் பெருமானின் ஆலயம் கிளிநொச்சி மாவட்டத்தில் முதன்மை ஆலயங்களில் ஒன்றாக விளங்குகின்றது. அறங்காவலர் சபையின் அர்ப்பணிப்பும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அடியார்கள் அனைவரின் ஒத்துழைப்பின் மூலமும் நாட்டில் ஏற்பட்ட போரின்பின் இவ்வாலயம் மேலும் ஒரு குடமுழுக்கை கண்டு புதுப்பொலிவோடு விளங்குவதோடு சமூகத்தில் இந்துசமய சேவைகளையும் ஆற்றி இவ்வாலயத்தின் பெருமை எங்கும் பரவுவதோடு எல்லாம் வல்ல மகாவல்லி கஜாவல்லி சமேத சிவசுப்பிரமணியேஸ்வரப் பெருமானின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க மனமாரப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. க. முருகவேள்**

செயலாளர்

கிளிநொச்சி மாவட்ட இந்து ஆலயங்களின்

ஒன்றியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அருள்மிகு சர்வார்த்த சித்திவிநாயகர் ஆலய
# பரிபாலனசபையினர்
**வழங்கிய**
# வாழ்த்துச்செய்தி

இந்து சமுத்திரத்தின் முத்து என்று போற்றப்படுகின்ற இலங்கைத்தீவு தன்னில் வடக்கே கிளிநொச்சி மாவட்டத்தில் அண்ணன் விநாயகரைச் சுற்றி அமர்த்திவிட்டு நகர் மத்தியில் அடியார்களுக்கு பல இன்னல்களுக்கு மத்தியிலும் அருளை அள்ளி வழங்கிவரும் முருகப்பெருமானின் கும்பாபிஷேக விழாவை சிறப்புற வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

**பரிபாலன சபையினர்**
அருள்மிகு சர்வார்த்த சித்திவிநாயகர் ஆலயம்

கணேசபுரம்,
கிளிநொச்சி.

✤✤✤

# கிளிநொச்சி சித்திவிநாயகர் ஆலய
# நிர்வாகத்தினர்
**வழங்கிய**
# வாழ்த்துச்செய்தி

வண்டினம் இசைபாட செந்நெல் கதிராட மந்திகள் விளையாட கிளிகள் கொஞ்சிட அழகனுக்கு அழகு சேர்க்கும் கிளிமாநகர் மத்தியில் அண்ணன் ஆனைமுகன் அருகமர்ந்து ஆசீர்வதிக்க, தம்பி முருகனுக்கு மஹாகும்பாபிஷேக பெருவிழா விகிர்தி வருடம் தை மாதம் 10ஆம் நாள் (24-01-2011) திங்கட்கிழமை வெகு விமர்சையாக நடந்தேறியதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்விழாவை மிகச் சிறப்பாக நடத்தி முடித்த ஆலய பரிபாலன சபையினருக்கும், சிறப்புற நடாத்தி வைத்த சிவாச்சாரியார்களுக்கும், காணிக்கை செலுத்திய பக்தர்களுக்கும், விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த அடியார்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. வை. குமாரசாமி**
கிளிநொச்சி சித்திவிநாயகர் ஆலய
நிர்வாகத்தினர்.

கணேசபுரம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி கோயில் உபசெயலாளர்

## சு. வரதராசா அவர்கள்

ஆசிரியர், கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயம்

**வழங்கிய**

# வாழ்த்துச்செய்தி

கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒருதிருமுருகன் வந்தான் உதித்தன் உலகம் உய்ய என்ற கச்சியப்ப சிவாச்சாரியாரின் திருவாக்கிற்கு அமைய நீர்வளமும் நிலவளமும் நிறைந்த கிளிநொச்சி மாவட்டத்தின் நகரின் மையப்பகுதியில் கோயில் கொண்டெழுந்தருளி அடியார்களுக்கு இன்னருள் பாலித்துக்கொண்டிருக்கும் வேண்டுவோர் வேண்டும் வரமெல்லாம் அள்ளி வழங்கும் கந்தவேள் பெருமானின் ஆலயம் கடந்த போர்ச்சூழல் காலப்பகுதியில் பாரிய சேதத்திற்கு உள்ளாகியது. 2008ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி இவ்வாலயத்தில் உள்ள விக்கிரகங்கள், சொத்துக்கள் யாவும் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு பாதுகாக்கப்பட்டு பூசையும் நடைபெற்றது.

2009 தை மாதம் புளியம் பொக்கணையை விட்டு மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர். மீண்டும் 2010ஆம் ஆண்டு ஆரம்ப காலப்பகுதியில் மக்கள் கிளிநொச்சிக்கு வரத்தொடங்கினர் மீளக்குடியமர்வுக்காக. அந்தவேளையில் ஆலய பரிபாலன சபையினரும் குருக்கள் ஐயாக்களும் சேர்ந்து ஆலய விக்கிரகங்களை புளியம்பொக்கணையில் இருந்து முருகப்பெருமான் ஆலயத்திற்கு கொண்டு வந்தனர். சொத்துக்கள் பெருமளவு அழிவடைந்து விட்டன. ஆலயத்தின் மூலஸ்தான வேல் கள்வர்களால் அபகரிக்கப்பட்டிருந்தது. மீண்டும் எம்பெருமான் அடியவர்களின் உதவியுடன் முருகப் பெருமானின் புதிய வேல் வார்க்கப்பட்டு 01-04-2010 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து முருகப்பெருமான் அடியார்களின் பண உதவி, பொருள் உதவி, பலரது சரீர உதவிகளோடு எம்பெருமானின் ஆலயம் புதுப்பொலிவு பெற்று 24-01-2011 அன்று சுபமுகூர்த்த வேளையில் எம்பெருமானின் மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா எமது ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ. கு. இரத்தினேஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களின் தலைமையிலான அந்தண சிவாச்சாரிய குழுவினரால் இனிதே நிறைவேற்றி வைக்கப்பட்டது. அடியார்களின் துன்பங்கள், துயரங்கள், அவலங்களை நீக்கி அவர்களுக்கு ஞானஒளி ஊட்டி நல்லருள் பாலித்து நாட்டில் அன்பு. சாந்தி, சமாதானம் ஏற்பட எம்பெருமான் அருள் செய்ய வேண்டும் என வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**சு. வரதராசா (ஆசிரியர்)**
உப செயலாளர்
கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி கோவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிருத்சங்கிரகணம் எனும் கிரியை நடைபெறுதல்



குருமார்களின் பாலஸ்தாபன ஆலயத்தில் கலாகர்ஸன நிகழ்வு



பாலாலயத்தில் கலாகர்ஷணம், போராசலனம் ஆகியவை நடைபெறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய மூர்த்தியாகிய சனீஸ்வர பகவானின்
அதிவாசக் கிரிகையின்
(கண்திறத்தல்) நிகழ்வின் போது



அந்தணர் குடும்பங்களின் தீபஸ்தாபன நிகழ்வு



தீபஸ்தாபன நிகழ்வு



தீபஸ்தாபன நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடயங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய பரிபாலன சபைத் தலைவர்

## திரு.சரவணபவான் ஸ்ரீகௌரிபாலா

(முகாமையாளர், மக்கள் வங்கி)

அவர்களது

## உள்ளமென்னும் கோயிலிலிருந்து.....

நீர் வளமும் நில வளமும் ஒருங்கேயமைந்த கிளிநொச்சி நகரின் மையப்பகுதியிலெழுந்தருளி அருளாட்சி புரியும் கந்தசுவாமி அடியார்க்கெளியவனாகக் காட்சியளிக்கின்றான். ஓட்டைப் பாண்டத்துள் வார்க்கப்பட்ட நீரெல்லாம் ஒழுகிப் போய்விடுகின்றது. ஆனால் நீருக்குள் போடப்பட்ட ஓட்டைப் பாண்டம் நிறைகுடம் போன்றதாகி விடுகின்றது. நெஞ்சிற்களிக்கும் பொருட்களெல்லாம் நாளடைவில் போதாததாகி விடுகின்றது. ஆனால் நெஞ்சை இறைவனிற் களித்தால் அது நிறை நெஞ்சாகிவிடும். இன்றைய காலகட்டத்தில் கவலைகளை மறந்துவாழ இதுவே சிறந்த மார்க்கமாகும்.

கோயிலில்லா ஊரில் குடியிருக்கக் கூடாதென்றெண்ணிய புண்ணிய நெஞ்சினராகிய கிளிநொச்சி விதானையார் திருவாளர் முகாந்திரம் சி.வெற்றிவேல் அவர்கள் இப்பகுதியில் வாழ்ந்த இறையுணர்வுடைய சில மக்களுடன், இரணைமடுத்திட்ட நீர்ப்பாசன இலாகாவின் அனுசரணையுடன் வெற்றிவேல் முருகனுக்கு கோயில் கட்டும் பணியிலீடுபட்டார். கிழக்கு வாசல் ஆலயமாக கட்ட முற்பட்ட வேளையிலே சேர்.பொன்.இராமநாதனின் மருமகனாகிய தமிழ்மேதை சு.நடேசபிள்ளை அவர்களின் ஆலோசனையின் பேரில் கோயிலின் அமைப்பு கண்டி வீதியை நோக்கும் வண்ணம் மேற்கு வாசல் கோயிலாக மாற்றப்பட்டது.

கர்ப்பக்கிரகத்துடன் சிறு கோயிலாக ஆரம்பிக்கப்பட்டு மூலமூர்த்தியாக வேல் பிரதிட்டை செய்யப்பட்டு 1948ம் ஆண்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இன்றைய சூழ்நிலையில் இந்நிகழ்ச்சி கிளிநொச்சியின் சமய வளர்ச்சிக்கும் ஆலய வழிபாட்டிற்கும் கால்கோளாக அமைந்தது. இக்காரியத்தை நிறைவேற்றி வைத்த பெரியார்களை சைவ உலகம் என்றும் மறக்கலாகாது. கிளிநொச்சி ஒரு குடியேற்றப் பிரதேசமாகமாறத் தொடங்கியது. குடாநாட்டு மக்களின் பார்வையும் கிளிநொச்சியை நோக்கியது. ஆலயத்தை முன்னின்றமைத்த முகாந்திரம் வெற்றிவேலு அவர்கள் அமரரானதும் அவரின் மருமகன் கந்தையா விதானையார், மாமனார் ஆரம்பித்த பணியை மக்களின் உதவியுடன் நிறைவு செய்தார்கள். அவரின் பின் இவரது மனைவியும் மு.வெற்றிவேலு அவர்களின் மருமகளாகிய திருமதி.சாந்தநாயகி கந்தையா அவர்கள் கோயில் நிர்வாகத்தை மேற்கொண்டார்கள்.

1952ம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சியில் சைவப் பணியாற்றிய திருநெறிக் கழகமும் ஊர்மக்கள் பலரும் கோயிலை மக்கள் பரிபாலனத்தின்கீழ்க் கொண்டுவருவது நலமென்ற கருத்தை திருமதி.சாந்தநாயகி கந்தையா அவர்களிடம் கோரிக்கையாக விடுத்தனர். அதனைப் பெரிய மனதுடன் ஏற்றுக்கொண்டு, 1964ம் ஆண்டில் அப்போதைய யாழ்மாவட்ட மேலதிக அரசஅதிபராக இருந்த திரு.ஏ.பெருமையினார் தலைமையில் கிளிநொச்சி மக்களைக் கொண்ட தர்மகர்த்தா சபை அமைக்கப்பட்டது. இதன் தலைவராக நீர்ப்பாசன இலாகா உதவிப் பணிப்பாளரும் கிளிநொச்சித் தொகுதியின் முதல் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.அ.சிவசுந்தரம் அவர்கள் தலைவராகவும், திருநெறிக்கழக ஸ்தாபகரும் சைவத் தொண்டருமாகிய திரு.த.நல்லதம்பி அவர்கள் செயலாளராகவும் திரு.வீ.கே. முகேசு அவர்கள் பொருளாளருமாக ஐவர் அடங்கிய தர்மகர்த்தா சபையொன்று மக்காளல் தெரிவுசெய்யப்பட்டது. இச்சபை பல திருப்பணி வேலைகளை மேற்கொண்டதுடன் நித்திய நைமித்திய வருடாந்த உற்சவங்கள் நடைபெற வழிசமைத்தது.

மேற்படி தர்மகர்த்தா சபையினர் பரந்த நோக்குடன் 1972ம் ஆண்டு தர்மகர்த்தா சபை உறுப்பினரை உள்ளடக்கிய ஒரு ஆலய பரிபாலன சபையினை உருவாக்கினர். இதன் தலைவராக திரு.ஆ.சி.முருகேசு அவர் களும் செயலாளராக திரு.வே.இ.தம்பிப்பிள்ளை அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவார மூர்த்திகள் அமைக்கப்பட்டு 1973ல் மஹா கும்பாபிஷேகமும் நடாத்தி வைக்கப்பட்டது. இவ்வாலயத்தில் ஷஷ்டி திதியில் கொடியேற்றம் இடம்பெற்று ஆவணி பௌர்ணமி தினத்தில் தீர்த்தோற்சவம் நடைபெற்றுவருவது சிறப்பான அம்சமாகும். இதன்மூலம் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் கந்தப் பெருமான் புதுப்பொலிவுடன் அருளாட்சி புரிந்து வருகின்றார்.

04.06.1986இல் ஏற்பட்ட அசம்பாவிதத்தால் கோயிலும் பாதிக்கப்பட்டு 10 மாதங்கள் எதுவித பூசையுமின்றி பூட்டப்பட்டுக்கிடந்தது. பிரச்சினைகள் ஓரளவு சுமுகமாகி மக்கள் தத்தமது இருப்பிடங்களுக்கு வரத் தொடங்கியவுடன் கோவியின் பூசையும் ஆரம்பிக்கும் நிலை உருவாகியது. ஆதன் பிரகாரம் 1987ம் ஆண்டு பங்குனி மாதம் 21ம் நாள் "சம்புரோஷன அபிஷேகம்" செய்யப்பட்டு இரு காலப் பூசைமட்டும் இடம்பெற்று வந்தது. இதன்பின்னர் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. இதில் தலைவராக திரு.த.சோமசுந்தரமும், செயலாளராக திரு.சி.விக்னராசாவும், பொருளாளராக திரு.இ.நடராசா அவர்களையும் உள்ளடக்கிய 19 உறுப்பினர் கொண்ட நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

இச்சபையினர் மூர்த்திகளை பாலஸ்தாபனம் செய்வித்து கோயில் புனருத்தாரனப் பணிகளை மேற்கொண்டனர். கிளிநொச்சிவாழ் பெருவுள்ளங் கொண்ட மக்களின் நிதியுதவியுடன் 500 இறாத்தல் கொண்ட கண்டாமணி, அழகிய மணிக்கூட்டுக் கோபுரம், சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய வசந்த மண்டபம், ஆறுமுக சுவாமி கோயில், சபை, வைரவர் கோயில், சந்தானகோபாலர் கோயில், சனீஸ்வரன் கோயில், வண்ணமிகு நிருத்த மண்டபம், நிலத்திற்கு றெறாசோவேலை, மடம், பாரிய கிணறும் தண்ணீர் தாங்கியும் குடிநீர் விநியோகமும் மலசல கூடங்களுடன் சண்முகர் சிறிய சுப்பிரமணியர் வள்ளி தெய்வானையுடன், முன்கோபுரவாசல், வாகனங்கள் ஆகியவற்றை ரூபா பதினைந்த இலட்சம் செலவிற் செய்து முடித்து 17.08.1988ல் மட்டுவில் வேதாகம சோதிட பூஷணம் சிவாச்சாரிய திலகம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ் ஆலயத்திற்கு ஒரு கோபுரமும், சித்திரத் தேரும் இல்லாத குறை இருந்து வருகின்றது. இக் கைங்கரியமும் இறையுணர்வுடைய இம்மாவட்ட மக்களால் விரைவில் நிறைவேற்றி வைக்கப்படுமென்ற நம்பிக்கை நமக்குண்டு. இம்மாவட்ட மக்களால் விரைவில் நிறைவேற்றி வைக்கப்படுமென்ற நம்பிக்கை நமக்குண்டு.

மீண்டும் எம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் 1996.07.26 அன்று பெரும் இடப்பெயர்வு ஏற்பட்டது. இக்காலப் பகுதியில் எமது ஆலயம் பேரழிவைச் சந்தித்தது. ஆலயத்தின் பெரும்பகுதி சிதைவடைந்தது மீண்டும் மக்கள் 2000ம் ஆண்டு தமது வீடுகளுக்கு வரத்தொடங்கினர். இந்நிலையில் ஆலயபரிபாலன சபையினர் 2000ம் ஆண்டின் இறுதியில் மூர்த்திகளை பாலஸ்தாபனம் பண்ணியதன் பின்னர் வர்த்தகப் பெருமக்கள் இறையுணர்வு கொண்ட அன்பர்களின் ஆதரவுடன் திருப்பணிகளை மேற்கொள்ளத் தொடங்கினர். இதன்போது நிதி பற்றாக்குறை ஏற்படவே ஆலயபரிபாலன சபையினர் தென்பகுதி மக்களிடமும் யாழ்ப்பாண மக்களிடமும் உதவி கேட்டுப் பெற்றுக் கொண்டனர். அத்துடன் இந்துகலாசார அமைச்சர் கௌரவ.தியாகராராசா.மகேஸ்வரன் அவர்களும், புனர்வாழ்வு அமைச்சும் உதவிக்கரம் நீட்டின. பெருங்கஷ்டத்தின் மத்தியில் ஆலய புணருத்தாரண வேலைகளை நிறைவு செய்து முடித்து, கிரியா தத்வநிதி சிவஸ்ரீ கு.இரத்தினேஸ்வரக் குருக்களின் வழிகாட்டலில் சிவாச்சாரிய திலகம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்களின் தலைமையில் 09.09.2002 திங்கட்கிழமை காலை எம் பெருமான் முருகனின் மஹா கும்பாபிஷேகம் நிறைவடைந்தது. அன்றைய தினம் நண்பகல் 12.00 மணிக்கு ஆலய இராஜகோபுரத்திற்கு அத்திவாரம் இடும் நிகழ்வு இடம்பெற்றது. இப்பணி இனிது நிறைவடைய அன்பர்களின் உதவியை வேண்டி நிற்கின்றோம்.

2002ம் ஆண்டிலிருந்து புதுப் பொலிவுடன் கந்தப் பெருமான் மக்களின் இடர்களைந்து சுபீட்சமாக வாழச்செய்தார். நித்திய நைமித்திய பூசைகள் சிறப்பாக இடம்பெற்று வந்தது. விசேடமாக வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், புரட்டாதிமாத சனிக்கிழமை விஷேட அபிஷேக ஆராதனை, கந்தஷஷ்டி அபிஷேகம், சூரன்போர், மாதக் கார்த்திகை, திருக்கார்த்திகை, திருவெம்பாவை அபிஷேகம், திருவாதிரைத் தீர்த்தம், தைப்பூச சங்காபிஷேகம், சிவராத்திரி நான்கு ஜாமப்பூசை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெறிக்கழக சமய அறிவு நிகழ்வு, மாசி மகம், பங்குனி உத்தரம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்ற லுயிர்கள் இழக்கப்பட்டன. பொதுமக்களின் சொத்தெல்லாம் அழிக்கப் பட்டது. ஆவியோ நிலையிற் கலங்கியது யாக்கை அகத்ததோ புறத்ததோ என்று அறியாத மக்களின் கரடுமுரடான பயணம் புதுமாத்தளன் பகுதிவரை நீடித்தது. அங்கிருந்து நாட்டின் பல பாகங்களையும் சென்றடைந்த மக்கள் துன்பவாழ்வைத் தொடர்ந்தனர். 2010ம் ஆண்டின் ஆரம்பத்தில் மீளக்குடியேற்றம் பெற்று மக்கள் தம் வாழ்வை இம் மாவட்டத்தில் வாழத் தொடங்கினர். ஆலயபரிபாலன சபையினரும் ஒருவாறு வந்து சேர்ந்தனர். பல பொதுக் கூட்டங்களை வைத்து ஆலயத்தை இயங்க வைத்தனர். 2010.04.01 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. பரிபாலன சபையின் கடின உழைப்பின்பேரில் 24.01.2011 மஹா கும்பாபிஷேகமும் இறையருளால் நிறை வடைந்ததுள்ளது. மஹா கும்பாபிஷேகத்தன்று ஆசியுரை வழங்கிய கணேசானந்த மகாதேவ சுவாமிகட்கும், பிரதிப் பிரதம செயலாளர் திரு.தி.இராசநாயகம் அவர்கட்கும், பாராளுமன்ற உறுப்பினர் திரு.சி.சிறீதரன் அவர்கட்கும் எமதாலயப் பிரதமகுரு கிரியாதத்துவநிதி இ.இரத்தினேஸ்வரக் குருக்கள் அவர்கட்கும் யாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

நிறைவடைந்துள்ள மஹா கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள மலருக்கான அருளுரை வாழ்த்துரை விடயஞானங்களைத் தந்த பெரியார்களுக்கும் கிரியைகளைச் சிறப்புற நடாத்திமுடித்த அந்தணப் பெருமக்கள் யாவர்க்கும், பெருநிதியளித்த பெரியார்கள் அனைவருக்கும், சிறப்புற உழைத்த பரிபாலன சபையினருக்கும், மலர்க்குழுவினர்க்கும் பெருஞ்சாந்தி விழாவிற் கலந்தருள் பெற்ற யாவர்க்கும், மண்டலாபிஷேகத்தினைச் செய்ய முன்வந்து பொறுப்பேற்ற பெருந்தகைகட்கும் தலைவர் என்ற வகையில் மீண்டும் அனைத்துள்ளங்கட்கும் எல்லாம் வல்ல முருகப் பெருமானின் அருள் கிடைக்க அவன் தாள் வணங்கி நிற்கின்றேன்.

**"யாவாக்குமாம் இன்பம் பெருகுக"**

**சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

## சுப்பிரமணிய சுவாமி துதி

அருவமுருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள்பன் னிரண்டுங்கொண்டே
ஒருதிருமுரகன் வந்தாய் குதித்தனன் உலகமுய்ய.

பன்னிரு கரத்தாய் போற்றி
பசும்பொன் மயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறு
முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக்
கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள்
இருக்கும்மா மணியே போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள்மிகு கிளி நகர் கந்தசுவாமி கோயில் வரலாறும் வழிபாட்டு முறைகளும்

திரு.சு.சிவதாசன்,
கிளி.கந்தசுவாமி தேவஸ்தான
அறங்காவலர் சபை உறுப்பினர்.

சைவ உலகத் தொண்டிலும் இலங்கை அரசியலிலும் தமிழர்களுடைய சைவப் பாரம்பரிய பண்பாட்டுக் கல்வியை மேம்படுத்துவதிலும் அளப்பரிய தொண்டாற்றியவரும் அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் அற்றவராகத் திகழ்ந்த மாமனிதர் சேர்.பொன்.இராமநாதன் அவர்களுடைய தொடர்புடையது கிளி நகர் கந்தசுவாமி கோவில். 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிளிநொச்சியூடாகப் புகையிரதப் பாதை அமைத்தல், நெடுஞ்சாலை அமைத்தல் என்பனவற்றோடு இரணைமடுக்குளக் கட்டுமானப் பணிகளும் நடந்தன. இரணைமடுக்குளக் கட்டுமானப் பணிகளை முன் நின்று முயற்சித்தவரான சேர்.பொன்.இராமநாதன் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் செல்லும் பாதையில் கிளிநொச்சியில் ஒரு விடுதி அமைக்க எண்ணினார். ஆதன் மொத்த வடிவமே பழையவைத்தியசாலை நுழை வாயிலுக்கு எதிரே உள்ள விடுதியாகும். யாழில் இருந்து வரும்போதும் கொழும்பில் இருந்து திரும்பி யாழ் செல்லும்போதும் இவ் விடுதியில் தங்கி குறிப்பாக இப் பகுதி அபிவிருத்தி வேலைகளை குறிப்பாக இரணைமடுக்குள கட்டுமானப் பணியை மேற்பார்வை செய்தார். இவர் தங்கும் நாட்களில் இவரைச் சந்தித்த அன்பர்கள் இங்கு ஒரு சைவ ஆலயம் கட்டித் தரும்படி கோரிக்கை விடுத்தனர்.

இக் கோரிக்கை நாளுக்குநாள் வலுத்து வந்தது. இதன் பயனாக கிளிநொச்சியில் உள்ள சைவ வழிபாட்டாளருக்கான காணியை அப்போதைய கிராம சேவையாளராகப் பணியாற்றிய முகாந்தரம் உயர்திரு வெற்றிவேலு அவர்கள் தனக்கு இருந்த காணியை ஆலயத்துக்குக் கொடுப்பதற்கு முன்வந்தார். அக் காணியை சைவ அடியார்கள் காடு வெட்டித் துப்பரவு செய்தனர். பின்னர் தற்போது இவ் ஆலயத்தின் களஞ்சிய அறையாக அமைத்துள்ள இடத்தில் ஒரு ஓலைக் கொட்டில் ஒன்று அமைத்து ஒரு வேலாயுதத்தை வைத்து வழிபடத் தொடங்கினர். பின்னர் படிப்படியாக ஆலயத்துக்கு நிலையம் எடுத்து அத்திவாரம்போட ஆயத்தமானது. இவ் ஆலயம் கிழக்கு வாசலாக அமைப்பதற்கு முடிபு எடுக்கப்பட்டது. அந்தநேரம் அங்கு வந்த சேர்.பொன்.இராமநாதனின் மருமகனாகிய திரு.சு.நடேசபிள்ளை அவர்கள் இவ் ஆலயத்தை காணிக்கு மேற்குப்புறமாக கண்டிவீதி அமைந்துள்ள படியாலும் மூலஸ்தானம் மேற்கு வாயிலாக இருக்கலாம் என்றும் இந்தியாவில் பல ஆலயங்கள் மேற்கு வாயில் அமைந்துள்ளது எனவும் எடுத்துக் கூறி மேற்கு வாயில் கோயிலாக கட்டப்பட்டது. கிளிநொச்சியில் அன்றைய காலகட்டத்தில் கிடைத்த தகவலின்படி 20ம் நூற்றாண்டின் தொடக்க காலமாக முதல் கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கலாம்.

இதேவேளை இரணைமடுக் குளக் கட்டுமானப்பணியில் மேற்பார்வையாளராக கடமையாற்றிய வெற்றிவேலு விதானையாரது தலைமையில் இவ் ஆலயப் பணிகள் நடைபெற்றன. இவர் தொடக்கி வைத்த பணிகளை இவரது மகள் சாந்தநாயகி கந்தையா குடும்பத்தினரால் தொடரப்பட்டது. இக் காலத்தில் அலங்காரத் திருவிழாக்கள் நடைபெற்றன. இதற்குப் பூசகராக பலாலி ஊரைச்சேர்ந்த அதியுயர் பிராமண வம்சத்தைச் சேர்ந்த குமாரசுவாமி சர்மா அவர்கள் நியமிக்கப்பட்டார். இவரின் விடாமுயற்சியினால் இவ் ஆலயம் படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்தது.

இவ் ஆலயத்தில் நாளாந்தப் பூசை செய்வதற்கும் ஐயாவின் வேதனம் கொடுக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கஷ்ரமானநிலை ஏற்பட்டது. அக் காலத்தில் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினராகவும் உதவி நீர்ப்பாசன அத்தியட்ச கருமான உயர்திரு அ.சிவசுந்தரம் அவர்களின் விடாமுயற்சியினாலும் அதே காலத்தில் யாழ் மாவட்டத்தின் அரசாங்க அதிபராக இருந்த உயர்திரு ம.சிறிகாந்தா அவர்களின் பிள்ளைகள் என்று கூறக் கூடியவகையில் 1958ம் ஆண்டு படித்தவாலிபர் குடியேற்றத்திட்டத்தில் வசித்துவந்த வயதில் மிகக் குறைந்தவருமாகிய ஓர் அன்பர் முன்வந்து அக்காலத்தில் கண்டி வீதியில் அமைந்துள்ள வர்த்தகப் பெருமக்களின் ஆதரவுடன் ஒரு கடைக்கு ஒரு ரூபா வீதம் நிதியை வசூலித்து மாதாமாதம் ஆலய பூசகரின் வேதனமும், பூசைச் செலவும் கொடுக்கக் கூடிய வகையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் வேளையில் கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் V.R.T என்று அழைக்கப்படுகின்ற வே.இ.தம்பிப்பிள்ளை அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக மாதம் ஒருவர் ஒரு பூசையை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக ஒழுங்கு செய்யும்படி ஆலோசனை வழங்கினார். அதன் அமைவாக

உயர்திரு ஆர்.சி.முருகேசு (சமாதான நீதவான்)

உயர்திரு வே.இ.தம்பிப்பிள்ளை (வர்த்தகர்)

உயர்திரு சுந்தரலிங்கம் (விவசாயி)

உயர்திரு சாந்தநாயகி கந்தையா

உயர்திரு வே.இராசேந்திரம் (ஓய்வூதியர்)

இவர்கள் ஐவரும் 5 மாத பூசைச் செலவைப் பொறுப்பேற்றனர். அதன்பின் வளர்ச்சி பெறப்பெற உண்டியலில் சேரும் பணத்தையும் வைத்து ஒரு வருடத்துக்கான பூசைகள் நடைபெற்றன.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்டகாலமாக சைவத்தையும் தமிழையும் வளர்த்த திருநெறிக் கழகத்தின் செயலாளராக தொண்டாற்றிய உயர்திரு த.நல்லதம்பி அவர்களின் பெரு முயற்சியால் இவ் ஆலயத்துக்கு ஒரு அறங்காவலர் சபை அமைக்க வேண்டுமெனக் கருத்தில் கொண்டு அப்போதய யாழ்மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த உயர்திரு ம.சிறிகாந்தா அவர்களின் ஆலோசனைப்படியும் அவர்களின் துணையுடனும் ஒரு அறங்காவலர் சபை தெரிவு செய்யப்பட்டது. முதல் அறங்காவலன் சபையின் உயர்திரு ஆ.சி.முருகேசு சமாதான நீதவான் தலைவராகவும். கனகபுரத்தைச் சேர்ந்த உயர்திரு நா.சோதிநாதன் அவர்கள் செயலாளராகவும், கரடிபோக்கு ஈஸ்வரன் அரிசி ஆலை முகாமையாளர் அவர்களும், உயர்திரு சு.பரமலிங்கம் அவர்கள் உப செயலாளராகவும், கரடிபோக்கு வர்த்தகர் வே.இ.தம்பிப்பிள்ளை பொருளாளராகவும் கொண்ட 19 பேர் உறுப்பினர்களாகக் கொண்ட அறங்காபன் சபை அமைக்கப்பட்டது. ஏற்கனவே இருந்த தலைவரும் செயலாளரும் காலம் சென்றமையினால் உயர்திரு சி.சுந்தரலிங்கம் ஐயா அவர்கள் தலைவராகவும், கணேச புரத்தைச் சேர்ந்த இ.நடராயர் அவர்கள் செயலாளராகவும், வர்த்தகர் திரு.க.கந்தப் பிள்ளை பொருளாளராகவும் கொண்ட சபை அமைக்கப்பட்டது. அதன்பின் தலைவர் காலமானதால் திரு.சோமசுந்தரம் 3ம் வாய்க் காலைச் சேர்ந்த விவசாயி திரு.த.சோமசுந்தரம் தலைவராகவும், பரவிப் பாஞ்சானைச் சேர்ந்த சி.விக்கினராஜா செயலாளராகவும், கணேச புரத்தைச் சேர்ந்த நடராஜா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டு அதன்பின் திரு. சோமசுந்தரம் அவர்கள் தலைவராகவும், திருநகரைச் சேர்ந்த திரு.சு.தியாகலிங்கம் அவர்கள் செயலாளரா கவும், காரைநகரைச் சேர்ந்த வர்த்தகர் க.சோமசுந்தரம் அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு தெரிவு செய்யப் பட்டது. அதன்பின் திரு.சோமசுந்தரம் செயற்பட முடியாமையினால் பரவிப் பாஞ்சானைச் சேர்ந்த பொன் விநாயகமூர்த்தி தலைவராகவும், தியகலிங்கம் அவர்கள் இறந்ததால் வர்த்தகர் செல்வரட்ணம் அவர்கள் செயலாளராகவும், உயர்திரு சிவானந்தம் அவர்கள் பொருளாளரா கவும் கொண்ட சபை தெரிவுசெய்யப்பட்டது. அதன்பின் தலைவர் கடமையில் இருந்து பொன்.விநாயகமூர்த்தி இறந்தபடியால் க.கந்தசுவாமி அவர்கள் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இவர் கடமையிலிருந்து ஓய்வு பெற்றபடியினால் கிளிநொச்சியில் பிறந்து கல்வி கற்று தற்போது மக்கள்வங்கி முகாமையாளராக கடமையாற்றும் உயர்திரு. ச. ஸ்ரீகௌரிபாலா அவர்கள் தலைமையில் தற்போது ஆலய அறங்காவற் சபை நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில் வழிபாட்டில் மூர்த்தி தல தீர்த்த மரபு

கலாநிதி ப.கோபாலகிருஸ்ண ஐயர்
B.A (Hons) (Cey) Ph.D (Jaffna)

எமது பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குபவை திருக்கோயில்கள். எனவே காலங்காலமாக அவை பண்பாட்டின் உறைவிடமாகவும் சமய வாழ்க்கையின் கேந்திரமாகவும் விளங்கி வந்துள்ளன. திருக்கோயிலும் அங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்தியும் தலப்பெருமைக்கு வழிவகுக் கின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே மரபு உருவாயிற்று.. மூர்த்தியை வழிபடுவதற்கு ஓரிடத்திற்கு செல்வது "தலயாத்திரை' என்றும் "தீர்த்தயாத்திரை" என்றும் குறிப்பிடுகின்றது.

புராணங்களில் இறைவனது பெருமை சிறப்பாகப் பேசப்படுகின்றது. எடுத்துக்காட்டாக விநாயகர் புராணம் விநாயகரின் மகிமைகளைக் கூறும். அதுபோன்று மகா புராணங்கள் சிவனது அட்ட வீரட்டங்களையும் விஸ்ணுவின் தசாவதார மகிமைகளையும் கூறுகின்றன. இத்தகைய புராண மரபை அடியொற்றிப் பல தலங்கள் இந்தியாவில் எழுச்சியுற்றன. இதன் காரணமாக எண்ணற்ற தல புராணங்களும் எழலாயின. இத்தகைய தலங்கள் பல ஐதீகங்களைக் கொண்டு விளங்கியதோடு மக்கள் பக்தியுடன் யாத்திரை செய்து வழிபடும் இடங்களாகவும் திகழ்ந்தன. சிவாகமங்கள் சிறப்பித்துக் கூறும் திருவுருவ வழிபாட்டிற்குப் புராணங்கள் கூறும் தெய்வீகக் கதைகளும் மரபுகளும் சிறந்த விளக்கமாக அமைந்தன. திருவுருவங் களுக்குரிய விளக்கங்களைப் புராணங்கள் கூற மூர்த்தி எழுந்தருளியிருக்கும் இடத்தின் மகிமையைத் தலபுராணங்கள் கூறின. புராணங்கூறும் தெய்விகக் கதைகளுக்கேற்ற தலங்கள் சிறப்பாகத் தென்னாட்டில் எழுச்சி பெற்றன. இவற்றில் சிவமகிமைக்குரிய சிவத்தலங்களும் விஷ்ணுவின் பெருமை கூறும் வைணவத் தலங்களும் அடங்குகின்றன. விநாயகருக்குரிய தலங்களுள் திருச்சி உச்சிப்பிள்ளையார் ஆலயம் குறிப்பிடத்தக்கது.

அருளாளர்கள் சில அற்புதச் செயல்களைச் சில தலங்களில் நிகழ்த்தினர். இத்தகைய அற்புதம் நிகழந்த தலங்கள் பின்னும் சிறப்படைந்தன. அற்புதம் சிறந்த தலங்களும் அருளாளர்களின் பாடல் பெற்ற தலங்களும் காலங்காலமாகச் சிறப்புப்பெற்று வருகின்றன. திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார்களின் பாடல் பெற்ற தலங்களும் ஆழ்வார்களால் மங்கள சாசனம் செய்யப்பட்ட திவ்விய தேசங்களும் அருணகிரிநாதருடைய திருப்புகழைப் பெற்ற முருகனது திருப்பதிகளும் அடியவர்களது வழிபாட்டிற்கும் பக்திப் பெருக்கத்திற்கும் உரிய இடங்களாக விளங்கின. சிதம்பரம், மதுரை, திருவாரூர் போன்ற தலங்களுக்கு ஏனைய தலங்களைவிடப் பெருமை அதிகமாயிற்று. முனிவர்கள் பூசித்த தலங்கள் புராணங்களில் புகழப்பெற்றன. இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகையாலும் சிறப்படைந்த 274 சிவத் தலங்கள் மிக முக்கியமானவையாகப் போற்றப் படுகின்னறன. இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள தலங்கள் இச் சிவத்தல எண்ணிக்கையில் இடம் பெறுகின்றன.

இந்தியாவில் தலங்களில் சிற்சில ஒவ்வொரு வகைச் சிறப்புக்காரணமாகத் தொகுதிகளாக வகுக்கப்பெற்றுப் போற்றப் படுகின்றன. எடுத்துக்காட்டாக முத்தித் தலங்கள் என்ற வகையில் காசி, காஞ்சி, வடமதுரை, அயோத்தி, பூரி, அவந்திகா, துவாரகை ஆகிய ஏழு தலங்களும் முக்கியமானவையாகும். இதே போன்று பஞ்ச பூதத்தலங்கள், தென்கைலாயத் தலங்கள், காசிக்குச் சமமான தலங்கள், பஞ்ச சபை தலங்கள், அட்ட வீரட்டத் தலங்கள், சப்த விடங்கத் தலங்கள் எனப் பல்வேறு வகையாகத் தலங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இத்தகைய தல விசேடத்தின் பயனாய் யாத்திரிகர்கள் இவற்றை தரிசித்து வழிபடுவது சமயச்சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாக அமைந்து விடுகின்றது.

திருக்கோயில்களில் நிகழும் கும்பா அபிஷேகத்தின் போது மூன்று அம்சங்கள் மூர்த்தியில் நிலைபேறு கொள்கின்றன. திருவடிவம், யந்திரம், மந்திரம், ஆகியனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யந்திரத்தில் அமைக்கப்படும் பீஜமந்திரமும் தியான மந்திரங்களும் மூர்த்தியின் காரண சரீரமாகக் கொள்ளப்படுவன. சிவாசாரியார் மந்திரம் முதலிய தியானத்தினாலும் மற்றைய கிரியைகளினாலும் இறைவனது மூர்த்தியில் ஆவாகனம் செய்யும் வகையால் அது மந்திர மூர்த்தி என்ற சிறப்பைப் பெறுகின்றது. இது மூர்த்தியின் சூக்கும நிலையாகும். மூர்த்திக்கு நிகழும் மந்திரம், பாவனை ஆகிய மூன்றினாலும் இறைவனது திருவடிவத்தில் தெய்வ சாந்நிந்தியம் ஏற்படுகின்றது. திருக்கோயில் களில் கருவறையில் இடம்பெறும் மூர்த்திக்குரிய இலங்கணங்களாக மேற்கூறப்பட்டவை சிறப்பாகப் பொருந்துவனவாகும். இத்தகைய சிறப்புடன் விளங்கும் மூர்த்திக்கு "மூலமூர்த்தி" என்ற சிறப்புப் பெயர் உண்டு.

மூலமூர்த்தியிலிருந்தே உற்சவ மூர்த்தி களுக்குரிய சக்திகள் பெறப்படுகின்றன. மூலமூர்த்தி அசையாது நிலைபெற்றுக் கருவறையில் சாந்நித்தியம் கொண்டு விளங்குவதாகும். எனவே அதனை அசலமூர்த்தி எனச் சுட்டுவது மரபு. அகண்ட வாய அருவுருவா யிருக்கும் பரம்பொருளை மனத்தினால் தியானஞ் செய்து உடலினால் வழிபாடு செய்வதற்கு எமக்குத் துணை புரிபவையே இறைவனது திருவடிவங்கள். இறைவனின் தெய்வீக நிலையை எடுத்துக்கூறும் வெற்றி வாய்ந்தவை எனவே இவற்றை முறையாகவும் சாஸ்திர ரீதியாகவும் உருவாக்கும் வழிவகை பற்றிச் சிவாகமங்களும் சிற்ப நூல்களும் எடுத்துக்கூறுகின்றன. மந்திர நியாசத்தின் பின்னர் தான் திருவுருவங்களில் இறைவனது சாந்நித்தியம் ஏற்படுகின்றது. அதற்கு முன்னர் ஏற்படுவதில்லை. கும்பாபிஷேகக் கிரியைகள் மூலம் மந்திரங்கள் வழியாக இறைவனைத் திருவுருவத்தில் சாந்நித்தியம் கொள்ளச் செய்த பின்னர் முறையாக நித்திய நைமித்தியக் கிரியைகள் நிகழும் திருவுருவமும் மூர்த்தி விசேடத்தைப் பெறும்.

மூர்த்தி விசேடத்தினால் ஓர் ஊர் சிறப்பு பெறுமிடத்து, அது தலமாகச் சிறப்பிக்கப் படுகின்றது. இயற்கையாக மூர்த்தி எழுந்தருளும் இடம் தான் தோன்றி ஈச்சுவரமாகவும் மூர்த்தியானது "சுயம்பு மூர்த்தி" என்ற நிலையிலும் பெருமை பெறுகின்றன. இத்தகைய மூர்த்திக்குரிய தலங்களுக்குச் செல்வதே தலயாத்திரை. தலயாத்திரை திருக்கோயில் வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றது. புண்ணியத் தலங்கள் எம்முடைய உள்ளத்தைப் புனிதமாக்குவதோடு மனதை லயப்படுத்துவனவாகவும் உள்ளன. பக்தியை வளர்ப்பன உள்ளத்தில் அமைதியையும் நிறைவையும் தருவன. இத்தகைய தலங்களில் தீர்த்த விசேடமுண்டு. தீர்த்தமும் தலமும் ஒன்றுக்கொண்று ஆதாரமாக அமைவன. மூர்த்தியினால் ஒருவனுக்கு அருட்பேறுகிட்டும். தலத்தினால் மனத்தூய்மையும் தீர்த்தத்தினால் உடற்தூய்மையும் கிட்டுவன. எனவே தான் எமது வழிபாட்டிற்குரிய தெய்வங்களை வழிபடுவதிலும் பக்தி உணர்வை வளர்ப்பதிலும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்த தலங்கள் சிறப்புப் பெறுகின்றன. உண்மையான ஆத்மீக நலனுக்கு இவை பெரிதும் உதவுவன. பிரதிஷ்டை எனப்படும் கும்பாபிஷேகம் இவற்றின் சாந்நித்தியத்தை நாம் மனதார உணர்வதற்கும் வழிவகுக்கின்றது.

இந்தியாவில் மூர்த்தி, தல, தீர்த்த விசேடத்தினால் சிறப்புப்பெற்றவை வடக்கில் காசியும் தெற்கில் இராமேஸ்வரமும் எனக் கூறலாம். "காசிக்குப் போனால் புண்ணிய முண்டு" என்பதும் "கங்கையில் மூழ்கி நீராடினால் செய்த வினைகள் அகலும்" என்பதும் ஆஸ்திகர்களின் நம்பிக்கையாகும். இவ்விரு தலங்களை எல்லையாகக் கொண்ட திவ்விய பூமி "புண்ணிய பாரதம்" எனப் போற்றப்படுகின்றது. இந்துக்களின் புனிதத் தலங்களில் காசி, மூர்த்தி, தல விசேடமும் கங்கை தீர்த்த விசேடமும் கொண்டு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. சோழர் காலத்தில் தென்னாட்டில் பெருமையுடன் விளங்கிய கங்கை கொண்ட சோழபுரம் கங்கையின் புனித மகிமையை நினைவு கூறுகின்றது. காசிக்குச் செல்பவர்கள் தங்கள் யாத்திரையை இராமேஸ்வரத்திற்குச் சென்று நிறைவு செய்வது மரபாகும். இவ்விரு தலயாத்திரைகளும் ஆன்மீகத்துறையில் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்கள் ஒரே குறிக்கோளுடன் ஒன்றுபடும் நிலையை எடுத்துக் காட்டுவதாக உள்ளன. இவ்விரு தலங்களும் "புண்ணிய ஆட்சித் தலங்கள்" எனவும் போற்றப்படுகின்றன. இவ்விரு தலங்களையும் தரிசித்தால் இவற்றின் இடைப்பட்ட அனைத்துத் தலங்களையும் தரிசித்த பேறு கிட்டும் என்பதும் மரபுவழி நம்பிக்கையாகும். காசிக்குரிய மற்றொரு பெயர் வாரணாசி என்பதாகும். கங்கைப் பெரு நதியில் கலக்கும் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுகளுக்கிடையில் இத்தலம் விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. இங்கு தலப்பெருமையுடன் விளங்குபவர் "விசுவநாதர்" என்ற திரு நாமத்தினால் சிறப்பிக்கப்படுகின்றார். காசியில் ஒரே நாளில் வழிபடவேண்டிய சந்நிதிகளில் துண்டி ராஜ விநாயகப் பெருமானின் சந்நிதியும் முக்கியமானதாகும். இப்புண்ணிய தீர்த்தத்தின் மணிகர்ணிகை, ஞானவாவி, கங்கை ஆகிய மூன்றும் முக்கியத்துவமுடையன புனித கங்கையில் அறுபத்து நான்கு நீராடற்றுறைகள் அமைந்தள்ளன. இவற்றைக் "காட்" (கட்டம்) என்று கூறும் மரபுண்டு. அசிசங்கம் கட்டம், தசாசுவமேத கட்டம், வருணசங்கம் கட்டம், பஞ்ச கங்கா கட்டம், மணிகர்னிகா கட்டம் ஆகிய பெயர்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவற்றை உள்ளடக்கிய யாத்திரையும் இவ்வைந்து தீர்த்தங்களிலும் ஒரே நாளில் நீராடுவதும் "பஞ்ச தீர்த்த யாத்திரை" என அழைக்கப்படுகின்றது.

காசி யாத்திரையின் பின்பு இராமேஸ்வரம் சென்று தனுஷ் கோடியில் தீர்த்தமாடி இராமேஸ்வர லிங்கத்தை வழிபடின் காசி யாத்திரையின் முழுப்பயனும் கிட்டுவதோடு யாத்திரையும் நிறைவுபெறும் என்பது நம்பிக்கை. இத்தலத்தில் அறுபத்து நான்கு தீர்த்தங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இவற்றுள் சேது தீர்த்தம் முக்கியத்துவம் உடையது. தனுஷ்கோடி "கோடித்தீர்த்தம்" என்று வழங்கப்படுகின்றது. இத்தீர்த்த நீரையும் மக்கள் கலசங்களில் கொண்டு செல்வது மரபு. கங்கை நீரையும் மக்கள் கொண்டு செல்லும் மரபுண்டு. எக்காலத்திலும் இந்நீர் கெடாது என்பது ஐதீகமாகும். இத்தகைய தீர்த்தங்களில் நீராடுவதால் ஏற்படும் பயன்களும் கூறப் படுகின்றன.

புனிதமாகக் கருதப்படும் குளங்களும் கடற்பகுதிகளும் தீர்த்த மாடுவதற்கு உரியவையாகின்றன. சிறப்பான நாட்களில் இந் நீர் நிலைகளில் தீர்த்தமாடுவதற்கு மக்கள் ஏராளமாகக் கூடுவர். இந்தியாவில் இவ்வகையில் "கும்பமேளா" முக்கியத்துவம் பெறுகின்றது. ஹிரித்துவார், பிரயாகை, உஜ்ஜியினி, கோதாவரி ஆகிய நான்கு இடங்களிலும் முறை வைத்து இப் புனித நீராடும் விழா பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வோர் இடத்திலும் நடைபெறும். தெற்கில் பன்னிரண்டு ஆண்டிற்கு ஒரு முறை கும்பகோணத்தில் உள்ள புனித குளத்தில் நடைபெறும் நீராடும் விழா "மகாமகம்" என்று வழங்கப்படுகின்றது. அனைத்துக் கோயில்களும் மகோற்சவ காலங்களில் இறுதி நிகழ்ச்சியாகிய "தீர்த்தம்" முக்கியத்துவம் பெறுகின்றது. கொடியோற்றம், தேர், தீர்த்தம் என்பன திருக்கோயில் நைமித்திகங்களில் சிறப்புப் பெறுவன.

இவ்வாறாக மூர்த்தியின் பெருமையால் தலம், தீர்த்தம் சிறப்புற்று மக்களது ஆன்மீக வாழ்க்கை செம்மையுறப் பெரிதும் உதவுகின்றன. திருக்கோயில் வழிபாட்டில் சிறப்புப்பெறும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவை பற்றித் தாயுமானவர்

**மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர்**
**வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே**

என உணர்த்தியுள்ளமை மனங்கொளத் தக்கதாகும். எனவே திருக்கோயில் வழிபாட்டின் அடிப்படை உபாசனையாக இவை விளங்கு கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**உசாவியவை:**


1. 10 ஸ்ரீ வைஷ்ணவ திவ்ய நேச வைபவமும் புராண அபிமானங் ஸ்தலங்களும், தி லிட்டில் பளவர் கம்பெனி சென்னை 1986
2. மகாலிங்கம்,எஸ். தலவரலாறு அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயில் திருச்சி. 1979
3. முத்துப்பிள்ளை .சி சிறப்பு மிக்க சிவாலயங்கள், பைலட் பப்ளிகேஷன்ஸ் சென்னை. 1978
4. முத்தையா. கே.எஸ்.காசி அல்லது நமது புண்ணிய பூமி முத்தையா பிரஸ் சென்னை 1929


நன்றி

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A.Ketheeswaran
Assistant Director Planning,
District Planning Secretariat,
Kachcheri. Kilinochchi.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விம்பஸ்தாபனம் நடைபெறுதல்



மூலாலயத்தில் மூலவிக்கிரகமான
வேல் ஸ்தானம் செய்தல்



பரிபாலன சபைத் தலைவர்
திரு.ச.ஸ்ரீகௌரிபாலா (செயலாளர்)
திரு.செ.செல்வரத்தினம்
ஆகியோரால் மூலமூர்த்தி ஸ்தாபனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் பண்பாட்டுத் தொன்மையும் தொல்லியல் மூலங்களும்

பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா
தொல்லியல் –வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வடமாகாணத்தின் வரலாற்றில் குடா நாட்டிற்கு வெளியே பண்பாட்டுப் பொருளாதார முக்கியத்தவம் வாய்ந்த நிலப்பரப்பின் மையமாக கிளிநொச்சி விளங்குவதனைக் காண்கின்றோம். இந்நகரினுடைய அமைவிடமானது புராதன, மத்திய கால மக்களின் வாழ்வுப் புலத்திற்கு மையமாக அமைந்த இரணைமடுக் குளத்தினை பகைப்புலமாகக் கொண்டு அமைந்திருக்கும் நிலப்பரப்பாகக் காணப் படுவதன் காரணத்தினால் நீர்ப்பாசன விவசாய உற்பத்தியுடன் இணைந்த ஒரு வாணிப நகரமாக அந்நகர் எழுச்சிபெறுதற்கு வாய்ப்பாயிற்று. இலங்கையில் தோற்றம் பெற்ற புராதன பாளி நூல்களிலோ அல்லது மத்தியகாலத்தில் இலங்கையில் தோற்றம் பெற்ற சிங்கள, தமிழ் இலக்கியங்களிலோ கிளிநொச்சி நகர் பற்றிய குறிப்புக்கள் எவையும் இடம்பெற்றிருந்தமைக் கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. கிளிநொச்சி என்ற பெயர் ஏற்பட்டதற்கான காரண-காரிய விளக்கங்களோ அல்லது அவ்விடப்பெயரைக் குறித்த ஐதீகங்கள் எவையாயினும் கிடைத்திருக்க வில்லை. ஆனால் கிளிநொச்சியை மையமாகக் கொண்டு அதனைச் சூழ்ந்து காணப்படுகின்ற ஏனைய மையங்களில் வரலாற்றுக்கு முற்பட்டகால தொல்லியல் எச்சங்கள் கிடைத்த வண்ணம் உள்ளன. கிளிநொச்சிக்கு வடக்கே ஆதிவட்டக்கச்சி என்ற மையத்தில் சோழர்கலத்திற்குரிய தொல்லியற் சின்னங்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் மிகமுக்கியமாக குறிப்பிடப்படவேண்டியது சோழர் கலைப் பாணியில் உருவாக்கப்பட்ட பார்வதியினுடைய வெண்கலப் படிமமாகும். கிளிநொச்சிக்கு வடகிழக்காக காணப்படுகின்ற வட்டக்கச்சி என்ற நிலப்பரப்பானது கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்திற்குரிய தொல்லியல் எச்சங்களை கொண்டுள்ளமையைக் காண்கின்றோம். மல்வில் விஷ்ணு ஆலயத்தின் குளக்கரையிலிருந்து சுடுமண்ணாலான சிற்பங்கள் அதிகளவில் பெறப்பட்டமையைக் காண்கின்றோம்.







இச் சிற்பங்கள் பல வகைப்பட்டவை யாகக் காணப்படுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்டகால மையங்களில் கிடைத்த சுடுமண் சிற்பங்கள் போன்று இங்கும் சிற்பங்கள் கிடைத்துள்ளன. அவற்றை அடிப்படையாக கொண்டு அவதானிக்கும் பொழுது வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்பு மையமாக வட்டக்கச்சியிலுள்ள மல்வில் பிராந்தியம் காணப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. கிளிநொச்சி நகருக்கு தெற்கே உருத்திர புரத்தில் பல்லவர் சோழர் கால கட்டிட, சிற்ப எச்சங்கள் கிடைத்த வண்ணம் இருப்பதைக் காண்கின்றோம். வவுனியாவில் பெரிய புளியங்குளத்தில் தமிழ் பிராமிச் சாசனங்கள் கிடைத்துள்ளமையைக் காண்கின்றோம். பழைய முருகண்டிக்கு மேற்கே அக்கராயனில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய தமிழ் பிராமிச் சாசனங்கள், அச்சுக்குத்தப்பட்ட வெள்ளிக்காசுகள், பாண்டிய சோழக் காசுகள், பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய சின்னங்கள் முதலாவதாக கண்டெடுக்கப்பட்டுள்ளன. கிளி நொச்சிக்கு மேற்கே பூநகரி மண்ணித்தலைப் பிராந்தியம் பழந்தமிழ் - திராவிட தொல்பொருள் சின்னங்கள் நிறைந்த வளமான கடற்கரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்தியமாக இருப்பதைக் காண்கின்றோம். இங்கிருந்து குறுணிக்கற்கால பண்பாட்டிற்குரிய சின்னங்கள் முதல் விஜய நகர நாயக்கர், போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலம் வரைக்கும் அந்தந்தப் பண்பாட்டிற்குரிய தொல்லியற் சின்னங்கள் கிடைத்த வண்ணம் இருப்பதைக் காண்கின்றோம். இவ்வாறான ஒரு பின்னணியான மையத்தினை தளமாகக் கொண்டு கிளிநொச்சி என்ற நகர் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்திருப்பதானது வடஇலங்கையின் பழந்தமிழர் பண்பாட்டு வரலாற்றில் தொல்லியலின் முக்கியத் துவத்தைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது. அவ்வாறான ஒரு பாரம்பரியம் மிக்க நகரிலே கந்தசுவாமி ஆலயம் அமைந்திருப்பது வடமாகாணத்தில் வாழ்ந்த மக்களுடைய சமய பண்பாட்டு முக்கியத்துவத்தினை பன்முகப் படுத்துவதாக உள்ளது.

கிளிநொச்சி என்ற இடப்பெயரானது எவ்வாறு தோற்றம் பெற்றதென்பதையிட்டு எமது இடப்பெயர் ஆராய்சியாளர்களால் தெளிவாக எக்கருத்தினையும் கூறமுடியாதுள்ளது. போத்துக்கேயரதும் ஒல்லாந்தரினதும் ஆவணங்களில் கிளிநொச்சி என்ற பெயர் குறிப்பிடப்படாமலிருந்ததற்கான காரணம் அவர்களால் அமைக்கப்பட்ட வீதிப் போக்கு வரத்தானது கிளிநொச்சிக்கு கிழக்கே எட்டு மைல் தொலைவிலுள்ள பழைய முருகண்டி நகரை மையப்படுத்தி அமைக்கப்பட்டமை யாகும். அதாவது டச்சு வீதியினால் இந்நகர் இணைக்கப்படாமல் இருந்தமையே ஆகும். வடமராட்சி கிழக்கில் கௌத்தன் துறை யிலிருந்து ஆரம்பிக்கும் துறைமுகப் போக்குவரத்து வீதியானது நல்ல தண்ணீர் தொடுவாய் - கரைச்சி ஊடாக பழைய வட்டக்கச்சியை இணைத்ததோடு இராமநாத புரத்தினூடாக பழைய முருகண்டி, மாங்குளம், மன்னார் என்ற நேர்கோட்டு வீதியாக அமைந்திருந்தமையைக் காண்கின்றோம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரைக்கும் மன்னாரிலிருந்து நடை பாதையூடாகவே வழிநடத்திக் கொண்டுவரப்பட்ட மாட்டுத் தொகுதி இந்தப் பழைய முருகண்டி பாதையூடாகவே வழிநடத்திக் கொண்டுவரப்பட்டு வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள கௌத்தன்துறையை அல்லது நாகர்கோயிலை வந்தடைந்தமையைக் காண்கின்றோம். இந்நிலையில் கிளிநொச்சியானது 1905 ஆம் ஆண்டில் அநுராதபுரத்திலிருந்து காங்கேசன் துறை வரையிலான இரும்புப்பாதை ஒன்று ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்டு வட மாகாணத்திற்கான புகையிரதம் ஓடவிடப்பட்ட போதே கிளிநொச்சி நகர் அம்மார்க்கத்துடன் இணைக்கப்பட்டு வடமாகாணத்திற்குரிய ஒரு பிரதான வர்த்தக நகராக எழுச்சி பெறுவதற்கான சூழல் கைகூடியது எனலாம். இப்பின்னணியிலேயே கிளிநொச்சி நகரின் நகரவியல் வளர்ச்சியும் சந்தைத் துறையில் அது ஈட்டிய பெரு வளர்ச்சியும் புகையிரத வீதி அமைப்பின் பின்னணியில் அடையப் பட்டமையைக் காண்கின்றோம். ஓர் அறிவியல் நகராக கடந்த முப்பது வருட காலமாக வடிவம் பெற்று வந்த கிளிநொச்சி நகர் இப்பொழுது சோபையை இழந்து, வெறும் நகரமாக மக்கள் குடியிருப்பற்ற சூனியப் பிரதேசமாக காட்சியளிப்பதனைக் காண்கின்றோம். இந்நிலையில் போரும் குடிப்பெயர்வும் நகரங்களினுடைய வீழ்ச்சிக்கும் வாணிப நடவடிக்கைகளின் பின்னடைவிற்கும் காரணமாக அமைந்த நிலையில் கிளிநொச்சி நகரின் நகர வளர்ச்சி சிறிது காலம் பின்தள்ளப்பட்டு வைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். எதிர்காலத்தில் இந்நகரின் வடிவம் எவ்வாறு அமையப்போகின்றது என்பதனை மாறிவரும் இலங்கையின் அரசியலே தீர்மானிக்கப்போவதையும் காணலாம்.


கிளி என்ற பெயர் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட நிலையில் பாரம்பரிய தமிழ் இலக்கியங்களில் பேணப்பட்டு வந்த நிலையில் கிளிநொச்சி என்ற இடப்பெயர் தோற்றுவிக்கப்பட்டமையைக் காணலாம். நொச்சி மரத்திலிருந்து கிளி உரக்கப் பாடியதனால் இப்பெயர் ஏற்பட்டதென சில நிறுவனங்களால் குறிப்பிடப்படுவதும் ஆய்விற்கு உரியதாகும். கிளிவண்ணை நல்லூார், கிளிசரியா, கிள்ளிவளவன், கிளியலூார், கிளித்தட்டு போன்ற பெயர்கள் கிளி என்ற வேர்ச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு தோற்றுவிக்கப் பட்டதைக் காண்கின்றோம். அவ்வாறான ஒரு பின்னணியில் கிளிநொச்சி என்ற இடப்பெயர் ஒரு வாணிப மையப்பிராந்தியத்தைக் குறிப்பிடுவதற்கு ஒரு காரணப் பெயராக வைக்கப்பட்டதென்றே தோன்றுகின்றது. புராதன வணிக சந்தைகளில் கிளியும் புறாவும் வணிகர்களுக்கு பேருதவி புரிந்த இரு பறவை இனங்களாக காணப்பட்டன. புறா தனது எஜமானது விருப்பத்தை அறிந்து அவனது செய்தியை அவன் ஏவும் இடங்களிற்கு எடுத்துச் சென்றது. அந்தவகையில் பாதை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசை போன்றவற்றை அறிவதற்கு புறா ஒரு கருவியாக பயன்படுத்தப்பட்டமையைக் காண்கின்றோம். இதே போன்று கிளி என்ற பறவையும் புராதன மனிதர்களினுடைய வணிக மார்க்கத்தில் பங்கெடுக்கப்பட்டமையைக் காண்கின்றோம். வணிகர்களினுடைய அதிர்ஸ்டத்தை தேர்வு செய்வதில் கிளி என்ற பறவை தனது எஜமானது ஆணையை நடைமுறைப்படுத்தியது. அது மாத்திரமன்றி பண்டக மையங்களிற்கு காவல் காத்து நின்ற பெருமையையும் கிளி பெற்றுக்கொண்டது. அவ்வாறான ஒரு பெருமை மிக்க பறவை வடமாகாணத்தின் வாணிப மையமாக விளங்கிய ஒரு நகருக்குரிய காரணப்பெயராக எம்முன்னோரால் வைக்கப் பட்டதென்பதில் எவ்விதமான சந்தேகமும் வியப்பும் கொள்ளத் தேவையில்லை. அந்தவகையில் நொச்சி என்ற மருத்துவ மூலிகைத் தாவரத்துடன் இணைந்து கிளி என்ற பறவையின் பெயர் முன்னொட்டாக கொடுக்கப்பட்ட விதம் வாணிப நகரொன்றின் சிறப்புப்பெயராக அமைவதற்குரிய காரண மாகியது.

இந்தப்பிராந்தியம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து நெல்வயல்கள் நிறைந்த ஒரு பிரதேசமாக இருந்து வந்தமையைக் காண்கின்றோம். இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முதல் கிளிநொச்சி யிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய ஒரு பெரிய தாழியும் கல்லினாலான ஒரு சந்தணகோபாலர் சிலையும்



இந்த நகரினுடைய தொன்மைக்கான இருப்பின் சான்றாதாரமாக கொள்ளப்படுவதைக் காண்கின்றோம். இங்கு வாழ்ந்த பெருங்கற்கால பண்பாட்டு மக்கள் பெருமெடுப்பில் நெற் பயிற்செய்கையை மேற்கொண்டு வந்தமையின் பின்னணியில் இந்த பறவை இனங்களுள் கிளிகளிலிருந்து நெற்தானியத்தை பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தமையின் நிமித்தமாக வயல்களின் மத்தியில் நொச்சி மரத்தினை நாட்டி அந்த மரத்திலிருந்து வெளிவரக்கூடிய மருத்துவ சுஹந்தத்திலிருந்து அந்தப் பறவைகளை நெற்தானியத்தை அபகரிக்காமல் பாதுகாத்த பெருமையைக் காண்கின்றோம். நொச்சி மரத்தில் கிளிப் பறவைகள் கூடியிருக்கமாட்டா. அவற்றிலிருந்து தூர விலகியே அவற்றின் சஞ்சாரம் அமையும். இந்த உண்மையினைப்புரிந்து கொண்ட எமது முன்னோரான பெருங்கற்கால மக்கள் நொச்சி மரத்தை நாட்டி வளர்த்து நெற்தானிய விளைச்சலினை பாதுகாத்துக் கொண்டு இருந்தமையைக் காண்கின்றோம். இக்காரணத் தினாலேயே கிளிநொச்சி என்ற பெயர் அவ்வயற் பிராந்தியத்திற்காகிப் பின்னர் அங்கு வாழந்த மக்கள் குழுமத்தினுடைய வாழ்விடத்திற்காக வழங்கியதைக் காண்கின்றோம். இதுவே கிளிநொச்சி நகர் தோற்றம் பெற்ற வரலாறாகும். இந்த நகரின் பெயர் உருவாக்கத்தில் எந்தவிதமான பாளி, பௌத்த, சிங்கள தொடர்புகளும் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சிப் பிராந்தியத்தின் வரலாற்றுத் தொன்மையை நிர்ணயம் செய்த பௌதீகவியல் உறுப்புக்களில் மிக முக்கியமானது இரணைமடு நீரேந்து பரப்பாகும். இலங்கைத்தீவின் வரலாற்றுக்கு முற்பட்ட கால பண்பாட்டு வளர்ச்சியில் வடபகுதியில் மிக முக்கியமான வாழ்வுமையத்தினை உருவாக்கித் தந்த ஒரு நீர்வள நிறுவனமாக இரணைமடு நீரேந்து பரப்பு அமைந்துகொண்டது. இந்த நீர்ப்பரப்பு வரலாற்றுக்கு முற்பட்டகால மனித வாழ்வியலையும் அதன் பரிணாம வளர்ச்சி யினையும் தீர்மானித்திருந்ததன் பின்னணியில் கிளிநொச்சி நகரின் வாழ்வியல் வடிவம் நெறிப்படுத்தப்பட்டமையைக் காண்கின்றோம். காலம்தோறும் நெறிப்படுத்தப்பட்டு வந்த அவ்வாழ்வியலானது பழைய கற்காலம், புதிய கற்காலம், குறுணிக்கற்காலம், பெருங்கற்காலம் என்ற நான்கு படிமுறைகளில் வளர்ச்சி பெற்று வந்தஓட வடமாகாணத்தின் மிக முக்கிய நிலப்பரப்பாக விளங்கும் கிளிநொச்சிப் பிராந்தியத்தின் உற்பத்திப் பண்பாட்டில் பெருஞ் செல்வாக்கைச் செலுத்தி இருந்தமையைக் கண்டெடுக்கப்பட்ட தொல்லியற் சான்றாதாரங் கள் உறுதிப்படுத்தி நிற்கின்றமையைக் காண்கின்றோம். தொல்லியல் ஆய்வாளர்கள் இரணைமடுப் பண்பாட்டின் தொன்மையை ஒரு இலட்சத்திலிருந்து மூன்று இலட்சம் ஆண்டுகள் வரை பின்நோக்கி நகர்த்துவதைக் காண்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த இரணைமடுப் பண்பாடானது தெற்கே மாங்குளம் வரைக்கும் மேற்கே மாதோட்டம் வரைக்கும் வடக்கே வடமராட்சி கிழக்கிலுள்ள வெற்றிலைக்கேணி வரைக்கும் பரந்து இருந்தமையை தொல்லியல் ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். அந்தவகையில் குறுணிக் கற்கால பண்பாட்டின் சீரான பரவலே கிளிநொச்சிப் பிராந்தியத்தை வட மாகாணத்திலுள்ள குடாநாடு தவிர்ந்த ஏனைய பிராந்தியங்களுடன் இணைந்து வைப்பதனைக் காண்கின்றோம்.

குறுணிக்கற்கால பண்பாட்டினுடைய குறைந்தபட்ச எல்லையாக கி.மு.1000 ஆம் ஆண்டையும் அதனுடைய பின்னோக்கிய எல்லையாக இற்றையிலிருந்து 30,000 வருடங்களையும் ஆய்வாளர்கள் கொள்வதனைக் காண்கின்றோம். இக்கால கட்டத்திலேயே கிளிநொச்சி என்ற மையம் அங்குள்ள தொன்மையான குடியிருப்புக்கள் வணிகத் தொடர்பாடல்கள் உருவாகியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. குறுணிக் கற்காலத்தின் முடிவில் நாகர் இனத்தவர்கள் நகரங்களினுடைய தோற்றத்திற்கும் வரலாற்றுக் காலத் தொடக்கத்திற்கும் இலங்கையில் வித்திட்டு நின்றது போன்று கிளிநொச்சியிலும் நாகர் வம்சத்தவர்களே அந்த நகராக்கத்திற்கு அடிப்படையை இட்டுக்கொடுத்தவர்களாக காணப்படுகின்றார்கள். நாகர் மரபினருடைய பண்பாட்டுச் சின்னங்கள் பெருமளவிற்கு பழைய முருகண்டி பிரதேசத்தில் புதையுண்டிருப் பதனைக் காண்கின்றோம்.

பழைய முருகண்டிக்கு மேற்குத் திசையில் அக்கராயன் என்ற மையத்தில் கண்டெடுக்கப்பட்டதமிழ் பிராமி வடிவங்களை நாகர் வம்சத்தினருடைய இருப்பினை அப்பிரதேசத்தில் உறுதிப்படுத்தியுள்ளமையைக் காண்கின்றோம். அக்கராயனிலிருந்து மீட்டெடுக் கப்பட்ட மீன் சின்ன வடிவமுடைய நாணயத் துண்டொன்றில் நாகன் என்று தமிழ் பிராமி வரி வடிவில் பொறிக்கப்பட்டு கிடைத்த பொறிப்புச் சான்று கிளிநொச்சியினுடைய தொன்மை வரலாற்றினை நாகர்களுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதற்கு உதவுகின்றது.




திட்டவட்டமான முறையில் பெருங் கற்கால பண்பாட்டிற்குரிய நாகர் வம்சத்தினர் வட மாகாணத்தினுடைய பெரும்பாலான பிரதேசங்களில் தமது குடியிருப்பை ஏற்படுத்தி நகரங்களை உருவாக்கி ஒரு தொன்மையான வரலாற்றுத் தொடக்கத்தினை ஆரம்பித்து வைத்திருந்தனர் என்பதனை நாம் உறுதியாக குறிப்பிடலாம். இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன்பு கிளிநொச்சியிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால ஈமப்படையலுக்குரிய தாழி எமது இக்கருத்தினை உறுதி செய்கின்றது எனலாம். மட்பாண்டக் கைத்தொழில் கிளிநொச்சிப் பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட காலம் இந்தப் பெருங்கற்காலம் என்பதனை கண்டுபிடிக்கப்பட்ட அந்த தாழி வெளிப்படுத்தி நிற்கின்றது. மட்பாண்ட வனைஞன் உருவாக்கிய சூளையும் சக்கரமும் கிளிநொச்சி நகரினது வளர்ச்சியை துரிதப்படுத்த உதவிய இரு அலகுகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. வடமாகாண நிலப்பரப்பின் மத்திய மையமாக கிளிநொச்சி எழுச்சி பெறுவதற்கு இந்த நாகர் வம்சத்தினரது பணிகளே அடிப்படையாக அமைந்திருந்தன. இந்தப் பிராந்தியத்தில் உருவாக்கப்பட்ட நீர்நிலைகள் குளக்கட்டுக்கள் வயற் பரப்புக்களின் பெயர்கள் நாகர் மரபின் எச்சங்களை இன்றும் நினைவுபடுத்திக் கொண்டிருப்பது கிளிநொச்சி நகரின் தோற்றத்தின் அடிப்படையை உறுதிப் படுத்துவதாக உள்ளது.

கிளிநொச்சிப் பிராந்தியத்தில் சமய வழிபாட்டுத் தலங்களின் தோற்றமும் வளர்ச்சியும் எமது இந்த ஆய்வில் மிக முக்கியமான ஓர் அம்சமாக அமைவதைக் காணலாம். உருத்திரபுரத்திலிருந்தும் மல்வில் விஷ்ணு கோயில் பரப்பிலிருந்தும் பழய முருகண்டி மையத்திலிருந்தும் கண்டு எடுக்கப்பட்ட சுடுமண் சிற்பங்கள் கிளிநொச்சிப் பிராந்தியத்தினுடைய சமய நம்பிக்கைகளை வழிபாட்டு முறைகளை கலை வெளிப்பாட்டு இயல்புகளை அமைத்துக் கொடுக்கின்றது. கிளிநொச்சியில் முருகன் கோயிலொன்று அமைந்திருப்பதற்கும் உருத்திரபுரத்தில் சிவன் கோயில் ஒன்றின் தொடர்ச்சியான வளர்ச்சியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பதற்கும் வட்டக்கச்சியில் மல்வில் விஷ்ணு கோயில் ஒன்றின் அமைவிற்கும் இந்த நாகர் மரபினரே அடிப்படையான பணிகளை ஆற்றியிருந்திருக்கின்றனர். நாகரினம் வளர்த்தெடுத்த தெய்வ வடிவங்களில் மிகவும் முக்கியமானதாக காணப்படுவது விநாயகராகும். பழைய முருகண்டிப் பிரதேசம் விநாயக வழிபாட்டிற்கு பெயர் பெற்றதாக இருந்திருக்கின்றது. போத்துக்கீசர் ஒல்லாந்தர் காலத்தில் பழைய டச்சுவீதி வழியாக பயணம் செய்தவர்கள் பழைய முருகண்டிப் பிரதேசத்தில் அமைந்திருந்த விநாயகருக்கு வழிபாடாற்றிச் சென்றிருக்க வேண்டும். பின்னர் ஆங்கிலேயர் காலத்தில் தற்போது அமைந்துள்ள புகையிரத இருப்புப் பாதையும் (1905 இல்) கண்டி வீதியும் மருங்கிக் காணப்படுகின்ற ஒரு இடத்தில் அவ்விநாயக வழிபாடு நகர்த்தப்பட்டு பாரம்பரியமாக வளர்த்தெடுக்கப்பட்டு வந்தமையை காண்கின்றோம். எனவே முருகண்டி விநாயகருடைய தோற்றத்தினதும் வளர்ச்சியினதும் பின்னணியில் நாகர் மரபினருக்கு பெரும்பங்கு உண்டு என்பதனை மறந்து விடக்கூடாது.




நாகர்கள் முருக வழிபாட்டில் அதிதீவிர பக்தர்களாக காணப்பட்டிருந்தனர் என்பதற்கு இவ் வம்சத்தினருக்குரிய ஈம சவ அடக்க மையங்களிலிருந்து பெறப்படுகின்ற வேல் (Spear head) போன்ற இரும்பினாலான ஒரு கருவி சான்றாக அமைவதனைக் காண்கின்றோம். யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் கந்தரோடையிலிருந்தும் ஒரு சிறிய பானைக்குள் வைக்கப்பட்ட நிலையில் இரும்பினாலான ஒரு வேலும் நீள் சதுரமான ஒரு இலட்சுமி நாணயமும் இக்கட்டுரையாசிரியரால் மீட்கப்பட்ட நிலையில் மேலே குறிப்பிடப்பட்ட கருத்து நிர்ணயப்படுத்தப்படுவதைக் காண்கின்றோம். அந்த வகையில் கிளிநொச்சி நகரில் காணப்படுகின்ற கந்தசுவாமி ஆலயம் நாகர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு பாரம்பரிய வணக்க முறைக்குரிய புராதன மையமொன்றிலிருந்து உருவாக்கப்பட்ட முருகனாலய கட்டமைப்பின் ஒரு வளர்ச்சியடைந்த வடிவம் என்றே குறிப்பிட வேண்டும். பெருங்கற்கால ஈழத்தளத்தின் கட்டமைப்பையுடைய இவ்வாலயச் சூழல் தொல்லியல் அடிப்படையில் ஆராயப்படவேண்டிய ஒரு தேவையாக இருப்பதனைக் காண்கின்றோம்.

கிளிநொச்சி நகருக்கு தென்மேற்காகக் காணப்படுகின்ற உருத்திரபுரம் சிவன் கோயிலினுடைய தோற்றம் வளர்ச்சி இன்றைய நிலையில் அதன் பரிணாமம் என்பன மிகவும் வலிமையான வரலாற்றுச் சான்றுகளை அதன் கட்டமைப்பாகக் கொண்டிருப்பதனைக் காண்கின்றோம். தென்னிந்தியாவில் பல்லவர் கால பக்தி இயக்கத்தின் சூழலில் உருத்திரபுரம் சிவன் கோயில் எழுச்சியடைந்திருக்க வேண்டும் என்பதனை அங்கு கண்டெடுக்கப்பட்ட பல்லவர் கால சிற்பப்பாணியையுடைய பல சிற்பங்கள் உறுதிப்படுத்தி நிற்கின்றன. உருத்திரபுரம் சிவன் கோயிலுடன் பௌத்த சமயத் தொடர்பு இணைந்து காணப்படுவதன் தார்ப்பரியம் பல்லவர் கால பக்தி நெறியின் பின்னணியில் பௌத்தத்திற்கு எதிராக எழுந்த கோயில் முகாமை நடவடிக்கைகளில் உருத்திரபுரம் சிவன் கோயிலும் பங்கு கொண்டிருக்கவேண்டும் என்பதனை சுட்டுவதாக எண்ணுவதில் தவறேதும் இருக்குமென எண்ணமுடியாது. வடஇலங்கையை அனுராதபுரப் பௌத்த சமயத்தின் செல்வாக்கிலிருந்து பாதுகாப்பதற்காகவும் இதிலிருந்து மீட்டெடுப்பதற்காகவும் உருத்திரபுரம் சிவன் கோயிலின் முகாமை தொழிற்பட்டிருக்க வேண்டும் என எண்ணத்தோன்றுகிறது. தென் இந்தியாவைப் போலல்லாது இலங்கைத் தீவில் பௌத்தத்திற்கும் சிவ வழிபாட்டிற்குமிடையே இடையறாத போராட்டம் நிகழ்ந்து வந்த நிலையில் வட இலங்கையில் உருத்திரபுரம் சிவன் கோயில் பல்லவர் காலத்திலேயே ஸ்தாபிக்கப்பட்டு அநுராதபுரத்தில் வளர்ச்சிபெற்றிருந்த பௌத்த சமயத்திற்கு எதிரான ஒரு முரண் போக்கை முகாமைப்படுத்தியிருந்த வகையை உருத்திரபுரத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்தி நிற்கின்றன. கிளிநொச்சி நகர் பற்றிய ஆய்வில் உருத்திரபுரம் சிவன் கோயிலை இணைத்துப் பார்க்காமல் அவ்வாய்வினை பூரணப்படுத்த முடியாது. வட இலங்கையில் மிகப் பிரமாண்டமான பௌத்த எதிர்ப்பியக்கத்தை நிலைநிறுத்தியிருந்த சிவன் கோயில்களுள் உருத்திரபுரம் சிவன் கோயிலுக்கு மாபெரும் பங்கு ஒன்று உண்டு என்பதனை வரலாற்று ஆய்வாளர்கள் இன்னும் கண்டுகொள்ளவில்லை. பல்லவர் காலத்தில் உருவான இந்தச் சிவன் கோயில் பௌத்தத்தினுடைய முழுமையான செல்வாக்கிற்குட்படாது மிகவும் தனித்துவமான வகையில் நிலைத்து நின்று சோழர் காலத்திலும் சிவ வழிபாட்டின் பெருமையை நிலைநிறுத்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற ஓர் நிறுவனமாக காணப்பட்டிருந்த வரலாற்றை அநுராதபுரத்திலுள்ள ஏனைய சிவன் கோயில்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். அநுராதபுரத்தில் பல்லவர் காலத்தில் உருவாக்கப்பட்ட முனீஸ்வரம் என்ற சிவன் கோயில் பௌத்த மதத்தின் அதீத வளர்ச்சி காரணமாகவும் நகராண்மைக்குரிய அதீதமதங் காரணமாகவும் அம் முனீஸ்வரம் சிவன் கோயிலைஅதன் வழிபாட்டு மறைகளிலிருந்து தளர்ச்சியடையச் செய்து அதனை ஒரு பௌத்த விகாரையாக மாற்றிவிட்டது. அந்த விகாரை இப்பொழுது இசுருமுனி என்று அழைக்கப்படுகிறது. முன்னீஸ்வரம் பௌத்த செல்வாக்கினால் ஈஸ்வரமுனி என்றாகி பின்னர் இசுருமுனியாகி விட்ட வரலாற்றை நாம் அநுராதபுரத்தில் காண்கின்றோம். ஆனால் வட இலங்கையில் உருத்திரபுரம் சிவன்கோயில் பௌத்தத்திற்கு எதிரான முகாமைத்துவத்தை முன்னெடுத்ததில் சற்றும் தளர்வடையாதிருந்த காரணத்தினால் அநுராதபுரத்தினுடைய பௌத்தச் செல்வாக்கு முற்றுமுழுதாக வட இலங்கையில் ஏற்படுவது தடுத்து நிறுத்தப் பட்டது. அந்த வகையில் கிளிநொச்சி நகரினுடைய சமய வரலாறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததனைக் காண் கின்றோம்.



கிளிநொச்சி நகரின் சமய வரலாற்றை வைஷ்ணவ மரபுகளுடனும் இணைத்துப் பார்ப்பதற்கேற்ற சூழல் எமக்கு கிடைத்துள்ளது. கி.பி முதலாம் நூற்றாண்டிற்குப் பின்னர் வைஷ்ணவ வணக்கத்தினுடைய மரபுகள் தென்னிந்தியாவில் வளர்ச்சியடைந்து சென்றமையைக் காண்கின்றோம். மாயோன்மேய காடுறை உலகமும் என்ற தொடர் அங்கு விஷ்ணுவினுடைய வழிபாட்டு மரபின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதை காண் கின்றோம். காட்டில் உறையும் கடவுளரான நீலவண்ணன் எடுத்துக்காட்டப்படுவது சங்ககால இலக்கியத்தில் மட்டுமல்லாமல் பௌத்த இலக்கியங்களில் சித்தரிக்கப்பட்ட கோட்பாடுகளுக்கும் புதியதல்ல. வைஷ்ணவ வழிபாடு பௌத்த மதத்துடன் ஒன்றிணைந்த சமபவம் வட இந்தியாவில் குப்தர் காலத்தில் நிகழ்ந்தமையைக் காண்கின்றோம். பின்னர் ஆந்திரப்பிரதேசத்திலிருந்து பௌத்தம் வாணிப மார்க்கங்களினூடாக கடல் கடந்த நாடுகளுக்கு பரவிய போது விஷ்ணு வழிபாடும் அதனைப் பின்தொடர்ந்து சென்று மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது. இதனால் இந்த இரண்டு மதங்களுமே வாணிப நெறிமுறைகளை இலக்க கிளிநொச்சி நகரின் சமய வரலாற்றை வைஷ்ணவ மரபுகளுடனும் இணைத்துப் பார்ப்பதற்கேற்ற சூழல் எமக்கு கிடைத்துள்ளது. கி.பி 1ம் நூற்றாண்டிற்குப் பின்னர் வைஷ்ணவ வணக்கத்தினுடைய மரபுகள் தென்னிந்தியாவில் வளர்ச்சியடைந்து சென்றமையைக் காண்கின்றோம். மாயோன்மேய காடுறை உலகமும் என்ற தொடர் அங்கு விஷ்ணுவினுடைய வழிபாட்டு மரபின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதை காண் கின்றோம். காட்டில் உறையும் கடவுளரான நீலவண்ணன் எடுத்துக்காட்டப்படுவது சங்ககால இலக்கியத்தில் மட்டுமல்லாமல் பௌத்த இலக்கியங்களில் சித்தரிக்கப்பட்ட கோட் பாடுகளுக்கும் புதியதல்ல. வைஷ்ணவ வழிபாடு பௌத்த மதத்துடன் ஒன்றிணைந்த சம்பவம் வட இந்தியாவில் குப்தர் காலத்தில் நிகழ்ந்தமையைக் காண்கின்றோம். பின்னர் ஆந்திரப்பிரதேசத்திலிருந்து பௌத்தம் வாணிப மார்க்கங்களினூடாக கடல் கடந்த நாடுகளுக்கு பரவிய போது விஷ்ணுவழிபாடும் அதனை பின்தொடர்ந்து சென்று மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது. இதனால் இந்த இரண்டு மதங்களுமே வாணிப நெறிமுறைகளைக் கொண்டு கடல் கடந்த நாடுகளில் பரந்து கொண்டமையால் பௌத்தத்துடன் வைஷ்ணவம் ஒரே கூரையின் கீழ் வழிபாடாற்றப்படக் கூடிய சூழ்நிலையைப் பெற்றுக்கொண்டது. இது கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குப்பின்னர் கி.பி நான்காம் நூற்றாண்டு வரைக்கும் நிகழ்ந்த சம்பவமாகும். மஹாயான பௌத்தசமய வழிபாட்டு மரபுகளின் பின்னணியில் விஷ்ணு வழிபாடும் பரந்து சென்று இணைந்து கொண்ட வரலாற்றின் புதிர் இதுவே ஆகும். இது கிளிநொச்சிப் பிராந்தியத்திலும் நடைபெற்றது. வட்டக்கச்சியிலுள்ள மல்வில் விஷ்ணு ஆலயம் தோற்றம் பெற்ற வரலாற்றுப்பின்னணியும் இதுவாகும். இவ்வாறு கிளிநொச்சி நகர் பற்றிய ஆய்வில் கணபதி வழிபாடு, முருக வழிபாடு, விஷ்ணு வழிபாடு ஆகிய மூன்று மரபுகளும் ஒன்று கலந்திருந்த முறையினைக் காண்கின்றோம். இவற்றின் பின்னணியிலேயே கிளிநொச்சிப் பிராந்தியத்தின் தொல்லியற் கருவூலங்களை நாம் எதிர் காலத்தில் இனங்கண்டு எமது இந்துத்திராவிட பண்பாட்டின் இருப்பினை அடையாளம் கண்டுகொள்ள முயற்சிப்போமாக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பரிவார்வ மூர்த்தியாகிய விநாயகப் பெருமானுக்கு
யாழ் மவாட்ட பாராளுமன்ற உறுப்பினர்
கௌரவ மாவை சேனாதிராசா அவர்கள்
எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு



மூலமூர்த்திக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர்
திரு.க.ஸ்ரீ கௌரிபாலாவினால்
எண்ணெய்க்காப்பு சாத்துதல்



கும்பாபிஷேக கிரியைகளின் போது
யாழ் மவாட்ட பாராளுமன்ற உறுப்பினர்
கௌர்வ முருகேசு சந்திரகுமார்
அவர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு



மூலமூர்த்திக்கு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
கௌரவ சிவஞானம் ஸ்ரீதரன் அவர்களினால்
எண்ணெய்க்காப்பு சாத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாங்கியத்தின் நுண்ணுடல் பற்றிய கொள்கையும் சைவசித்தாந்தத்தின் கருத்துநிலையும்

சைவப்புலவர் கு.றஜீபன் - M.A
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் கரைச்சி

## சாங்கிய அறிமுகம்

இந்திய தத்துவஞானத்தில் மிகப் பழமையான தத்துவங்களில் சாங்கியம் சிறப்பிடம் பெறுகிறது. உலகம் எவ்வாறு உருவாகியது? உயிர்களின் இயல்பு என்ன? இன்ப துன்பங்களினின்றும் விடுதலை பெறுதல் எப்படி? என்பன போன்ற மறைப்பொருள் வினாக்களுக்குப் பகுத்தறிவினைப் பயன்படுத்தி முதன் முதல் உலக வரலாற்றிலேயே விரிவான விளக்கம் கண்ட தத்துவம் தான் சாங்கியம் எனப்படுகிறது. சாங்கிய சூத்திரம் இயற்றியவர் கபிலமுனிவர் ஆவார். இவர் மகாபாரதத்தில் குறிப்பிடப்படும் கபிலர் என்றும், பிற்காலத்தவர் என்றும் கூறப்படுகிறது. பகவத் கீதையிலும், சுவேதாஸ்வரத உபநிஷதத்திலும் கூறப்படும் சாங்கியக் கருத்துக்களிலிருந்து சாங்கியம் புத்தருக்கும் கீதைக்கும் முற்பட்ட தத்துவம் என்று கூறப்படுகிறது. இன்று சாங்கிய தத்துவத்தின் ஆதார நூலாகவும் புகழ் மிக்க படைப்பாகவும் திகழ்வது 'ஈஸ்வர கிருஷ்ணரின் சாங்கிய காரிகையேயாகும்.

சாங்கிய நுண்ணுடலும் சைவசித்தாந்த ஒப்பீடும் சாங்கியம் உணர்த்துகின்ற நுண்ணுடல் பற்றிய கொள்கையானது உயிருக்கு கவசமாக இருக்கிற உருவமற்ற நிலையாகும். பிறப்பு இறப்பு என்பது உடலுக்கு மட்டுமே நிகழும் மாற்றீடாகும். அது நுண்ணுடலுக்கு நிகழ்வதில்லை. விடுதலை பெறும் வரை இது நிலைத்திருக்கின்றது. புத்தித்தத்துவத்தில் இருந்து தன்மாத்திரைகள் வரையிலான தத்துவங்கள் இதன் உள்ளடக்கமென்றும் நுண்ணுடல் பற்றி சாங்கியம் குறிப்பிடுகின்றது. இதேபோலவே சைவசித்தாந்தம் உடலுக்கு வேறாக சூக்கும உடல் ஒன்று உண்டு என்பதை சிவஞானபோதம் மூலம் உணர்த்துகிறது. சித்தாந்தத்தின்படி இறப்பு என்பது நிகழும்போது உயிர் தூல உடம்பை விட்டு சூக்கும உடம்புக்குள் செல்கிறது. அப்படி சூக்கும உடம்போடு சென்ற உயிர் அவற்றின் கம்பலன்களுக்கேற்ப சுவர்க்க நகரங்களை சென்றடைகிறது. இப்படி சுவர்க்க நகரங்களை அடையும்போது உயிரானது சூக்கும உடம்மை விட்டு நீங்கிச் செல்ல சூக்கும உடம்பு அழிகிறது. உயிர் மீண்டும் பிறப்பெடுக்கும் போது புதிதாக சூக்கும உடம்பு உருவாகின்றது. இதனால் தான் முற்பிறப்பு நினைவுகள் ஒருவனுக்கு மறுபிறப்பில் ஏற்படுவதில்லை. எனவே சூக்கும உடம்பானது விடுதலையின் போது மட்டுமே அழியும் என்பது சாங்கியர் கொள்கை. அது ஒவ்வொரு இறப்பின் பின்னும் அழியும் என்பது சைவசித்தாந்தக் கருத்துநிலை. ஆகவே உடலுக்கு வேறாக நுண்ணுடல் என்ற ஒன்று இருக்கிறது என்பதை சாங்கியத்திலிருந்து சைவசித்தாந்தம் பெற்றிருக்கலாம் என்று கருதமுடிகிறது. அடுத்து சாங்கியம் நுண்ணுடலுக்கு உரியவையாக புத்தி தத்துவத்திற்கு மேலதிகமாக எட்டுத் தொகுதியான உந்தல்கள் அல்லது இயல்பூக்கங்கள் இருக்கிறது என்று சாங்கிய காரிகையின் மூலம் குறிப்பிடுகின்றது. சாங்கியம் உந்துதல் என்ற சொல்லாட்சியால் நுண்ணுடலின் அசைவினை தோன்றுகின்றது. சைவசித்தாந்தம் ஆன்மா ஐந்து வகையான கோசங்களினால் மூடப்பட்ட நுண்ணுடலைக் கொண்டிருக்கிறது என்றும் குறிப்பிடுகிறது. இவைகள் தான் பரு உடலின் வாழ்க்கை நிலையை தீர்மானிப்பதுடன் குறிப்பிட்ட விளைவுகளை ஏற்படுத்துபவையாகவும் உள்ளன. இவை போற்றத்தக்க நல்நடத்தை காரணமாக நற்பிறப்பையும், தீய நடத்தை காரணமாக தீய பிறப்பையும் நுண்ணுடல் பெறுகிறது என சாங்கியம் கூறுகின்றது.

எனவே சாங்கியம் குறிப்பிடுகின்ற எட்டுத் தொகுதியான உந்தல்களை ஒன்றாக்கி அவற்றை சைவசித்தாந்தம் கன்மம் என்று அழைக்கிறது. இதனை ஆகாமிய கன்மம், சஞ்சித கன்மம் என்று வகைபிரிக்கிறது. இக்கன்மங்களின் வழியேதான் உயிரின் அசைவியக்கம் இருக்கிறது. இக்கன்மங்கள் மூலமே நல்வினை, தீவினை என்பன ஏற்பட்டு நல்வினைக்கேற்ப நல்பிறப்பையும், தீவினைக் கேற்ப தீய பிறப்பையும் ஆன்மா மேற் கொள்ளுகிறது. பிறப்பெடுக்கும் ஆன்மா பழைய வினைகளுக்கு ஏற்பவே முதலில் சூக்கும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பினைப் பெற்று அவற்றின் மூலமே தூல உடம்பைப் பெறுகிறது. ஆகவே சாங்கியம் குறிப்பிடுகின்ற நுண்ணுடலுக்கு எட்டுவகையான உந்துதல்கள் இருக்கிறது போன்று சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்ற சூக்கும தேகம் பெறும் உயிருக்கு கன்ம வினை உந்துதலாக இருக்கிறது. இரண்டு தத்தவங்களும் குறிப்பிடுகின்ற இந்த உந்துதல்களை உயிரின் அசைவிற்கும் நல்வினை, தீவினை ஏற்படவும் வழி அமைக்கிறது.

மேலும் சாங்கியக் கொள்கைப் படி அடிப்படை உந்தல்கள் பொருள் நிலைப்பட்ட உலகால் புத்தியில் பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது என குறிப்பிடுகிறது. இக் கருத்தை சைவசித்தாந்தம் உள்வாங்கி ஆன்மாவானது இயல்பிலேயே அறிவுடைய பொருள் அது ஆணவமலப் பீடிப்பினால் சிற்றறிவுடைய பொருளாகியது. இங்கு ஆணவமலப் பீடிப்பு என்பது ஆன்மாவுக்கு கன்மத்தின் வழியேதான் ஏற்பட்டது. கன்மவினைகள் குறையக் குறைய ஆன்மாவில் இருந்து ஆணவமலப் பீடிப்பும் அழிந்து கொண்டே செல்லும். ஆகவே சாங்கியம் கூறுகின்ற புத்தியில் பாதிப்பினை பொருள் நிலைப்பட உலகு ஏற்படுத்தும் என்பதை இன்னொரு வகையாகவும் சித்தாந்தத்தின்படி நோக்கலாம். உயிர் தன்னுடைய எஞ்சிய வினைகளை போக்கிக் கொள்வதற்காக இவ்வுலகில் பிறந்து அவற்றை போக்காமல் பொருள் நிலைப்பட்ட உலகின் கவர்ச்சியால் தான் வந்தகாரியம் மறந்து இன்னும் இன்னும் வினைகளைச் சேர்க்கின்றது. சாங்கியம் உணர்த்துகின்ற பொருள் உலகால் புத்தியில் பாதிப்பு என்பது சைவசித்தாந்தம் கூறும் மாயையோடு ஒப்பிடக்கூடியதாகவும் உள்ளது.

மேலும் சாங்கியம் குறிப்பிடுகின்ற அடிப்படையான உந்துதல்கள் உடன் பிறந்தவை, உள்ளாந்தவையெனினும் பிறப்புக்கள் தோறும் யாதாயினும் ஒன்றோ பலவோ ஆதிக்கம் பெற்றிருக்கும். பிறப்புக்கள் தோறும் நுண்ணுடலானது இவ் உந்துதல்களை எடுத்துச்செல்லும். இதன் மூலமாக நுண்ணுடலின் பிறப்பு வட்டத்தில் உந்தல்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்று குறிப்பிடுவது போன்று சைவசித்தாந்தம் இக்கருத்தியலை உள்வாங்கிய உந்தல்கள் என்பது வினையின் அசைநிலை என்று குறிப்பிட்டு பிறப்புக்கள் தோறும் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு குணங்களைக் கொண்டவனாகவும் ஒவ்வொரு ரசனை உடையவனாகவும் இருப்பதற்கு அவனுடைய எஞ்சிய வினைகளே காரணமாகின்றன என்கிறது. ஆகவே சாங்கியம் குறிப்பிடுகின்ற உந்தல்கள் பற்றிய கருத்தியலை சைவசித்தாந்தம் உள்வாங்கி இதன் அடித்தளத்தில் இருந்து தனது கருத்தியலை முன்வைத்திருக்கிறது.

✦✦✦

## சுப்பிரமணிய சுவாமி துதி

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைச்கோ தரனே

உருவா யருவா யுளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிகழ்வில் பங்கேற்கும் குருக்கள்மாரின் ஒரு பகுதியினர்



யாகசாலைப் பிரவேசத்திற்காக கும்பங்கள் எடுத்துவருதல்



பிரதான மூர்த்தி கும்பம் வீதிவலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மிகு கிளிநொச்சி முருகன் ஆலயம்

**கா.நாகலிங்கம்**
**(முன்நாள் அதிபர்)**
**111 உருத்திரபுரம்**

வடமாகாண மக்களின் உணவுக் களஞ்சியமாக விளங்கும் கிளிநொச்சி மாவட்டம் ஆரம்பத்தில் வன்னியென்றும் கரைச்சி என்றும் அழைக்கப்பட்டது. தென்மராட்சியில் இருந்த மக்கள் விவசாயம் செய்யும் நோக்கத்துடன் கச்சாய்த்துறைமுகமூடாக குஞ்சுப்பரந்தன் துறைமுகத்தை வந்தடைந்து பரந்தன் குஞ்சுப்பரந்தன் பகுதிகளிலும் வடமராட்சியில் இருந்தோர் கண்டாவளைத் துறைமுக மூடாக முரசுமோட்டை கண்டாவளை, கலவெட்டித்திடல் போன்ற பகுதிகளிலும் பச்சிலைப்பள்ளியில் இருந்தோர் தட்டுவான் கொட்டித் துறைமுகமூடாக ஆனையிறவுப் பகுதியில் கடற்கரை ஓரமாகக் குடியேறியமையால் இப்பிரதேசம் கரைச்சி என்று அழைக்கப் படலாயிற்று.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் தமது அரசினை நடாத்தி வரி அறவிடும் நோக்கத்தில் யாழ்ப்பாணத்தில் அரச அதிபர் ஒருவரை நியமனம் செய்து அவரின் கீழ் முக்கிய கிராமங்கள் தோறும் உடையார், கிராமத் தலைவர் போன்ற பதவிகளில் செல்வாக்கு வாக்கு வல்லமைகளை கொண்ட வர்களை நியமனம் செய்து வரி அறவிட்டுவந்தனர். 1950 ஆம் ஆண்டுவரை ஆங்கிலேயரே இலங்கையின் பலபாகங்களிலும் அரச அதிபராய் இருந்தனர். யாழ்ப்பாணத்தில் 1950 இல் இருந்த அரச அதிபர் கட்சன் துரை அவர்களே ஆவார்.

இவர்கள் தமது கடமையைச் செய்யப்பல்வேறு இடங்களிலும் உள்ளவர் களுடன் செய்திப் பரிமாற்றம் செய்து கொள்ளக் குதிரை வண்டி மூலம் கடிதங்களையும் பொருட்களையும் இடத்துக்கிடம் அனுப்பி வந்தனர். இவ்வண்டிகள் அஞ்சலோட்ட மூலம் குறுகிய தூரங்களுக்கு ஒன்றாகச் சிறிய தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுப் பாது காப்பாகவும் இருந்தன. இப்பாதை தட்டுவன், கொட்டியூடாக, முரசுமோட்டை, வட்டக்கச்சி, இராமநாதபுரம், இரணைமடுக் குளத்தின் கிழக்குப் பாதை வழியாகச் சென்றது. இவை இன்றும் பழைய கண்டிவீதி என அழைக்கப்படுகின்றது. இப்பாதையில் குதிரை வண்டித் தங்குமிடம் இருந்தமைக்கு முரசு மோட்டையிற் சிதைவடைந்து காணப்படும் செங்கற் கட்டிடம் சாட்சியாக உள்ளது. அத்துடன் கண்டாவளைக்கும் வட்டக்கச்சிக்கும் இடையே உடையார் கமம் இருப்பதும் இதனை உறுதிப்படுத்தும்.

1887 ஆம் ஆண்டளவில் யாழ் அரச அதிபராய் இருந்த சேர் துவைனம் அவர்கள் கனகராயன் ஆற்று நீர் இரணைமடுக் குளத்தினூடாகப் பரவிப்பாய்ந்து ஆனையிறவுக் கடலேரியில் விழுவதை அறிந்து அதனை மறித்துக் கட்டி இரணைமடுக்குளத்தை உருவாக்கிக் காடாகக் கிடக்கும் நிலைத்தை விவசாய நிலமாக்கினால் வருமானத்தைப் பெருக்கலாம். என்ற நோக்கத்துடன் ஒரு திட்டத்தைத் தயாரித்து இங்கிலாந்துக்கு அனுப்பி அங்கீகாரமும் பெற்றுக் கொண்டார். இக் குளத்தை கட்டும் வேலையை ஆரம்பித்து வைக்கக் கிளிநொச்சி வந்த போது சுறு சுறுப்பான வாலிபர் ஒருவர் பல வேலையாட் களை வைத்து வேலை செய்வதைக் கண்டு அவரை கிராமத் தலைவராக்கினார். அவரே முகாந்திரம் வெற்றிவேலு ஆவர்.

அக்குளம் கட்டும் பணியைத் தொடங்கும் போது பொருட்களைப் பாதுகாக்கும் களஞ்சியப் பொறுப்பாளராக ஆங்கிலம் தெரிந்த காங்கேசன்துறையைச் சேர்ந்த வாலிபர் ஒருவரை நியமனம் செய்தார். இவரே பின்னர் யாழ்ப்பாணத்தின் தவத்திரு யோகர் சுவாமிகள் ஆனார்.

இக்காலத்தில் வீரத்தெய்வங்களான அம்மன் ஆலயங்களும் சிவ ஆலயங்களும் இப்பகுதியிற் காணப்பட்டன. குஞ்சுப்பரந்தனிற் பொறிக் கடவை ஆலயமும் கல்வெட்டித்திடலில் நாகபூசனி அம்மன் ஆலயமும் முரசு மோட்டையில் சேத்துக்கண்டியம்மன் ஆலயமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரபுரத்திலும் துணுக்காயிலும் இருபெரும் சிவாலயங்களும் காணப்பட்டன.

கிளிநொச்சியிலே கிராமத் தலைவராய் இருந்த முதலியார் வெற்றிவேலு அவர்கள் கிளிநொச்சிக் கண்டிவீதியின் அருகே கிராமத்தின் மத்தியில் ஒரு முருகன் ஆலயத்தை அமைத்தார். இவ்வாலயம் இன்று கணேசபுரம் என அழைக்கப்படும் பழைய கொலனியின் பிரதான வீதியான மருதப்பு வீதியைப் பார்த்தபடி இருந்தது. இவ்வாலயமே கிளிநொச்சிப் பகுதியில் ஆக்கப்பட்ட முதலாவது முருகன் ஆலயம் ஆகும். இதன் முகாமையாளராக முகாந்திரம் வெற்றிவேலுவே இருந்தார். இவ்வாலயம் அமைந்த நிலமும் அவருக்குச் சொந்தமானதாகும்.

1950 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மிருசுவிலைச் சேர்ந்த வாலிபர் திரு.த.நல்லதம்பி அவர்கள் கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலையில் மருந்துக்கலவையாளராக நியமனம் பெற்று வந்தார். அப்போது இரணைமடுக் குளத்தின் இரண்டாவது குடியேற்றத்திட்டமான உருத்திரபுரம் குடியேற்றத் திட்டமும் ஆரம்பமாகி இருந்தது. இங்கு அரசினர் உயர்தரப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு பின்னர் குருகுலப்பிதாவும் அப்பு என எல்லாராலும் அழைக்கப்பட்ட திரு.வே.கதிரவேலு என்பவர் அதிபராக நியமனம் பெற்றார். இவருடன் இளம்வயதான ஆசிரியர் பலரும் நியமனம் பெற்றனர். இக்காலத்தில் வறுமையைக் காரணமாக வைத்து மதமாற்றமும் நடைபெற்றது.

திரு.த.நல்லதம்பி அவர்கள் சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டுமென முயற்சி செய்தார். ஆசிரியர்களையும் வாலிபர்களையும் சேர்த்துத் திருநெறிக்கழகம் என்ற பெயரில் ஒரு சமயப்பிரசார கழகத்தை உருவாக்கினார். இதன் தலைவராகச் சுதேசவைத்தியர் திரு.சி.அம்பலவாணர் அவர்களும் செயலாளராக திரு.த.நல்லதம்பி அவர்களும் இருந்தனர். அதன் தலைமைக் காரியாலயமாகத் தலைவரின் கடையே அமைந்திருந்தது. இவர்கள் இக்கழகம் மூலம் சமயச் சொற்பொழிவுகள் கூட்டுப்பிரார்த்தனை என்பவற்றை முருகன் ஆலயத்திலேயே நடத்தி வந்தனர். ஆலய முகாமையாளரும் இவர்களுக்கு உதவியாய் இருந்தார். ஆலய பூசகருக்கான வீடும் ஆலயத்தின் பின்புறத்தில் ஆக்கப்பட்டது.

இக்காலத்திலே இணுவிலிலே சமயத் தொண்டாற்றிவந்த வடிவேல் சுவாமியவர்களைக் கொழும்புத்துறையிலே இருந்த யோகர் சுவாமியவர்கள் சந்தித்து நீ உடனே கிளிநொச்சி போ அங்கு உனக்கு அதிக வேலையிருக்கிறது எனக் கூறினார். உடனே வடிவேல் சுவாமி அவர்களும் அவரது சீடர் மாதாஜீ பரமானந்தவல்லி அவர்களும் கிளிநொச்சி வந்து முருகன் ஆலயத்திற் தங்கினர். இதையறிந்த நல்லதம்பி அவர்கள் திருநெறிக்கழக உறுப்பினருடன் சேர்ந்து சுவாமியவர்களைச் சந்தித்து அப்போது உருத்திரபுரம் குடியேற்றத்திட்ட முகாமையாளராக இருந்த திரு கிருஷ்ணபிள்ளையின் உதவியுடன் கணேசபுரம் குடியேற்றத் திட்டத்தின் முகப்பில் இருந்த ஓலைக் குடிசையில் ஆச்சிரமம் அமைத்து அங்கே இருக்கச் செய்தனர். ஆச்சிரமத்தில் சுவாமி, மாதாஜீ, நல்லதம்பி ஆகியோர் இருந்தனர். அன்று முதல் நல்லதம்பியின் வருமானம் முழுவதும் ஆச்சிரமத்துக்கே செலவிடப்பட்டது. சுவாமியும் நல்லதம்பியும் பண்ணொடு பாடலில் வல்லவர்கள். சுவாமியவர்கள் ஆச்சிரமத்திற் பண்ணொடு பாடல் காவிய வகுப்பு என்பன நடத்தியதால் ஆசிரியர்கள் பலர் இதிற் பங்குபற்றினர். இவர்களது உதவியும் ஆச்சிரமத்துக்குக் கிடைத்தது. வெள்ளிக்கிழமை தோறும் முருகன் ஆலயத்திற் கூட்டுப்பிரார்த்தனை சமயச் சொற்பொழிவு என்பவற்றைச் சுவாமிகள் நடத்துவார். மாதாஜி அவர்கள் ஆச்சிரமத்தில் உணவு பரிமாறுவதுடன் வருவோர் அனைவருக்கும் தேநீர் கொடுத்து உபசரிப்பதுடன் ஆலயங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் தவறாது கலந்து கொள்வார். என்நேரமும் அருளொழுகு முகத்துடனே காட்சி கொடுப்பார்.

திரு.த.நல்லதம்பி அவர்களின் முயற்சியினாற் கிளிநொச்சியில் உள்ள பிரமுகர்கள் பதினொருவர் சேர்ந்து தமிழ்மொழியை வளர்க்கும் நோக்கத்துடன் கரைச்சிச் சைவவித்தியா அபிவிருத்திச் சங்கம் என்ற பெயரில் ஒரு சபை உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக யாழ் மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளரும் பின் நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.அ.சிவசுந்தரம் அவர்களும் செயலாளராக றங்கூன் மணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அழைக்கப்பட்ட அளவெட்டியைச் சேர்ந்தவரும் பரந்தன் விவசாயியுமான திரு.எஸ்.சுப்பிரமணியம் அவர்களும் பொருளாளராகவும் முகாமையாளருமாகத் திருநெல்வேலியைச் சேர்ந்த மலாயன் பென்சனியரும் பிரபல விவசாயியுமான திரு.நல்லதம்பி அவர்களும் கடமையாற்றினர். இவர்கள் கிளிநொச்சி நகரில் நான்கு சைவப்பாடசாலைகளை உருவாக்கித் திறம்பட நடத்திவந்தனர். இவர்கள் ஆரம்பித்த முதற் பாடசாலை தற்போதைய இந்துக்கல்லூரியாகும். இப் பாடசாலை 1952ல் ஆரம்பித்த போது இதன் முதல் அதிபராகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தற்பொழுது திரு.த.நல்லதம்பி அவர்கள் சின்ன நல்லதம்பி என அழைக்கப்பட்டார்.

இக்காலத்தில் கிளிநொச்சி முருகன் ஆலயத்தை பொது மக்களின் ஆலயமாக்க வேண்டும் என்ற முயற்சி ஆரம்பமாகியது. இதில் முன்னின்று உழைத்தவர்கள் திருநெறிக் கழகத்தினரும் ஆச்சிரமத்தினரும் ஆகும். இவர்களின் முயற்சியின் காரணமாக முகாந்திரம் வெற்றிவேலு அவர்களும் சம்மதித்துத் திருநெறிக் கழகத்திடம் நிர்வாகத்தை ஒப்படைத்தார். சொற்ப நாட்களில் அவர்கள் பரவிப்பாஞ்சான் கணேசபுரம் கடைத்தொகுதி மக்களையும் கிளிநொச்சியில் வசித்த பிரமுகர்களையும் அழைத்து ஆலய நிர்வாகசபையை அமைத்துப் பொது மக்களிடம் கையளித்தனர். முதலிற் சிவசுந்தரம் அ.சி.முருகேசு, அம்பலவாணர் போன்றோர் பங்கேற்று ஆலய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தனர். பின்னர் வருடாவருடம் நிர்வாகம் மாறிக் கொண்டே வந்தன.

அப்போதைய காலம் பணப்பரிமாற்றம் குறைந்த காலம். நித்திய நைமித்திய கிரியைகளுக்கும் ஆலய பரிபாலனத்துக்கும் குருமாருக்கும் கஷ்டப்பட்டே பணம் சேர்க்க வேண்டியிருந்தது. 1958 வரை கிளிநொச்சி வீதியில் கடைகளும் குறைவு. எனினும் பிரமுகர்களினதும் கடை முதலாளிகளினதும் கணேசபுரம் பரவிப்பாஞ்சான் மக்களினதும் பங்களிப்பே ஆலய வளர்ச்சிக்கு உதவியது. இதனுடன் கனகபுரம் முதலாம் பண்ணையைச் சேர்ந்த சிலரும் இதில் இணைந்து கொண்டனர். இத்திட்டத்திற் பதினொரு வாலிபர்களே குடியேற்றப்பட்டனர்.

நான் இந்து வித்தியாலய அதிபராய் இருந்ததுடன் கரைச்சிக் கிராமசபைத் தலைவராயும் இருந்த காரணத்தினால் சில காலம் வாலிபர்களின் கையில் நிர்வாகம் வந்தபோது நிர்வாகசபை உறுப்பினராகவும் உபதலைவராகவும் தலைவராகவும் இருந்து முருகன் ஆலயத்துக்குத் தொண்டு செய்யும் வாய்ப்புக் கிட்டியது. இதிற் பங்கேற்று ஒத்துழைப்பு வழங்கிய நா.சோதிநாதன் எனது மாணவனான மெம்பர் நடராசா, சி.விக்கினராசா, பிரபல வர்த்தகர் ஆகியோரின் சேவையை என்றும் மறக்க முடியாது.

கிளிநொச்சிப் பட்டினத்தில் முருகன் ஆலயம் அமைந்திருந்ததாய் ஆலயத்துக்கு ஒரு தேர் செய்யவென ஒரு திருப்பணிச் சபையை உருவாக்கி அதன் தலைவராகவும் கடமையாற்றும் வாய்ப்புக்கிட்டியது. இதற்கான மரங்களும் ஒரு தொகைப்பணமும் சேர்த்ததுடன் ஆலயத்தின் முன்வாசலில் இதற்கெனத் தனியான காரியாலயம் அமைத்து வெள்ளிக் கிழமைகளிலும் விசேட காலங்களிலும் பணம் சேகரிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் முக்கிய பங்குவகித்த மிளகாய்க்கடை நாதனை என்றும் மறந்துவிட முடியாது. தனது செலவிலே நிர்வாக உறுப்பினர்களைச் சிற்றூர்தி ஒன்றிலே யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பிரபல ஆலயங்கள் அனைத்திலும் உள்ள தேர்களைப் பார்வையிட்டு ஒரு நாள் முழுவதும் செலவிட்டது அவரது சிறப்பம்சமாகும் திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்ட போதும் அச் சேவை நிறைவேற முருகன் அனுக்கிரகம் கிட்டவில்லை.

தொடர்ந்து பல நிர்வாகங்கள் முயற்சி செய்த போதும் இன்று வரை கைகூடவில்லை. ஆலயத்துக்கென அன்னதான மண்டபம் கட்டி விசேட காலங்களில் அன்னதானம் வழங்கப்பட்டு வந்தது. 1958ல் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக கிளிநொச்சிப் பட்டினம் துரித வளர்ச்சியடைந்தது. கிளிநொச்சி கண்டி வீதியில் இரு பக்கத்திலும் வியாபார நிலையங்கள் அதிகம் கட்டப்பட்டன. இதனால் முருகன் ஆலயமும் சிறப்புற்று விளங்கியது.

1996ல் ஏற்பட்ட இடப்பெயர்வும் 2007ல் ஏற்பட்ட சொல்ல முடியாக் கஷ்டத்தை ஏற்படுத்திய இடப்பெயர்வும் ஆலயவளர்ச்சிக்கு பெரும் இடரினை உருவாக்கியது. எனினும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் அடியார்கள் பெரும் சிரமத்துடன் ஆலய பரிபாலன சபையை உருவாக்கி விடாமுயற்சியுடன் ஆலய வேலைகளை முடித்து எதிர்வரும் தை மாதம் கும்பாபிஷேகம் செய்ய முருகன் அருள் கிடைத்துள்ளது. இம்மாபெரும் பணியினைச் செய்து முடிக்கத்தொடர்ந்து பாடுபட்டுவரும் நிர்வாக சபையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

முக்கியமாக இதன் தலைவர் திரு. ச. ஸ்ரீகௌரிபாலன் செயலாளர் நிர்வாக உறுப்பினர் அனைவர்க்கும் முருகன் அருள் கிட்டப் பிரார்த்திப்பதுடன் முருகன் ஆலயம் சிறந்து வளர்ச்சியடையும் என்ற நம்பிக்கையுடன் எல்லோருடனும் சேர்ந்து எனது ஆசியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி, வணக்கம்

✦✦✦

## கூட்டு வழிபாடு

ஒரு தனி இழையை எளிதில் அறுத்து விடலாம். பல இழைகள் ஒன்றுபட்டுத் திரித்த கயிறு (வடம்) தேரை இழுத்துவிடும். அதுபோல பல அன்பர்கள் வாரத்திற்கு ஒரு நாள் கோயிலில் ஒன்றுபட்டுக் கூட்டு வழிபாடு செய்தால் திருவருளை ஈர்த்துவிடலாம். முஸ்லிம் அன்பர்கள் தினம் ஒன்றுக்கு ஐந்து வேளை தவறாமல் தொழுவதும் கிறிஸ்தவ அன்பர்கள் ஞாயிறுதோறும் ஆண், பெண் அடங்கலும் தங்கள் தேவாலயத்திற்குச் சென்று நியதியாகத் தொழுவதும் போல் இந்துக்களாகிய நாமும் குறிப்பிட்ட நாட்களில் ஆங்காங்கு உள்ள ஆலயங்களில் நியதியாக வழிபடுவது மிகமிக அவசியமாகும்.

அண்ணல் காந்தியடிகள் இறுதியாக பிரார்த்தனைக்கூட்டம் நாள்தோறும் நடாத்தி முடிவில் பிரார்த்தனைக்கூடத்திலே ஆத்மசாந்தியடைந்தார். ஆதலால் அன்பர்கள் காதலாகிக் கசிந்து கடவுளை வழிபட்டு இகபர நலன்களை எளிதில் பெறவெண்டும்.

இறை வழிபாடு செய்து பிறவிப் பிணியை ஒழித்துப் பேரின்பப் பெருவாழ்வைப் பெறவேண்டும்.

-கிருபானந்தவாரியார்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதான ஸ்தூபிகளின் கும்பம் வீதிவலம் வரும்போது



சிவஸ்ரீ ஜெ.ஜெகதீஸ்வரக் குருக்களினால் பிரதான
ஸ்தூபி அபிஷேகம் நடைபெறுகின்றது



திருக்கதவம் திறத்தல் எனும் கிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புற வழிபாடு

**திரு. S. சிவஞானம்**
B.A (Hons, H.C.Special)
ஆசிரியர்

**அறிமுகம்**

இந்துக்களின் சைவமரபு இரண்டு நெறிகளுக்கு உட்பட்டதாகும். அவை ஆகம நெறி சார்ந்தது என்றும், ஆகம நெறி சாராதது என்றும் கொள்ளப்படும் ஈழத்து சைவமரபில் நாட்டார் தெய்வ வழிபாடுகள் நீண்டகால வரலாற்றினை கொண்டு விளங்குகின்றன. இவ் வழிபாட்டு முறையினை

1. கிராமிய வழிபாடு
2. நாட்டார் வழிபாடு
3. ஊர்த் தெய்வ வழிபாடு
4. நாட்டுப்புற வழிபாடு
5. சிறு தெய்வ வழிபாடு
6. எல்லைப்புற வழிபாடு
7. குலதெய்வ வழிபாடு
8. மலைத் தெய்வ வழிபாடு

என வேறு பெயர்களினாலும் அழைப்பதுண்டு. கிராமிய மக்களின் சமய நம்பிக்கையின் வெளிப்பாடாகவும், கலை உணர்வுகளின் வெளிப்பாடாகவும், இவ் வழிபாட்டு முறைகள் அமைகின்றன. ஆகம வழிபாட்டில் எவ்வாறு கிரியைகள் பிரதான இடம் பெறுகின்றனவோ அவ்வாறே நாட்டார் வழிபாட்டில் சடங்குகள் முக்கியம் பெறுகின்றன.

எமது நாட்டில் நாட்டார் வழிபாடு வன்னி, யாழ்ப்பாணம், மலைநாடு, மட்டக்களப்பு எனத் தமிழ் மக்கள்செறிந்து வாழும் பிரதேசங்களில் காணப்படுகின்றன. பிரதேசத்திற்கு பிரதேசம் இவ்வழிபாட்டு முறைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பிரதேச மக்களின் சமூக அமைப்பு, வழக்காறு என்பவற்றின் அடிப்படையில் இவ்வழிபாடு மேற்கொள்ளப் படுகின்றது. பயம் நம்பிக்கை மரபு என்பவற்றின் மூலம் குறிக்கப்பட்ட தெய்வங்களுக்கு நேர்த்தி வைத்து வழிபடுவது முக்கிய அம்சமாகும்.

நாட்டார் தெய்வ வழிபாடு ஆண் தெய்வ வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு என இரு நிலைகளில் வழிபடப்படுகின்றது. சிறிய கட்டடங்கள் அல்லது பந்தல் அமைப்பான இடங்களில் இத் தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. வயல் வெளிகள், காடுகள், ஆற்றங்கரை, கிராம எல்லை, நெடுஞ்சாலை ஓரங்கள் ஆகிய இடங்களில் இத் தெய்வங்களுக்குரிய ஆலயங்கள் பெரும்பாலும் காணப்படுகின்றது. நாட்டார் தெய்வ வழிபாடுகள் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்டாலும் அவை மேல்வரும் இயல்புகளை கொண்டிருப்பதைக் காணலாம்.

1. நித்திய வழிபாடு அற்றவை
2. உயிர்ப் பலியை பெரிதும் ஏற்பவை
3. பிராமணர் அல்லாதோரால் பூசை செய்யப்படுபவை
4. ஒரு குடும்பம், சாதி என்பவற்றுக்கு மட்டும் உரியவை
5. ஒரு பிரகாரத்தை மட்டும் உடையவை
6. ஆசாரங்கள் பெரிதும் அற்றவை
7. சடங்குகள் உத்தரவு பெற்றே நிகழ்பவை
8. பகைமையை அழிக்கும் தன்மை கொண்டவை
9. பெரிதும் மந்திரங்களால் உச்சாடனம் செய்யப்படுபவை

ஆண்தெய்வங்கள்

1. ஐயனார்
2. வைரவர்
3. வீரபத்திரர்
4. பெரியதம்பிரான்
5. விறுமர்
6. வதனமார்
7. காத்தவராயன்
8. முனியப்பர்
9. சங்கிலிக்கறுப்பன்
10. அண்ணமார்
11. கறுப்பன்சாமி
12. மதுரைவீரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் தெய்வங்கள்

1. கண்ணகி
2. மாரியம்மன்
3. நாச்சிமார்
4. கடலாத்தை
5. கொத்தியாத்தை
6. முத்துமாரி
7. திரௌபதை
8. பேச்சியம்மன்
9. நாச்சியம்மன்
10. பிடாரி அம்மன்
11. சாவித்திரி அம்மன்
12. சீதையம்மன்

**வழிபாட்டு முறை :**

நாட்டுப்புற வழிபாட்டில் ஆகம வழக்குகள் பின்பற்றப்படாமையினால் மிகவும் எளிமையான சமயச் சடங்குகள் முக்கியம் பெறுகின்றன. இதில் ஆண்டு தோறும் நடைபெறும் ஆண்டுப் பொங்கல் பிரதானமானது. இப் பொங்கல் வருடத்தில் மாசி, பங்குனி, வைகாசி ஆகிய மாதங்களுக்கிடையில் வரும் இவ் வழிபாடுகளின் போது

1. பண்டமெடுத்தல்
2. மடைபரவுதல்
3. பலியிடுதல்
4. நூல் முடிதல்
5. பிணி தீர்த்தல்
6. தண்ணீர் ஓதிக்கொடுத்தல்

முதலிய அம்சங்கள் முக்கியம் பெறுகின்றன. இதன் போது பாற்செம்பு எடுத்தல், காவடி எடுத்தல், தீச்சட்டி ஏந்துதல் முதலிய நேர்த்திகளும் இடம்பெறும்.

கிராமிய வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்டு கிராமியக் கலைகளும் வளர்ச்சி பெற்றன. குறிப்பாக மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் நாட்டுப்புற மரபில் வந்த கிராமியக் கலைகள் செல்வாக்குப் பெற்றன். இவற்றில் கரகாட்டம், காவடி, கோலாட்டம், கும்மி என்பனவும் வந்தன் கூத்து, காத்தவராயன் சிந்துநடைக் கூத்து முதலிய கலைகளும் முக்கியம் பெற்றன. கண்ணகி வழிபாட்டில் சிலம்புக்கூறல், கோவலன் கதை, மலைக்காவியம், குளிர்த்திப்பாடல், கண்ணகி வழக்குரை காவியம், ஊர்சுற்றுக்காவியம் முதலிய கலைகளும் முக்கியம் பெறுகின்றன.

சைவத் தமிழ் மக்கள் வாழ்வியலுடன் நாட்டார் வழிபாடு பெரிதும் இணைந்து விட்டது. இதனால் இவ்வழிபாடும் அதனோடு தொடர்பான தெய்வங்களும் சமூகத்தில் முக்கியத்தவம் பெற்றுவிட்டன. நாட்டார் தெய்வ வழிபாட்டால்

பயநீக்கம்
குடும்ப ஒற்றுமை
காவிய விருத்தி
கலை வளர்ச்சி

ஆகிய துறைகளும் எழுச்சி பெற்றன. நாட்டுப்புற வழிபாடுகளை ஆற்றுவோர் பூசாரி என அழைக்கப்படுவார். இவர்கள் பெரும்பாலும் மரபு வழியாக இத்தகைய வழிபாடுகளை மேற்கொள்கின்றனர்.

நாட்டுப்புறத் தெய்வங்கள் பெரும்பாலும் குலதெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் போற்றப்படுகின்றன. ஐயனார், கண்ணகி, முனியப்பர் முதலிய தெய்வங்கள் இவ்வகையில் முக்கியம் பெறுகின்றன.

நினைத்த நேரத்தில் வழிபடக் கூடிய சிறப்பு இவ்வழிபாட்டில் உணடு. இங்கு வழிபாடு செய்ய வருவோருக்கு அருள் கொடுக்கக் காத்திருப்பது போல ஆலயக் கதவுகள் எந்நேரமும் திறந்தபடியே இருக்கும்.

**ஐயனார் வழிபாடு :**

சைவ சமயத்தில் ஐயனார் வழிபாடு மிகுந்த செல்வாக்கு செலுத்துகின்றது. இவ்வழிபாடு கிராமிய வழிபாட்டில் மட்டுமன்றி பெருந்தெய்வ வழிபாட்டு முறையிலும் செல்வாக்கு செலுத்தியது.

அரிகர வழிபாடு
ஐயப்ப வழிபாடு
ஐயப்பசாமி வழிபாடு

போன்ற பெயர்களினாலும் இவ்வழிபாடு சிறப்பிக்கப்பட்டுள்ளது. சிவனுக்கும் திருமாலுக்கும் பிறந்த குழந்தை ஆனதால் ஐயனார் சைவசமய மரபிலும் வைணவ சமய மரபிலும் செல்வாக்குப் பெற்றுள்ளார். எனவே சைவ சமயத்தையும் வைணவ சமயத்தையும் இணைக்கின்ற ஒரு வழிபாட்டு முறையாக ஐயனார் வழிபாடு உள்ளது.

**ஐயனார் வழிபாட்டின் தோற்றம்**

வைதீக சமயமரபுகளில் இன்றுவரை நிலைத்துவிட்ட கிராமிய வழிபாட்டு முறையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனார் வழிபாடு உள்ளது. ஐயனாரின் தோற்றம் பற்றி கந்தபுராணம் பின்வருமாறு கூறுகின்றது.

முன்னொருகாலத்தில் தேவலோகத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்த தேவர்களுக்கு அசுரர்கள் பெரும் துன்பங்கள் செய்தார்கள். காலாதிகாலமாக அசுரர்களின் துன்பங்களைத் தாங்கி வந்த தேவர்கள் காக்கும் கடவுளான திருமாலிடம் தமது குறைகளை இரந்தனர். கருணையே வடிவான கடவுள் அசுரர்களை அழித்து தேவர்களுக்கு அருள் செய்ய திருவுளம் கொண்டார்.

அதனை நிறைவேற்ற திருமால் சூழ்ச்சி செய்தார். தேவலோகப் பெண்கள் மீது மிகுந்த ஆசை கொண்ட அசுரர்கள் முன் திருமால் அழகிய மோகினி வடிவம் எடுத்துத் தோன்றினார். மோகினி தேவதையின் அழகில் மயங்கிய அசுரர்கள் அவளை அடைய விரும்பினார்கள். மோகினி அவர்களிடம் ஒரு வேண்டுதலை விடுத்தார். அசுரப் பெருந்தகை களே உங்களில் வீரமுடையவராக விளங்குபவர் எவரோ அவரையே நான் மணக்க விரும்புகின்றேன் எனவே என்னிடம் நீங்கள் போர் புரிந்து அந்தப் போரிலே என்னை வெல்ல வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இதனை ஏற்றுக்கொண்ட அசுரர்கள் மோகினியுடன் போர் புரியத் தயாராகினர்.

எல்லாப் பாக்கியமும் வாய்ந்தவரான கவுளை வெல்வது என்பது முடியாத காரியமே எனவே ஒவ்வொரு அசுரர்களும் மோகினியுடன் போர் செய்து இறந்து போனார்கள். மோகினியின் அழகையும் ஆற்றலையும் அங்கு மறைவில் இருந்து கண்ணுற்ற சிவன் மோகினி முன் தோன்றி நான் உன்னுடன் போர் புரிய சித்தமாக உள்ளேன் எனக் கூறினார்.

அசுரர் வடிவில் தோன்றிய சிவனின் வேண்டுதலை ஏற்று மோகினியாகிய அழகிய திருமால் சிவனுடன் போர் செய்தார். அப் பெரும் சமரிலே சிவன் வென்றார். எனவே மோகினியின் கோரிக்கையின் படி சிவனுடன் கூடவேண்டியதாயிற்று அதன் காரணமாக ஐயனார் சிவனுக்கும் திருமாலுக்கும் குழந்தையாக பிறந்தார்.

**ஐயனார் கோயில்கள்**

ஐயனார் வழிபாடு சைவமக்களின் மிக நீண்ட காலமாக செல்வாக்கு செலுத்தி வந்துள்ளது. இவ்வழிபாட்டு முறை ஆரம்பத்தில் கிராமிய மரபு சார்ந்திருந்தாலும் காலப்போக்கில் இவ்வழிபாட்டில் ஆகம மரபு இணைந்திருந்தன. இந்நிலையில் ஐயனாருக்கு கோயில் அமைத்து வழிபடும் வழக்கம் பிரபல்யம் அடைந்தது.

ஐயனார் வழிபாடு சைவவழிபாட்டு மரபுகளுடன் பாகவதசமய வழிபாட்டு மரபுகளுடனும் தொடர்புபட்டிருந்ததால் சிவன் கோயில்களிலும் ஐயனாருக்கு சிறு கோயில்கள் அமைத்து வழிபடும் வழக்கம் உண்டு. இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் ஐயனாருக்குரிய பிரசித்தி பெற்ற தனிக்கோயில் உண்டு. தமிழகத்தில் சபரிமலை என்னும் இடத்தில் உள்ள ஐயனார் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. ஐயனாருக்குரிய ஆலயம் பெரும்பாலும்

வயல்வெளிகள்
ஆற்றங்கரைகள்
அடர்ந்த காடுகள்
தெரு ஓரங்கள்
நெடுஞ்சாலைகள்

ஆகிய இடங்களிலே அமைந்து விளங்கு கின்றன. ஐயனார் காவற் தெய்வங்களாகவும், வீரத்தெய்வங்களாகவும் விளங்குவதால் கிராம மக்கள் சிறு கொட்டகைகள் அமைத்து ஐயனாருடைய அம்சங்களை வைத்து வழிபடுகின்றனர். இலங்கையை பொறுத்த வரையில் ஐயனாருக்குரிய பெரிய கோயில்கள்

1. மாதம்பை
2. சுண்ணாகம்
3. அனலைதீவு
4. பாண்டிருப்பு
5. குருநாகல்
6. அம்பலவன் பொக்கணை

ஆகிய இடங்களில் சிறப்பாக அமைந்த கோயில்கள் உண்டு. கிழக்கு மாகாணத்தில் திருமலை ஐயனார் கோயில், செங் கொடிநாயனார், மண்ணீர்கோயில் என்பனவும் முக்கியமான கோயிலாகும். தமிழ்நாட்டை பொறுத்த வரையில்

1. தஞ்சாவூர்
2. தாமிரபரணி
3. சபரிமலை
4. திருநெல்வேலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய இடங்களில் ஐயனாருக்குரிய பெரிய கோயில்கள் உண்டு. இவற்றுள் சபரிமலை ஐயப்பன் கோயில் சர்வதேச முக்கியத் துவம் வாய்ந்ததாகும். யாழ்ப்பாணத்தில் அனலைதீவு ஐயனார் கோயில் முற்றிலும் ஆகம மரபு சார்ந்த கோயிலாக வளர்ச்சி அடைந்துள்ளது. சிலாபம் மாதம்பையில் உள்ள ஐயனார் கோயில் சைவசமயத்தவர்கள் மட்டுமன்றி ஏனைய சமயத்தவர்களும் வழிபடுகின்ற சிறப்பினையுடையதாகும்.

**வழிபாட்டுமுறைகள்**

ஐயனாருக்குரிய வழிபாட்டு முறை பெரும்பாலும் ஆகம முறை சாராத வழிபாடாக நிலவிவந்தது. ஆயினும் தமிழ் நாட்டில் உள்ள சில ஐயனார் ஆலயங்கள் ஆகம முறைக்குட்பட்டவை. ஈழத்தில் உள்ள ஐயனார் ஆலயங்களில் நாட்டுப்புற வழிபாடாகவே நடைபெறுகின்றது. கிராமிய மக்களின் சமய வாழ்க்கையில் ஐயனார் வழிபாடு பெரும் செல்வாக்கை செலுத்தி வருகின்றது. ஈழத்து மக்கள் ஐயனாரை காவல் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டில் ஐயனாரை வீரத்திற்குரிய தெய்வமாகவும் வெற்றிக்குரிய தெய்வமாகவும் வழிபடுகின்றனர். ஈழத்தில் ஐயனார் ஆலயங்கள் நாட்டுப் புறங்களிலும் வயல் வெளிகளிலும் காணப்படுகின்றன. பயநீக்கம், நோய்நீக்கம், போரில் வெற்றி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஐயனார் வழிபாடு நடைபெறுகின்றது. ஐயனார் பிற்போக்கு குணமுள்ள கடவுள் என்பதாலும் வீரத்துக்குரிய கடவுள் என்பதாலும் மக்கள் விரும்பி வழிபடுகின்றனர்.

ஐயனார் ஆலயங்களில் நித்திய பூசைகள் நடைபெறுகின்றது. ஆகம மரபு சார்ந்த ஆலயங்களில் விசேட வழிபாடுகளும் இடம் பெறுகின்றன. வருடம் தோறும் வருகின்ற பொங்கல் விழா மிகச் சிறப்பானதாகும். இத்தகைய வழிபாடுகளின் போது

நூல் முடிதல்
தூளி பிடித்தல்
கட்டுச் சொல்லுதல்
பண்டம் எடுத்தல்
மடைபரவுதல்
தண்ணீர் ஓதிக் கொடுத்தல்

ஆகிய வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும். இவற்றுடன் கரகம், காவடி, கோலாட்டம் முதலிய கலைநிகழ்வுகளும் ஐயனார் வழிபாட்டில் முக்கியம் பெறுகின்றன. இவற்றுடன் சந்தனக் காப்பிடல் என்ற சடங்கும் முக்கிய வழிபாடாக இடம்பெறுகின்றன. இவற்றுடன் குருநாகல் ஐயனார் ஆலயத்தில் முட்டி மங்களம் என்ற ஒரு நிகழ்வும் நடைபெறுகின்றது. மாதம்பை ஐயனார் கோவிலிலும் இவ்வழிபாடு காணப்படுகின்றது.

ஐயனார் ஒரு காவல் தெய்வம் ஆகையால் காட்டு வழியில் செல்வோருக்கு பாதுகாப்பு வேண்டியும், மழைவளம் குன்றும் போதும், ஊரில் கொடிய நோய் பரவும் போதும் கிராமங்கள் தோறும் ஐயனாருக்கு ஆசி வேண்டி விசேட பொற்காசு கட்டி கிராமிய மக்கள் வழிபடுகின்றனர். ஐயனார் வழிபாடு ஆகம நெறி சாராதது ஆயினும் இன்றைய நிலையில் இவ்வழிபாடு ஆகம நெறிக்கு மாறி வருவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கிராமியக் கோயில்களில்

வெள்ளிக்கிழமை
செவ்வாய்க்கிழமை

ஆகிய நாட்களில் விளக்கேற்றி வெள்ளமுது பொங்கி வழிபடும் வழக்கமும் காணப்படுகின்றது. மட்டக்களப்பிலுள்ள ஐயனார் ஆலயங்களில் பொங்கல் வழிபாடு சிறப்புப் பெறுகின்றது. பூசாரி எனப்படுகின்ற வயது முதிர்ந்த பெரியோர்கள் ஐயனாருக்குரிய சடங்குகளை செய்து வருவதை அவதானிக் கலாம்.

**அமைப்பு முறை**

ஐயனார் வழிபாடு ஆகம விதிகளைப் பின்னணியாகக் கொண்டு விளங்காத காரணத்தினால் இத்தெய்வத்தை அமைக்கும் முறைபற்றி ஆகமங்களில் காணப்படவில்லை. ஆயினும் புராணங்களிலும் சிற்ப சாஸ்திரங்களிலும் ஐயனார் அமைப்பு முறைபற்றி கூறப்பட்டுள்ளது. கந்தபுராணம் ஐயனாரை அமைக்கும் முறைபற்றி விரிவாகக் கூறுகின்றது.

ஐயனார் பெரும்பாலும் காவல் தெய்வமாக அமைவதால் உக்கிர தோற்றம் கொண்டவராக அமைக்கப்படுகின்றார். சாந்த முகத்தையுடைய ஐயனார் வடிவங்களும் உண்டு. ஐயனார் பெரும்பாலும் சமபங்க நிலையிலும் அமைக்கப்படுகின்றது. இந்த நிலை அமைக்கப்படும் ஐயனார் யோகநிலையில் இருந்து கால்களை மடித்து இருகால்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தை நோக்கியவாறு நேராக இருக்கும் வண்ணம் அமைக்கப்பட்டு இருக்கும்.

மூலகத் தெய்வமாக மட்டுமன்றி ஐயனாரை பரிவார தெய்வமாகவும் ஆலயங்களில் அமைக்கும் முறை உள்ளது. உயரமான சக்கர பீடத்தில் தனித்த நிலையில் அமைக்கப்பட்டிருக்கின்ற ஐயனார் சில இடங்களில் இரு வகைத் தேவியருடனும் இணைந்த நிலையில் அமைக்கப்படுவதையும் காணலாம். ஐயனாரின் சின்னம் இடையரின் தடியாகும். இது அவர்களின் ராஜ சக்தியாகவும் கொள்ளப்படுகின்றது. குதிரை வாகனத்தில் எழுந்தருளியும், அணிகலன்கள் தாங்கியும் தண்ட கஸ்தத்தை ஏந்தியவாறும் அமைக்கப் படும்

ஐயனாரின் பிரதிமாலட்சணம் பற்றி சாஸ்திர நூல்களில் வேறுபட்ட கருத்துக்களும் உள்ளது. ஐயனாருடைய விக்கிரகங்கள் பெரும்பாலும் கருங்கல்லினால் அமைந்த சிவ விக்கிரகமாகக் . காணப்படுகின்றது. சபரிமலையில் உள்ள ஐயனார் கோயிலில் கருங்கல்லினாலான விக்கிரகம் காணப்படு கின்றது. சோழர் காலத்தில் இராஜேந்திரனால் அமைக்கப்பட்ட ஆலயங்களில் ஐயனார் பரிவார தெய்வமாக பஞ்ச லோகத்தில் வார்ப்பு விக்கிரகமாக அமைக்கப்பட்டுள்ளார்.

மண்டூர்
மாதம்பை
அனலைதீவு

ஆகிய இடங்களில் கருங்கல்லினாலும், பஞ்ச உலோகங்களினாலும் அமைந்த ஐயனார் விக்கிரகங்களை காணமுடிகின்றது. மூல மூர்த்திகள் பெரும்பாலும் கருங்கல்லினால் அமைக்கப்பட்டிருப்பது ஈழத்து கோயில்களில் பொது மரபாகும்.

கிராமிய வழிபாட்டு மரபுகளில் ஐயனார் வழிபாடு மிகவும் செல்வாக்குப் பெற்றுள்ளது.

**சமுதாய செல்வாக்கு**

இவ் வழிபாடு இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் உள்ள சைவ மக்களால் ஆதரிக்கப்பட்டு வருவதைக் கொண்டு இவ்வழிபாட்டின் முக்கியத்துவத்தினை அறிந்து கொள்ளலாம்.

ஐயனார் சைவ மரபோடும், வைணவ மரபோடும் தொடர்புபட்டிருப்பதனால் இரு சமயக் கோட்பாடுகளையும் ஒருங்கமைக்கின்ற வழிபாடாக உள்ளது. சிவபெருமானின் பஞ்ச புத்திரர்களில் ஒருவராக ஐயனார் விளங்கு வதனால் சிவாலயங்களில் ஐயனாருக்கு தனிக் கோவில்கள் அமைத்து வழிபடும் மரபு காணப்படுகின்றது.

ஐயனார் வீரம் செறிந்த தெய்வமாக விளங்குவதனால் தமிழ் மக்கள் வீரத்தை வேண்டியும் ஐயனாரை வழிபடுகின்றனர். இக் கடவுள் அந்த வகையில் காவற் தெய்வமாகவும் குல தெய்வமாகவும் இருந்து வருவதைக் காணலாம். சமுதாய மக்களிடத்தில் பயப்பிணி, கடும் வரட்சி, கொடிய நோய் ஆகிய வற்றிலிருந்து விமோசனம் பெறுவதற்காகவும் கிராம மக்கள் ஐயனாருக்கு கோயில் அமைத்து வழிபடுகின்றனர். புராண மரபுகளின் படி ஐயனார் சிறந்த கலைத் தெய்வமாகவும் ஆன்மீக குருவாகவும் விளங்குகின்றார்.

கரகமாடுதல்,
காவடியாடுதல்,
கும்மி
கோலாட்டம்

ஆகிய கலைகளின் வளர்ச்சியிலும் சந்தனக் காப்பிடல் முட்டி மங்களம் ஆகிய நிகழ்வுகளின் பின்னணியிலும் ஐயனார் வழிபாடு சைவமரபில் முக்கியம் பெறுகின்றது.

✦✦✦


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டியின் மகிமை

**திருமதி ப. சிவனொளிபாதம்.**
**இளைப்பாறிய ஆ.ஆலோசகர்**

கலியுகத்திலே கண்கண்ட தெய்வம் முருகப்பெருமான். வேண்டுவார் வேண்டுவதை வழங்குவதற்கு ஏற்றாற்போல ஆறுதிருமுகமும் பன்னிருகரங்களும் பதினெண்கண்களும் கொண்டமைந்த கடவுள் தமிழரின் இயற்கைத் தெய்வமாகவும் தமிழ் கடவுளாகவும் காட்சி தருகின்றார். முருகனுக்குரிய விரதங்களாக வாரத்தில் வெள்ளியும், நட்சத்திரத்தில் கார்த்திகையும், திதியில் சஷ்டியும் விளங்கு கின்றன. விரதமாகக் காக்கவும், விழாவாகக் கொண்டாடவும் ஒருங்கே அமைந்தது கந்தசஷ்டி.

ஐப்பசி மாத வளர்பிறைப் பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாட்களும் கந்தசஷ்டி விரதகாலமாகும். அறியாமையை அகற்றி ஆணவத்தை நிலைகுலையச் செய்த போர்க்காலம் கந்தசஷ்டி. நன்றிமறத்தலால் பெருங்கேடு விளையும் என்ற படிப்பினையை எடுத்துரைப்பதாகவும் விளங்குகின்றது. அறிவு வடிவமாகிய முருகனுக்கும் நன்றி மறந்து ஆணவமே வடிவாகிய சூரனுக்குமிடையே மாயையை விலக்க நிகழ்ந்த சங்காரம் வாழ்க்கையைச் சிறக்கச் செய்வன விரதங்களும் விழாக்களும் என்ற கூற்றுக்கு இலக்கணமாகத் திகழ்வது.

"குக்குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக் குறைவில்லையே" என்று எத்துணை நம்பிக்கையுடன் கந்தசஷ்டி விரதம் நோற் பவருக்கு குறை ஏதுமில்லை என்று சமுகத்திற்கு நம்பிக்கையூட்டுகின்றது. குழந்தைப் பேற்றைப் பெற்று பரம்பரையை நிலைநாட்ட முடியாது தத்தளிக்கும் தம்பதியருக்கு "சட்டியிலிருந்தால் அகப்பையில் வரும்" என்று கந்தசஷ்டி விரதம் நோற்றால் அகப்பையில் குழந்தை வரும் என்ற உண்மை வாழ்வே சமயம் சமயமே வாழ்வு என்று வாழ்வையும் சமயத்தையும் ஒன்றிணைத்து நம்பிக்கையை வலுப்படுத்து கின்றது. பிள்ளை இல்லாத் காரணத்தினால் மலடு என்ற வசைச் சொல்லினால் ஏற்பட்ட உளநோய் போக்கி, விவாக இரத்து மறுமணம் என்ற சீரழிவிலிருந்து தம்பதியரைப் பாதுகாத்து பிள்ளைச் செல்வத்தைப் பெற்று சந்தோசமாக வாழ கந்தசஷ்டி வழிகாட்டுகின்றது.

விசேடகாலங்களிலே பயன்கருதிச் செய்யப்படுகின்ற நைமித்தியக் கிரியைகளுள் கந்தசஷ்டி தலையாயது. எதை எதை யார் யார் வேண்டி அனுஷ்டித்தாலும் உடனுக்குடன் நிறைவேற்றுவது கந்தசஷ்டி.

உலகியல் வாழ்வுக்கு மட்டுமா கந்தசஷ்டி? ஆன்மீகநாட்டம் கொண்டவர் களுக்கும் கந்தசஷ்டி அள்ளி வழங்குகிறது. "கொக்குப்படுக்கவே கண்ணி கொண்டு வாடா குழுவா" என்ற குறவஞ்சிப் பாடலடி ஆணவத்தைப் பிடித்தடக்க கயிறு கொண்டுவரும்படி கேட்பதாக அமைகின்றது. காமம், வெகுளி, ஈயாமை, மயக்கம். செருக்கு, பொறாமை ஆகிய ஆறு உட்பகைகளை அகற்றுவதற்காகவே என்ற கருத்தை குற்றாலக் குறவஞ்சிப் பாடல் வெளிப்படையாக கூறுகின்றது.

"மீறுமிலஞ்சிக் குறத்தியைக் கொண்ட செவ்வேட்
வேட்குறவள் முதல் வேட்டைக்குப்போன
நாளாறு நாட் கூட்டியொரு கொக்குப்பட்ட
தகப்பட்ட கொக்கையவித்தொரு சட்டியில்
சாறாகவைத்த பின் வேதப் பிராமணர்
தாமுங் கொண்டார் சைவர்கள் தாமுங் கொண்டார் தவம்
பேறாமுனிவரு மேற்றுக் கொண்டாரிதை
பிக்குச் சொல்லாமலே கொக்குப்படுக்கவே
கண்ணி கொண்டு வாடா குழுவா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பகைகள் ஆறையும் அடக்கவே ஆறு நாட்களும் அமைந்தது என்பதை அந்தணர் குலமானாலும் சைவர்களானாலும், முனிவர் களானாலும் ஆறு அறிவு கொண்ட பிறவிகள் ஆறுபகைகளையும் அறுப்பதற்கு என்பதை ஏற்றுக்கொள்வர். கந்தசஷ்டி விரதம் ஏன்? ஏதற்கு? எப்படி? என்ற வினாக்களுக்குப் பாடல் விளக்கம் தருகின்றது.

"பசித்திரு தனித்திரு விழித்திரு" பதவி கிட்டும் என்ற சைவ உலகின் தனித்துவமான கருத்தினை ஈண்டு நோக்கின் இறைவனை அடைய வேண்டும் என்ற ஆர்வத்தினால் ஐம்பொறிகளின் ஆட்டத்தைக் குறைக்க அன்னம் குறைக்கப்பட வேண்டும். "அன்னம் அடங்க அஞ்சும் அடங்கும்" என்ற கருத்து சுவாமி ஆறுமுகநாவலர் அவர்கள் விரதத்திற்குக் கூறும் வரைவிலக்கணத்தை ஒத்திருக்கின்றது. இக்கருத்தை வலுப்படுத்த "அன்ன சுரணை கூடினால் அட்சர சுரணை குறையும் என உணவைக் குறைப்பது, நாவடக்கம் உள்ளத்தையும் உடலையும் அடக்கும். எனவே பசித்திருந்து தீயஎண்ணங்களும் ஆசைகளும் எந்தவொருகணமும் மனதிலே புகுந்துவிடாமல் மனதை அலைக்கழித்து விடாமல் மனதைப் பாதுகாப்பாக விழித்திருந்து, புலன் வழிச் செல்லும் மனத்தைத் தடுத்து விலக்கி தனித்திருந்து ஏன் விரதம் நோற்க வேண்டும் என்ற காரணகாரியங்களை வெளிப்படுத்தி ஏற்றுக்கொள்ளச் செய்து நடைமுறைப்படுத்தி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனடி சேர கந்தசஷ்டி நெறிப்படுத்துகின்றது. காரியமும் நடக்கின்றது கடவுள் வழிபாடும் நடக்கின்றது.

கந்தசஷ்டி விரத மகிமையையும் பயனையும் கந்தபுராணப் பாடல் வெளிப்படுத்து மாற்றை ஈண்டு நோக்குவோம்.

**"ஆரணமுனிவர் வானோர் அங்கதன் மற்றை வைகல்**
**சீரணி முருகவேட்கு சிறப்பொடு பூசையாற்றி**
**பாரணம் விதியிற் செய்தார் பயிற்றுமிவ் விரதம் தன்னால்**
**தாரணி அவுணர் கொண்ட தம்பதத் தலைமை பெற்றார்"**

என்ற பாடல் முறைப்படி விரதம் அனுட்டிப்பவர்கள் உரிய பயனைப் பெறுவர் எனச் செப்புகின்றது.

காப்பது விரதம் பசித்திருந்து தனித்திருந்து விழித்திருந்து ஆலயங்களில் நடைபெறும் கந்தபுராணபடனம் செய்தும் கேட்டும் பக்தி சிரத்தையுடன் இறைவழிபாடாற்றி இறைவனுக்குக் கிட்ட நெருங்கியிருந்து நோற்கக்கடவர். வயது வேறுபாடில்லாமல் அவரவர் தத்தமது மனவலிமைக்கு ஏற்ப அனுஷ்டித்துப் பயன்பெறுவோமாக.

**"ஆறிருதடந் தோள் வாழ்க"**

✦ ✦ ✦

## கந்தரலங்காரம்

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்தை குளிர்ந்திட நல்லருள் தருவான்முருகன்

மு.சிவநேசன்,
முகாமையாளர்.

சங்ககாலத் திருமுருகாற்றுப்படை போற்றும் முருகப் பெருமான் எழுந்தருளி இருக்கும் பகுதிகளில் ஒன்றாகத் திகழ்வது வன்னி பெருநிலப் பரப்பில் கோயில் கொண்டிருக்கும் கந்தசுவாமி ஆலயம் ஆகும். ஒருங்கே மருத நிலச்சிறப்பும் நீரோடுகின்ற நீர் நிலைகளும் வானளாவ உயர்ந்த மரங்கள் நிறைந்த இயற்கையான சூழலிலே கோயில் கொண்டிருக்கிறான் முருகன்.

அருள் நிறைந்த கிளிநொச்சிப் பதி கந்தசாமி கோயில் பன்னெடுங்காலம் முதலாக பல தொன்மைச் சிறப்புகளைக் கொண்டுள்ளது. பல்வேறு சித்தர்களின் கால் பதிப்பினால் புண்ணிய பூமியாக்கப்பட்ட பெருமைக்குரியது. ஏர் பிடித்த உழவர்களின் கரங்களினால் பெற்ற காணிக்கையால் எழுச்சி பெற்ற பதி. வாணிப வர்த்தக நெஞ்சங்களினால் வளர்க்கப்பட்ட பதி. எந்நேரமும் மெய்யடி யார்கள் தமது பல்வேறுபட்ட மனக்குறைகளை போக்குவதற்காக ஓடோடி வருவார்கள். தமது மனக்குறைகளை சொல்லொனா வேதனை களைப் பல்வேறு முறைகளிலே தெரிவிப்பார்கள்.

ஆழமான அகலமான கூர்மையான தன்மையுடைய வேலைக்கையில் ஏந்தி மக்களின் குறைகளைப் போக்க எழுந்தருளியிருக்கும் ஆனந்த மயிலோனைக் காண அடியார்கள் ஒன்று கூடும் காட்சி மெய்யுருகச் செய்யும். பண்டைக் காலம் முதல் வேலன் வழிபாட்டில் தொடங்கி இன்று வரை முருக வழிபாட்டுடன் தம்மை ஈடுபடுத்திய பெருமை வன்னி மக்களையே சாரும். ஆலய அறங்காவலரையும் ஆலயப் பரிபாலன சபையினர், தர்மகர்த்தாக்கள் எனப் பல்வேறு பட்ட மெய்யடியார்களின் ஒத்துழைப்புடன் ஆலயம் சிறப்பான நிர்வாகக் கட்டமைப் பினைக் கொண்டுள்ளது. அழகான விமானம் இதிகாசக் கதைகள் பல கூறும் கோபுரம், வசந்த மண்டபம், கொடிஸ்தம்பம் எனப் பலவாறு ஆகம விதிப்படியும் கலைநயத்துடனும் அமையப் பெற்றுள்ளது.

பல்வேறு புராதனச் சிறப்புக்களையும் பின்புலமான தொன்மை வரலாறுகளையும் கொண்ட இத் தேவஸ்தானமானது அண்மைக் கால போரின் விளைவால் அழகினை, அமைதியினை, ஆழமான அன்பு கொண்ட பக்தர் கூட்டத்தினை இழந்தது. எனினும் சிறிது காலத்தில் ஏற்பட்ட காலத்தின் மாற்றத்தால் இழந்த அனைத்தினையும் மீளப் பெற்றுக் கொண்டு புதுப்பொலிவுடன் மிளிர்ந்து வருவதனை யாவரும் கண்களூடு கண்டு மகிழ்கின்றனர்.

அடியவர்களின் மனக்குறையை நீக்க எல்லோரையும் ஒன்றுபடவைக்கும் அருளாட்சி பெற்ற சிவாச்சாரியார் அவர்களின் திட்டமிடலும், ஏனைய உறுப்பினரின் அயராத பணியாலும் இன்று ஓர் புதிய பரிமாணத்தில் எழுச்சி கண்டு வருகின்றது. போரின் வடுக்கள், இழப்புக்கள், துன்பங்கள், சோகங்கள் எல்லாவற்றினையும் தாண்டி கும்பாபிஷேகம் காண்கின்றது.

கிளிநொச்சிப் பதியின் நடுநாயகமாகக் கோயில் கொண்டிருக்கும் முருகப்பெருமானின் குடமுழுக்கு காண்பதனூடாக எமது பிறவிப்பயனை அடைய முடியும். அருள் கடாட்சம் காண என்ன தவம் செய்யவேண்டும். "சந்த நடைத்தமிழ் திருப்புகழ் தனில் கந்தன் அவன் வருவான்......


சிந்தை குளிர்ந்திட சந்தண முருகன் நல்லருளைத் தருவான்......

நன்றி.

✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருமார்களுக்கான பாதபூஜை நடைபெறுதல்



கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட கௌரவ சிவாச்சாரியார்கள்



கும்பாபிஷேக தவில், நாதஸ்வர இசைக் கலைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகா சிவராத்திரி மகிமை

திருமதி செல்வராணி சோமசேகரம்பிள்ளை
இளைப்பாறிய ஆ. ஆலோசகர், சைவ மங்கையர்கழக செயலாளர்

பூவுளானும் பெருகடல் வண்ணனும்
புவியிடந்தெழுந்தோடி
மேவி நாடி நின் றடியினை காண்கிலா
வித்தகம் என்னாகும்
மாவும் புகழும் கதலியு நெருங்கி
மாதோட்ட நன்னகர் மன்னித
தேவி தன்னொடுத் திருந்து கேதீசரத்
திருத்தவெம் பெருமானே

-ஞானசம்பந்தர் -

முன்னொரு காலத்தில் இவ்வுலகில் ஒரு வியத்தகு விந்தை நிகழ்ந்தது. அச் செய்தியை ஞானக்குழந்தையாகிய ஞானசம்பந்தர் திருக் கேதீஸ்சரத் திருப்பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். சிவ புண்ணியம் செய்து இப்பிரபஞ்சத்தைப் படைத்தும் காத்தும் வந்தவர்கள் அயனும் அரியுமாவார். மானிட வாழ்வின் சிறந்த மேன்மைகள் இந்த இருவரும் ஆற்றிய செயல்களாகும். இவை சொல்லில் அடங்காது. அதனால் அவர்கள் இருவரும் முதன்மை பேசி முரண்பட்டனர். பேச்சு வலுப்பெற்று சண்டையாய் மாறியது. செருக்குற்றவர்களின் சண்டையை தீர்க்க கருதிய சிவபெருமான் அவ்விருவருக்கும் நடுவே சோதிப்பிழம்பாய் தோன்றினார்.

முன்னொரு போதும் அவ்வாறான தோற்றத்தைக் காணாத இருவரும் அது எங்கே தோன்றி எங்கே முடிகின்றது என்பதை அறிய ஆவல் கொண்டனர். திருமால் வராக வடிவங் கொண்டு தேடிச்சென்றார். தேடித்தேடொனா சிவனை அகந்தை கொண்டவர்களினால் இலகுவில் கண்டுகொள்ளல் எளிதான காரியமா?

ஏழுதல மூவை விடந்து பின்னெய்த்து
ஊழி முதல்வ சயசயவென்று
வழுத்தியும் காணா மலரடியிணைகள்

எனத் திகைத்து நின்றனர். என்று திருவாசகம் போற்றித் திருவகவலில் மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார். தேவருலகில் பெரும் பதவிகளைத் தாங்கி இருப்போர் மமதையுற்று தனக்கு மேல் தலைவன் எவருமில்லை என்று இறுமாந்திருப்பது வேண்டாத செயல்.

சிலர் தமது இலக்கை அடைந்ததும் நடந்து வந்த பாதையை மறந்து விடுவதுண்டு. அவ்வாறு தாழ்வானவை செய்து தலை தடுமாறுவோரை இம்மானிலத்தில் எங்கும் காணலாம். அத்தகையோரின் செயல்களை கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தனின் பெருமையைக் கூறும் கந்தபுராணத்திலேயே ஆங்காங்கு குறிப்பிட்டு விளக்குவதைக் காணலாம். இந்நோக்கில் பார்க்கும் போது பன்னெடுங்காலம் பெருந்தவம் செய்த சூரன் அளவிட முடியாத அருள் பெற்றான். ஆயிரத்தெட்டு அண்டங்களும் நூற்றெட்டு அக்குறோணி சேனைகளும் தன்னிடம் இருப்பதால் தன்னையாருமே வெல்ல முடியாது என்று நெஞ்சை நிமிர்த்தினான். போர்க்களத்தில் குமரனை கண்ட போது நேற்றைய பாலன் என்று இகழ்ந்தான். அவனது அஞ்ஞானத்தை கண்ட கந்தப்பெருமான் தனது திருப்பெரு வடிவத்தைக் காட்டினார். பிரமா விஸ்ணுக்களின் அகந்தையை ஒத்த தன்மையினை இங்கே காணலாம்.

புராணம் என்பது பழைய கதை என்றும் வீண்புழுகு என்றும் நினைத்து சும்மா தள்ளிவிடக்கூடாது. அது கூறும் செய்தியை மனதிலே வாங்கிக்கொண்டு வாழ்வை அறநெறியில் வாழப்பழகிக் கொள்ளவேண்டும். ஆணவத்தால் நெஞ்சம் தருக்குற்றிருந்த தக்கன் விமோசனம் தேடி தந்தையாகிய பிரமதேவனிடம் சென்றான். அடங்காமையினால் மானிடத் தலை நீக்கப்பட்டு அவன் ஆட்டுத்தலையை சுமக்க நேர்ந்ததை உணர்ந்த பிரமா அன்றொரு நாள் அயனும் மாலும் தமக்கு நடுவில் தோன்றிய சோதிப்பிழம்பின் நிகழ்வை தக்கனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைத்தார். சோதி வடிவின் அடியையும் நுனியையும் தேடிச்சென்ற இருவருக்கும் ஏற்பட்ட அனுபவத்தை கூறுவதே கந்தபுராண தட்ஷகாண்டத்தில் வரும் அடிமுடி தேடிய படலமாகும். மாசிமாத கிருஷ்ணபட்ச சதுர்தசி (பதின்நான்காம் நாள்) திதியிலே நள்ளிரவு வேளையில் அயனும் அரியும் காணச் சோதிவடிவாய் தோன்றினார். அத்தினமே சிவராத்திரி எனக்கொள்வது மரபு. இப்புண்ணிய தினத்தை சிவனுக்குரிய நாளெனக் கொண்டு விரதமனுட்டிப்பது சிவனடியார்களின் வழக்கமாகும். இவ்விரதமே சிவ விரதம் எல்லாவற்றுக்கும் மேலாகும் சிவராத்திரி விரதம், நித்திய சிவராத்திரி, பட்சசிவராத்திரி, மாதசிவராத்திரி, யோகசிவராத்திரி, மகா சிவராத்திரி என்று ஐந்து வகைப்படும்.

ஆண்டிலே வரும் இருபத்திநான்கு சிவராத்திரிகளிலும் விரதம் காப்பது நித்திய சிவராத்திரி ஆகும். தை மாதம் கிருஷ்ண பட்ச பிரதமை முதல் பதின்மூன்று நாட்கள் வழிபடுவது பட்ச சிவராத்திரி. மாசிமாத கிருஸ்ண பட்ச (தேய்பிறை) சதுர்தசி நள்ளிரவில் இலிங்கோற்பவ காலம் வருமாயின் அது மகா சிவராத்திரி. பங்குனி மாதக் கிருஷ்ண பட்ச முதல் கிருதியை, சித்திரை மாதக் கிருஷ்ண அட்டகம் முதலியன மாத சிவராத்திரி என்றும் திங்கட்கிழமை முழுவதும் அமாவாசை கூடியிருப்பின் அந்நாள் யோக சிவராத்திரி என்றும் கைக்கொள்ளப்படும். இவற்றுள் மகா சிவராத்திரி சிறப்புற்றது.

இதனை கிளி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் ஆண்டு தோறும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். இந் நிகழ்வில் கிளி மாவட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 3 - 13 வரையான மாணவர்களிடையே சைவசமய அறிவுப் போட்டியினைக் கிளி மாவட்ட திருநெறிக் கழகத்தினர் நடாத்தி முதன்மையானவர்களை தெரிந்தெடுத்து அவர்களிடையே வாய் மொழி மூலப் போட்டிப் பரீட்சையினை முதல் மூன்று சாமங்களில் நடாத்தி பரிசும் சான்றிதழ்களும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இ∴து முருக அடியார்களைக் கவர்ந்த ஓர் சமய உணர்வு விழாவாகும்.

மகா சிவராத்திரி தினத்தில் சிவாலய தரிசனத்துடன் இலிங்கோற்பவ தரிசனையும் இன்றியமையாததாகும். எனவே சிவாலயத்தில் இருந்து கண்விழிப்பது சிறப்பானதாகும். இந்நாளில் நான்கு ஜாமமும் நித்திரை முழித்து விரதம் அனுஸ்டிப்போர் உயர்ந்த பேறுகளைப் பெறுவர் என சிவராத்திரி புராணம் செப்புகிறது. உணவின்றி உயிர்காப்பதற்காக நான்கு ஜாமமும் விழித்திருப்போரும் சிவலோக பதவிகளைப் பெறுவர் என்ற தளராத நம்பிக்கை சைவசமயிகளுக்கு உண்டு.

"உற்றநோய் தோன்றல் உயிர்க்குறுகண்
செய்யாமை அன்றே தவற்திற் குரு"

மகிமை மிக்க சிவராத்திரி விரதத்தை அனுஷ்டித்து சிவப்பிராப்தி பெறுவோமாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

✦✦✦

## வள்ளியம்மை திருமணப் படலம்

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியார் எல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்பாபிஷேக பிரதமகுரு
சிவஸ்ரீ.கு.இரத்தினேஸ்வரக் குருக்களின்
ஆசியுரை



சிவத்திரு.கணேசானந்தா சுவாமிகளது
ஆசியுரை



சிவஸ்ரீ ஜெ.ஜெகதீஸ்வரக் குருக்களின்
ஆசியுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தர்

**செல்வி பஞ்சலிங்கம் லாவண்யாதேவி,**
**முதலாம் வருடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

"நாணல் ஒன்று தன்னளவால் நீரின் மீது மிதக்கின்றது அதன் மீது ஒரு சிறுகுருவி உட்கார்ந்தாலும் அது மூழ்கிப்போகும் ஆதனால் பெரிய மரக்கட்டை ஒன்றோ நான் மட்டும் மிதப்பதல்ல அது மிதக்கும் போது பல பேர் அதன் மீது உட்கார்ந்திருக்கவும் இடம்கொடுக்கின்றது. தங்கள் சொந்த நலனைக் கவனித்துக் கொள்பவர்கள் நாணல் போன்றவர்கள். உலகை உய்விக்க வந்த பெருமக்கள் பெரிய மரக்கட்டை போன்றவர்கள்" இது இராமகிருஷ்ணரின் உள்ளத்துச் சிதறலாகும்.

காலந்தோறும் இந்தியாவையும் இந்தியப் பண்பாட்டையும் பேணி வளர்த்த பெரியவர்களில் ஒருவராக மட்டுமன்றி இந்துமத சிந்தனைகளை தன் பேச்சாலும் வாழ்க்கை முறையாலும் உலகறியச் செய்தவர் சுவாமி விவேகானந்தராவார். சுவாமி விவேகானந் தருடைய வாழ்க்கை வரலாறும் சமயப் பணிகளும் சமுதாய சீர்திருத்த சிந்தனைகளும் இவ்வத்தியாயத்தில் அறியப்படுகின்றது. மத ரீதியாகவும், சமூக ரீதியாகவும் எம்முள்ளே உயர்ந்து நிற்கின்ற மகான்களுடைய வாழ்க்கை வரலாறுகள் படிப்பதற்கும் அறிவதற்கும் சுவாரஸ்யமானவை ஆகும். விவேகானந் தருடைய வாழ்க்கை வரலாறு எம் எல்லோருக்கும் முன்னோடியானது. ஏனெனில் இளம்பராயம் தொட்டே இவருடைய வாழ்வியல் முறைகள் வித்தியாசமானவை புரட்சிகரமான சிந்தனைகளில் முன்னெடுக்கப்பட்டவை. உறங்கிக் கொண்டிருந்த பண்பாட்டு விழுமியங்களை தட்டியெழுப்பி இளைஞர்களின் உணர்வுகளுக்கு உரமிட்டு நவீன இந்தியாவை கட்டியெழுப்பிய மகானாக இவர் விளங்கினார்.

"தனித்திரு"
"விழித்திரு"
"பசித்திரு"

வெற்றி பெறுவாய் என்பதற்கு இணங்க இவர் வாழ்ந்துள்ளார். வட இந்தியாவிலுள்ள கல்கத்தா நகரில் வாழந்த வழக்கறிஞரான விஸ்வநாததத்தருக்கும் புவனேஸ்வரி தேவியாருக்கும் மகனாக 1863ம் ஆண்டு தை மாதம் 12ம் தேதி விவேகானந்தர் பிறந்தார். இவருக்கு பெற்றார் இட்ட சிறப்புப் பெயர் "நரேந்திரன்" என்பதாகும். இவரின் குருவான இராமகிருஷ்ணர் இறந்ததின் பின் அவருக்கு வழங்கப்பட்ட துறவுப் பெயரே விவேகானந்தர்.

"வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்பதற்கிணங்க இளமையிலே மிக்க மிடுக்குத்தனமும் விவேகமும் ஆற்றலும் மிக்கவராய் விளங்கினார். அப்பொழுதிருந்தே தெய்வீக ஞானமும் கொண்டு விளங்கினார். இறைபற்று, தெய்வ நம்பிக்கை உடையவராக விளங்கினார். தியானம், யோகப் பயிற்சிகளில் ஈடுபட்டார். சிறிய வயதிலேயே ஆன்மீகத் தேட்டம் இவரிடம் கூடவே இருந்தது. சமய ஒழுக்கம் சமயக் கல்வி என்பவற்றில் ஆர்வம் காட்டினார். இந்திய மக்கள் இவரை ஒரு அவதாரம் என்றே கருதினர்.

தெய்வ விக்கிரகங்களை வைத்து விளையாடுவதற்கு அவருக்கு விருப்பம் அதிகம். அவற்றிற்குப் பூசை பண்ணுவார். அவற்றிற்கு முன்னிட்டை கூட்டுவார். வீட்டிற்கு வரும் பிச்சைக்காரர்களுக்கு தன்னிடமுள்ள பொருள்களைக் கொடுத்து விடுவார். பள்ளிப்படிப்பை விடப் பொதுக்கல்வியில் விவேகானந்தருக்கு அதிக ஈடுபாடு இருந்தது. வடமொழி உட்பட நிறைய மொழிகளில் பாண்டித்தியம் இருந்தமையால் நிறைய உண்மைகளைக் கற்றறிந்தார். இவ்வாறு அமைந்த விவேகானந்தருடைய ஆரம்பகால வாழ்க்கை முறை இராமகிருஷ்ணருடைய தொடர்புகளுக்குப் பிறகு முற்றிலும் மாற்றமடைந்தது. இறைவனையே நேரில் கண்டது போன்ற ஒரு உணர்வு இவருள் எழுந்தது. அதற்குப்பின் இவருடைய பிறப்பு ஒரு தெய்வீக ஒளியை உலகிற்கு பரப்பியது. வீட்டில் இருந்தும் உறவுகளிலிருந்தும் பிரிந்து காவியுடை தரித்து துறவு பூண்டு ஆன்மீகப் பணியை விரைவுபடுத்தினார். செங்காவிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கம் என்றும் வங்கத்து பராமுனி என்றும் விவேகானந்தர் வெளியுலகிற்குத் தெரிய வந்தார்.

விவேகானந்தர் ஒரு சமயக் காவலர் என்பதை வெளியுலகிற்கு காட்டியது அவருடைய மனிதநேய சேவைகளும் அர்ப்பணிப்புக்களும் ஆகும். "எப்படியும் வாழலாம் என்பதை விட இப்படித்தான் வாழவேண்டும்" என்ற நியதி விவேகானந்தருடைய வாழ்க்கை முறைக்கு பொருந்தக் கூடியது. தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதோர் பாரத தேசத்தினை வாழ்விக்க விவேகானந்தர் தோன்றினார். இவருடைய சேவைகளை

சமயச் சீர்திருத்தம்
சமுதாயச் சீர்திருத்தம்
வாழ்வியல் சிந்தனைகள்

என்ற அடிப்படையில் ஆராய்ந்து அறிவது அவசியமாகும். இந்து சமயத்திலும், சமூகத்திலும் காலாதி காலமாக புரையோடிப் போயிருந்த மூடப்பழக்க வழக்கங்களைக் களைந்தெறிந்து நவீனத்துவமும், இறையன்பும் விளைந்த ஒரு மதத்தைக் கட்டியெழுப்புவதில் இவர் முனைந்து நிற்கின்றார். சமயம் என்பது சிந்தனைகளை இந்தியாவில் மட்டுமன்றி பிற நாட்டவர் மத்தியிலும் நிலைக்கச் செய்த பெருமை இவருக்குண்டு.

இந்து ஆன்மீக மரபின் நவீன சிற்பியாகிய சுவாமி விவேகானந்தரின் சாதனைகளால் இந்து சமயத்தின் பழமை மிக்க பெருமை உலகளாவிய நலையில் உயர்ந்தது மனிதநேயம், கடமையுணர்வு, மேல் நாட்டினருக்கு ஏற்றவாறு தனது தத்துவங்களை விளக்கிய திறன் ஆகியவற்றால் அவர் மனித குல தெய்வமாகவும் ஞானத்தின் வடிவமாகவும் திகழ்ந்தார். இவரது அளப்பரிய பணிகளால் இந்து மரபு உலகளாவிய நிலையில் ஏற்றம் கண்டது.

இந்து பண்பாட்டு மரபுகளைக் காலந்தோறும் காத்து வந்த பெரியார்களில் சுவாமி விவேகானந்தரும் ஒருவராவார். ஒரு வகையிலே இந்துக்களது பண்பாட்டினையும் இந்து சமயத்தினது கொள்கைகளையும் உலகெங்கும் பரவச் செய்த பெருமைக்குரியவர் விவேகானந்தராவார். இவர் ஒரு சமயவாதியாக மட்டுமன்றி தத்துவவாதியாகவும் துறவியாகவும் வாழ்ந்து எமது சமயத்தின் சிறப்பை விளங்க வைத்துள்ளார்.

சுவாமி விவேகானந்தருடைய வாழ்க்கை வரலாறு என்பது இந்துக்கள் ஒவ்வொருவராலும் பின்பற்றக் கூடியதாகும். இந்து ஒருவர் எத்தகைய இலட்சியங்களோடு வாழ வேண்டும் என்பதற்கு விவேகானந்தருடைய வாழ்க்கை வரலாறு ஓர் உதாரணமாகும். இந்த உலகில் ஒருவன் எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் அவனுடைய கொள்கைகள் ஆன்மீகத்தை நாடி நிற்கவில்லையாயின் அது ஒரு இலட்சிய மற்ற வாழ்க்கையாகும் என விவேகானந்தர் கூறுகின்றார்.

**"நிமிர்ந்த நெஞ்சும் நேர் கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத தன்மையும்**
**தெளிந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
**செம்மை மாந்தர் திறம்புவதில்லையாம்"**

என்பதற்கு அமைய சுவாமி விவேகானந்தரும் சிறந்த ஒழுக்கமும் வீரமும், ஞானமும் உடையவராய் விளங்கினார். சொல்லுகின்ற சொல்லும் செய்கின்ற செயலும் உறுதிமிக்கவர் இந்துக்கள் ஒவ்வொருவரும் அறிந்து தெளிந்து கொள்வதற்கான ஞான சிந்தனையின் உறைவிடமாக இவர் விளங்கியுள்ளார். மிக இளம் வயது தொட்டே ஆன்மீக ஞானமும் அருளும் பெற்ற விவேகானந்தர் இறக்கும் வரை தான் பெற்ற ஞானநெறியின் மூலம் இந்துமதப் பண்பாட்டுக்கும் சீர்திருத்தத்திற்கும் பல்வேறு நிலைகளில் பணியாற்றியுள்ளார். தன்னுடைய ஆன்மீகக் குருவான ஸ்ரீ இராமகிருஷ்ணரின் கொள்கையை உள்மனதில் கொண்டு அவற்றையே தனது வாழ்க்கை நெறியாகவும் உபதேசமாகவும் கொண்டு விளங்கினார்.

சுவாமி அவர்கள் வாழ்ந்த காலத்தில் குருபக்திக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இந்துக்களின் ஒழுக்க நியமங்களில் ஒன்று குருபக்தியாகும். அத்தகைய நெறிக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் சுவாமி விவேகானந்தராவார். "நான் தெய்வமாக வணங்குவதும் உயர்ந்த பிரமமாக நினைப்பதும் என் குருநாதன் ஸ்ரீகிருஷ்ணரின் அவதாரத்தையே ஆகும்." என விவேகானந்தர் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார். விவேகானந்தரின் பணிகள் பற்றி அறிவோமாயின் உண்மையான முழு நிறைவான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக பலமுள்ள ஒரு மதததைக் கட்டி எழுப்புவதிலேயே முழுமையாக நிற்கின்றார். என அறிய முடிகிறது.

சமய அடிப்படை
தத்துவ அடிப்படை
வழிபாடடு மரவு

என்ற நிலைகளில் இவருடைய சமயப்பணி அமைந்துள்ளது. இவருடைய ஆன்மீக சிந்தனைகள் இந்துக்கள் மத்தியிலே புதிய ஆன்மீக சிந்தனைகளை உருவாக்கியுள்ளன.

விவேகானந்தருடைய வழிபாட்டு முக்கிய நோக்கம் மக்களுக்கு சேவை செய்தலாகும். இத்தகைய விவேகானந்தருடைய சமயப் பணிகளை அறிந்து கொள்வதற்கு இராமகிருஷ்ணரின் செய்திகளை விளங்கிக் கொள்வது தவிர்க்க முடியாததாகும். விவேகானந்தருடைய குருவின் சிந்தனைகள் ராமிகிருஷ்ணமிசன் ஊடாகப் புலப்படுத்தப் படுகிறது.

இந்துக்களை பொறுத்தவரையில் சுவாமி விவேகானந்தர் ஒரு அவதாரமாகவே கருதப்படுகிறார். "வாழ்க்கை என்பது வாழ்வதற்காக மட்டுமன்றி மற்றவர்களை வாழ வைப்பதற்கு இறைவனால் தரப்பட்ட ஒன்றாகும்" என விவேகானந்தர் வெளிப்படுத்துவதிலிருந்து அவருடைய உயர்ந்த இலட்சியங்களை காணலாம். விவேகானந்தருடைய முக்கிய வாழ்க்கையின் நோக்கம் உலகியல் என்பதை விட தெய்வீகத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. சமயத் திரு நூல்களை எல்லோரும் படிக்கவும் அதிலுள்ள விடயங்களை அறிந்து கொள்ளவும் விவேகானந்தர் காரணமாக விளங்கினார். "இந்து சமயம் மேன்மையுற வேண்டுமானால் இந்திய தேசம் விரிவடைய வேண்டும்" என சுவாமி அவர்கள் அறைகூவல் விடுத்துள்ளார்.

யோகம், தியானம், தியாகம் என்பவற்றிற்கு எடுத்துக் காட்டாக விளங்கிய விவேகானந்தர் இவற்றினால் உடலும் உள்ளமும் தூய்மை அடையும் என விளக்கினார். உள்ளன்போடு கடவுளை தியானம் செய்து வழிபடுவதே "யோகம்" என விவேகானந்தர் குறிப்பிடுகின்றார்.

"மனிதன் எந்த மதத்தை அனுட்டிக்கின்றான் என்பது முக்கியமானதல்ல ஒரு சைவனாகவோ வைணவனாகவோ கிருஷ்ணனாகவோ தன் விருப்பப்படி வழலாம். ஆனால் உண்மையான பக்தியும் சிரத்தையும் அவனிடம் இருக்கு மானால் எம் மதத்தினூடாகவும் கடவுளை அடையலாம்" என விவேகானந்தர் குறிப்பிட்டுள்ளார். சுவாமி விவேகானந்தரை உலகமறிய ஏதுவாக அமைந்தது, அவர் அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் ஆற்றிய உலகப் பிரசித்தி பெற்ற பிரசங்கமே ஆகும். இந்து சமயத்தின் பெருமைகளையும் சிறப்புக்களையும் உலகமறிந்திரா வகையிலே உலகிலுள்ள எல்லா தேசத்தவருக்கும் இதன் பிறப்பை எடுத்துக் கூறியவர் விவேகானந்தர் ஆவார்.

இந்து சமயத்தின் சிறப்புக்களை மட்டுமன்றி பாரதத்தின் பண்பாட்டை உலகமறிவதற்கு ஏதுவாக விளங்கியவர் விவேகானந்தர் என்பதுடன் அவருடைய வாழ்க்கை வரலாறும் போதனைகளும் இந்துசமய தத்தவங்களில் உட்பொருளாக அமைகின்றன என்றால் மிகையாகாது. பிற்காலத்தில் இவருடைய குணங்களையும், இலட்சியங்களையும் நெறிப்படுத்தும் வகையிலே "விவேகானந்த சபை" ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனம் இந்தியாவில் மட்டுமன்றி இலங்கை போன்ற தென்கிழக்காசிய நாடுகளிலும் சிறப்படைந்துள்ளது. இலங்கையில் இந்நிறுவனமானது 1902ல் உருவாக்கப்பட்டு இன்று வரை செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

எனவே கி.பி. 10ம் நூற்றாண்டிலே இந்தியா தந்த மகான்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்கியது மட்டுமல்லாமல் இந்துக்கள் மத்தியிலே என்றுமில்லாத போதனைகளையாற்றி அவர்களை சிறந்த முறையிலே வாழ வழிவகுத்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

இந்து சமூக வரலாற்றிலே விவேகானந்தருக்கு முக்கியமான தொரு இடமுண்டு. இந்து சமயத்தில் உலகியல் வாழ்வும் சமய வாழ்வும் தனித்தனியே நோக்கப்பட்டும் கடைப்பிடிக்கப்பட்டும் வந்துள்ளது. அதற்கு மாறாக சமயத்தின் நோக்கம் சமூக வாழ்வை ஒதுக்குவதாக அமையக்கூடாது. சமயமானது சமூகத் தொண்டாகி மலர வேண்டும என்ற கருத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்திப் பணியாற்றிய பெருமை சுவாமி விவேகானந்தரையே சாரும். அத்துடன் இந்து மதத்தின் பெருமையினை உலகறியச் செய்தமையும் அவரின் மற்றொரு பணியாகவுள்ளது.

**"வாழ்வும் ஒரு முறை தான் மலரும்
அந்த வாழ்வு புனிதமானதாக
இறைநேயம் உள்ளதாக அமைய வேண்டும்"**

அத்துடன் சமயவாழ்வு, சமூகவாழ்வு அமையுமாறு பார்த்துக்கொள்ளல் வேண்டும். "இறைவா இறைவா என்று மூச்சடங்கி முந்நூறு முறை அழைப்பவனைக் காட்டிலும் இங்கு வா ஏ்னறு ஏழைகட்கு உதவுபவனுக்கே ஆண்டவன் அருள் கூடுதலாக கிடைக்கிறது" என்பது சுவாமிகளுடைய சமுதாய இலட்சிய வேட்கையாகும்.

1886ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி இராமகிருஷ்ணர் மறைந்ததும் அவரது சீடர் குழுவின் தலைமைப் பொறுப்பு முழுவதும் நரேந்திரனைச் சார்ந்தது. குருதேவரின் விருப்பப்படி சமூகத்திற்கு சேவை செய்யவென துறவு வாழ்வை விரும்பி ஏற்றார். உலகில் எங்கெங்கெல்லாம் வறுமையும் சாதியமும் யுத்தங்களும் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் சென்று அவற்றைத் தீர்க்க வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டார். இந்தியாவிற்கு வெளியே வேறுபல நாடுகளுக்கும் விவேகானந்தர் செல்வதற்கு இத்தகைய எண்ணங்களே தூண்டு கோலாக இருந்தது.

பிரயாணமே சிறந்த கல்வி என்பதை உணர்ந்த விவேகானந்தர் உண்மையான இந்தியாவைக் காணவென இமாலயம் தொடக்கம் கன்னியாகுமரி வரை யாத்திரை மேற்கொண்டார். ஏழை இந்தியரின் அவல நிலை கண்டு வருந்தினார். தாழ்த்தப்பட்டோரின் வீடுகளில் தங்கினார். மக்கள் ஒவ்வொருவரும் சுதந்திர எழுச்சியுடனும் துணிவுடனும் இருக்க வேண்டும் எனப் பிரச்சாரம் செய்தார். "எழுமின் விழிமின்...குறிசாகும் வரை உழைமின்" என மக்களை தட்டியெழுப்பினார். சமயக் கருத்துக்களைச் சமூகத்துடன் இணைக்காமல் சோம்பேறிகளாகத் தூங்கிக்கிடந்த இந்திய சமூகத்தை விழிப்படையச் செய்தார்.

இத்தகைய ஒரு புரட்சியை இந்து சமூகத்தில் ஏற்படுத்துவதற்கு விவேகானந்தர் உடைய வீர உரைகளே காரணமாயின. இவருடைய பிரசங்க முறைகள் இந்திய மக்கள் மத்தியில் மட்டுமன்றி சர்வதேசமெங்கும் பிரபல்யம் பெற்றன. மேல்நாட்டு மோகத்தில் சிக்கியிருந்த இந்தியர்களுக்கு அவர்களது ஆன்மீகப் பாரம்பரியச் சிறப்பினை உணர வைக்க வேண்டுமென உறுதி பூண்டார். அதன் விளைவே 1893ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ம் திகதி அமெரிக்காவின் சிக்காக்கோ நகரிலுள்ள கொலம்பஸ் மண்டபத்தில் அவர் நிகழ்த்திய உரையாகும்.

இன்று வரை சர்வதேசமெங்கும் இந்தியாவின் ஆன்மீகப் புகழ் விளங்குவதற்கு வழி சமைத்தவர் விவேகானந்தர் என்றால் மிகையாகாது. சமயம் வாழ வேண்டுமானால் முதலில் சமூகம் வாழ வேண்டும் என்பது அவரது தத்துவம் "தெய்வங்களாகுங்கள் பிறரைத் தெய்வங்களாக்குங்கள்" என்று முழங்கினார். உலகில் வாழும் மக்கள் அனைவரும் இறைவனின் புதல்வர்கள் என்ற உணர்வினையும் இந்து மதத்தின் பரந்த நோக்கினையும் தன் பேச்சால் வெளிப் படுத்தினார். அமெரிக்கப் பத்திரிகைகள் சுவாமிகளின் சொற்பொழிவிற்கு அதிக முக்கியத்துவம் தந்தன. மூன்று ஆண்டுகளுக்கு மேல் அமெரிக்காவில் பணியாற்றினார். அமெரிக்காவில் இந்து மத அறிவைப் புகட்டுவதற்கு என சன்பிரான்சிஸ்கோ நகரிலே "சாந்தி ஆச்சிரமத்தை" நிறுவினார். பின்னர் இங்கிலாந்திலும் பணியாற்றினார்.

இங்கிலாந்திலிருந்து தாய் நாட்டிற்கு திரும்பிய போது இலங்கைக்கும் விஜயம் செய்தார். 1897ம் ஆண்டு விவேகானந்தர் இலங்கையில் மேற்கொண்ட விஜயம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அந்த ஆண்டு இலங்கை அரசு அவர் சார்பில் முத்திரையும் வெளியிட்டு கௌரவித்தது. அவர் கண்டி, கொழும்பு, மாத்தளை, அனுராதபுரம், வவுனியா ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து

நமது மதம்
பரிசுத்த பாரத பூமி
சமய வாழ்வில் சகிப்புத்தன்மை

ஆகிய தலைப்புக்களில் உரை ஆற்றினார். அவர் தனது உரைகளில் இறை வழிபாட்டின் அவசியத்தையும் சமூக ஒற்றுமையின் அவசியத்தையும் மனித சேவையின் அவசியத்தையும் வலியுறுத்தியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசினார். இவரின் இலங்கை விஜயத்தின் நினைவாக 1902ல் நிறுவப்பட்டதே கொழும்பு விவேகானந்த சபையாகும். அது இன்று இலங்கையில் மனிதவள சேவைகள் பலவற்றை ஆற்றி வருகின்றது.

விவேகானந்தரின் நினைவாக நிறுவப் பட்ட விவேகானந்த சபை இலங்கையில் மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் இன்று சமய சமூக பணிகளை ஆற்றி வருகின்றது. விவேகானந்தர் தன் குரு மூலம் பெற்று மக்களுக்கு ஆற்றிய சேவைகள் பின்வருமாறு இவற்றையே இன்று விவேகானந்த சபையும் இராமகிருஷ்ண மடமும் ஆற்றி வருகின்றன.

01. உலகில் சமூக ஒடுக்கு முறைகள் தீர்க்கப்பட வேண்டும். சாதியம் ஒழிக்கப்பட வேண்டும். ஏழைகள் புத்துயிர் பெற வேண்டும். ஊழைப்பின் மூலம் ஒருவன் உயர்ந்து நிற்க வேண்டும்.
02. கலை, விஞ்ஞானம், தொழில்நுட்பம் முதலியவற்றை வளப்பதோடு இந்து சமயத்தில் அறிவியல் சார்ந்த சிந்தனைகளை முன்னெடுக்க வேண்டும். சமுதாயம் ஒன்று நல்ல முறையில் மேம்பட வேண்டுமானால் கல்வியறிவு மேம்பட வேண்டும்.
03. ஆசிரியர்கள் சிறந்த முறையில் பயிற்சி பெறச்செய்து பொது மக்களுக்கு சிறப்பாக பணியாற்ற உதவ வேண்டும். பாட சாலைகள், கல்லூரிகள், ஆதுலர் சாலைகள், வேலைத்தளங்கள், வயோதிபர் இல்லங்கள் என்பவற்றை அமைத்து சேவை செய்ய வேண்டும்.
04. வெள்ளம், நெருப்பு, சூறாவளி போன்ற இயற்கை அழிவுகள் ஏற்படுகின்ற போது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குதல். சமய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வெளியிடுதல்.

இந்துமத வளர்ச்சிக்குத் தொண்டுகள் பல புரிந்து இந்து மதத்தின் சிறப்பினை உலகறியச் செய்த மகான்கள், ஞானியர்கள் பலராவார். அத்தகையோர் வரிசையிலே மாபெருந்துறவியாக மகானாக, தீர்க்கதரிசியாக, தேசபக்தராக உலகம் போற்றும் உத்தமராக சுவாமி விவேகானந்தர் விளங்குகின்றார். இவர் இந்து மதத்தின் உயர்ச்சிக்கும் மனிதகுல மேம்பாட்டுக்கும் ஆற்றிய பணிகள் கால முள்ளளவும் நினைவு கூரத்தக்கதாகும். சுவாமி விவேகானந்தரது சிறப்புக்களை வெளிப் படுத்துவதாக அமைவதே இவரது இதய நாதமாய் ஒலிக்கும் "எழுமின் விழுமின்" என்ற நாத தத்துவம்.

சுவாமி விவேகானந்தர் எழுமின் விழுமின் என்ற உயர் குறிக்கோளை முன் வைத்து ஆன்மீக வாழ்க்கைக்கு வழிப் படுத்தியமை அன்னாரவர்களது பணிக்கு தக்க எடுத்துக்காட்டாகும். மறுவுலக வாழ்க்கைக்கு சமய ஞானம் வேண்டியதாகும். எனவே தான் சுவாமி விவேகானந்தர் ஆன்மீக பலம் பொருந்திய இந்தியாவைக் கட்டியெழுப்ப முனைந்தார். வேதாந்த உண்மைகளையும் அத்வைத மார்க்கத்தினையும் மக்களிடையே பரப்ப முனைந்தார். ஞான மார்க்கத்தின் சிறப்பினை மக்களுக்கு உணர்த்தியதோடு அதன் வாயிலாக ஆன்மீக விடுதலைக்கு வழிப்படுத்தியமை சுவாமி விவேகானந்தரது பெரும் பணியாக அமைகின்றது எனக்கொள்ள முடியும்.

"எழுமின் விழிமின் குறிக்கோளை அடையும் வரை பணி செய்மின்" என்ற கருத்துள்ள இலட்சியத்தை குறிக்கோளாகக் கொண்ட சுவாமி விவேகானந்தரது பங்களிப்பு இக்கால சீர்திருத்த நெறியாளர்களுக்கு முன் மாதிரியாக அமைந்தது என்றால் மிகையாகாது. தமது உயரிய போதனைகளால் மக்கள் சமுதாயம் உய்யும் நெறி காட்டிய உத்தமராக விளங்கியவர் சுவாமி விவேகானந்தராவார். அன்னாரவர்களது எழுமின் விழுமின் என்ற தாரக மந்திரம் உலக மக்கள் யாவராலும் பின்பற்றக் கூடிய உயர்ந்த போதனையாகும்.

மனித குலம் உய்யும் நெறி காட்டிய உத்தமர் சுவாமி விவேகானந்தராவார். மக்கள் சமூகத்திற்குச் சேவை ஆற்றுவதே தமது தலையாய கடனெனக் கொண்டு தமது வாழ்நாளை அர்ப்பணித்துப் பணி புரிந்தவர் சுவாமி விவேகானந்தர் "செய் அல்லது செத்து மடி" என்ற உயரிய வாக்குக் கேற்ப அன்னாரவர்கள் தொண்டுகள் பல புரிந்தார். அறியாமை என்னும் இருளிலும், ஏழ்மையாலும் வாழந்த மக்களின் இன்னலைத் துடைத்தெறிய அவர் விழைந்து நின்றார். சுவாமி விவேகானந்தர் ஏழைகள் மீது அனுதாபம் கொண்டார். அவர்கள் துயர் துடைக்க அயராது உழைத்தார். "எழுமின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிமின் பணி செய்மின்'' என்ற உயர்ந்த நோக்கிற்கு இணங்க மனித குலத்தின் துயரினைத் துடைத்து விடிவு காணப் புறப்பட்டவர் சுவாமி விவேகானந்தர். அன்னாரவர்கள் ஏழைகளின் உள்ளத்தில் இறைவனைக் கண்டார். துன்பப்பட்டவர்கள், பலவீனர்கள், இழிந்தோர்கள் யாவருக்கும் தெய்வத்தின் வடிவங்கள் என்ற உயர்ந்த எண்ணங் கொண்டவர் இவர். "ஏழைகளுக்காக எவனொருவன் இதயம் குருதி கசிகின்றதோ அவனே மகாத்மா'' என்று வணங்கத்தக்கவன் என்ற உள்ளங் கொண்டவராக சுவாமி விவேகானந்தர் விளங்கினார். இத்தகைய தூய சிந்தனையானது விவேகானந்தர் ஏழைகள் மீதும், மனித குலத்தின் மீதும் கொண்டிருந்த அன்புணர்வையும், மனித நேயத்தையும் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது எனக் கொள்ளலாம்.

சுவாமி விவேகானந்தர் பக்தி, தூய்மை, சேவை மனப்பான்மை மனித வாழ்வின் இலட்சியமெனக் கொண்டு வாழ்ந்ததோடு இவற்றை மனித குலத்திற்கும் எடுத்துரைத்தார். சுவாமி விவேகானந்தரது பணிகளுள் சமூக சமரச சன்மார்க்க நெறியினை வலியுறுத்தியமை பிரதானமாகும். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற தமது குருநாதரின் உபதேசங்களை உலக மாந்தர்க்கும் புகட்டும் வகையிலே விவேகானந்தரது செயற்பாடு அமைந்தது. இனப்பூசல்கள், மதப்பூசல்கள் பிரிவினைகள் தலைவிரித்தாடிய வேளையிலே மனிதநேயத்துடன் சகோதர உணர்வை தமது போதனைகளால் எடுத்துரைத்தவர் விவேகானந்தர். "எழுமின் விழிமின்'' என்று மக்களை அழைத்து அறியாமை என்னும் இருளை அகற்றி அறிவொளி புகட்டி சமூக சமரச நெறியினை மக்கள் உள்ளத்தே விதைத்து மீட்சி பெற வைத்தவர் சுவாமி விவேகானந்தர் ஆவார்.

✦✦✦

உலகத்தில் கொடுப்பவனின் நினைவிலேயே நீ எப்போதும் நில். ஒவ்வொன்றையும் கொடுத்துவிடு. பிரதிபலனாக ஒன்றையும் எதிர்பாராதே. அன்பைக்கொடு, உதவியைக் கொடு, பணியைக் கொடு, உன்னால் இயன்றளவு சிறிதாவது கொடு. ஆனால் அதன்பொருட்டு விலைபேசுவதை ஒளித்துவிடு, நிபந்தனைகளை ஏற்படுத்தாதே. நம்மீது நிபந்தனை எதுவும் சுமத்தாமல் இறைவன் நமக்கு கொடுப்பதைப் போல் நமது தாராள குணத்தால் நாமும் கொடுப்போமாக. தன்னுடைய சொந்த சுகவசதிகளை மட்டும் கவனித்துக் கொண்டு சோம்பல் வாழ்க்கை வாழும் சுயநலகாரனுக்கு நகரத்தில்கூட இடம் கிடையாது.


**- சுவாமி விவேகானந்தர் -**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துரை பிரதிப்பிரதம செயலாளர்
திரு.திருநாவுக்கரசு இராசநாயகம்



மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்
திரு.ப.அரியரத்தினம் அவர்களது
வாழ்த்துரை



கும்பாபிஷேக தினத்தன்று வாழ்த்துரை
கௌரவ சிவஞானம் ஸ்ரீதரன்
பாராளுமன்ற உறுப்பினர் யாழ் மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக மகிமை

**திரு. தாயுமானவர் நிகேதன்**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
இந்துசமயம்
கிளிநொச்சி கல்வி வலயம்

எங்கும் பரந்து விளங்கும் இறைவனாக உருவத் திருமேனியில் தியானித்து ஆலாகித்து வழிபட வேண்டிய முறைகளை ஆகம நூல்கள் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறுகின்றது. இந்த உருவத் திருமேனியை வைத்து வழிபட வேண்டிய தலம் எத்தகையதாய் அமைய வேண்டும் என்பதையும் ஆகமங்கள் கூறி இருக்கின்றன. இறைவன் உருவத் திருமேனி பெற்று அருள்பாலித்த இடம் ஆலயமாகும். அதன் பிரகாரம் தேவாயதனம் என்று பல பெயர்கொண்டு அழைக்கப்படும் பொதுவாக ஆலயம் என்ற பெயரால் பெரும்பாலும் வழங்கப்படுகிறது. ஆ - ஆன்மாக்கள் லயம் - ஒடுங்குதல் என்ற கருத்தாகும். ஆன்மாக்கள் இறைவன் சக்திசிவ சமேதராய் பக்திக்குள் ஒடுங்கும் தன்மையைப் பெறுவதால் ஆலயம் என்று பெயர் வழங்கலாயிற்று. விதிமுறையாக ஆலயத்தை சந்நிதியை அமைத்து அவரவர் விரும்பும் உருவத் திருமேனியைத் தாபித்துக் கும்பாபிஷேகம் செய்து வழிபட்டு வருவதை நாம் காண்கிறோம்.

கும்பாபிஷேகத்தை "பிரதிஷ்டா" என்பர். பிரதிஷ்டா என்பது சிறப்பாக நிற்றல் என்று பொருள்படும். இறைவன் ஆலயத்திலே சிறப்பாக நிற்கும் பொருட்டு செய்யப்படும் மங்களகரமான கிரியைகள் கும்பாபிஷேகம் என்று அழைக்கப் படும். ஒரு ஊரிலே மகாகும்பாபிஷேகம் நடைபெற்றால் தெய்வ சாந்நித்தியம், ஊர்சிறப்பு, நகர்ச்சிறப்பு. மனதில் சாந்தி, மக்கள் செல்வச் சிறப்பு, உயர்கல்விச் சிறப்பு, அரச நீதிச் சிறப்பு, சுபீட்ச வாழ்வு, உலக நன்மை என்பன கிடைக்கும்.

பொதுவாக கும்பம் ஒன்றானது பின்வரும் நத்துவார்த்தத்தை வெளிப்படுத்துவதமாக அமையப்பெற்று இருக்கக் காணலாம். குடம் தசையையும் அதனுள் உள்ள நீர் குருதியையும் அதனுள் உள்ள இரத்தினங்கள் எலும்பு களையும் குடத்தைச் சுற்றியுள்ள நூல் நாடிகளையும் செபிக்கப்படும் மந்திரம் உயிரையும் கூர்ச்சம் (தர்ப்பை) தலை முடியையும் மாவிலை - சடையையும் தேங்காய் தலையையும், வஸ்திரம் - தோலையும் குறிப்பதுடன் பஞ்சபூதங்களிலும் நிறைந்துள்ள இறைவனை மந்திரங்களான உயிரூட்டி விக்கிர கங்களில் உறையச் செய்யும் வகையிலேயே குடமுழுக்கு வைபவங்கள் இடம்பெறுகின்றன.

இறைப் பரம்பொருள் பற்றிப்பேசும் சிறப்பு நூல்களாய் ஆகமங்களில் இறைவனை வழிபடும் முறையை விளக்கும் பகுதியே கிரியாபாதம் எனப்படும். இதில் கிரியைகளுக்கே முதலிடம் அளிக்கப்படும். திருக்கோயில்களில் செய்ய வேண்டிய கிரியைகளை மூன்று பிரிவுகளாக அமைத்துக் கூறுகின்றனர்.

1. கர்ஷனாதி பிரதிஷ்டார்த்தம்
2. பிரதிஷ்டாதி உற்சவாத்தம்
3. உற்சவாதி பிராயச்சித்தாந்தம்

கர்ஷனாதி பிரதிஷ்டார்த்தம் என்பதில் "கர்ஷனம்" என்பது உழுதல் எனவும் "பிரதிஷ்டா" என்பது இறைவனைச் சிறப்புற விளங்கச் செய்தல் என்றும் பொருள்படும். "பிரதிஷ்டாதி நிஷ்டதி" அநயா ப்ரக்கிரியா சிவ ; இதி பிரதிஷ்டா என்றும் பிரதிஷ்டா என்றும் சொல்வதற்கு விளக்கம் உண்டு. எனவே உழுதல் முதல்கொண்டு இறைவனைச் சிறப்புற விளங்கச் செய்தல் வரையிலான கிரியைகளை விளக்கும் பகுதி கர்ஷனாதி பிரதிஷ்டாந்தம் என்று கூறப்படுகின்றது. அதாவது எங்கும் நீக்கமற நிறைந்தும், கடந்தும். உள்ளும் இருப்பவராகிய இறைவன் எந்தக் கிரியை களினால் சாநித்யம் பெற்று சிறப்புற விளங்குகின்றாரோ அதற்கு பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் என்று சொல்லப்படும் இப்பிரதிஷ்டை ஆனது,

1. அநாவர்த்தனம்
2. ஆவர்த்தனம்
3. புனராவர்த்தனம்
4. அந்தரிதம்

என நான்கு வகையாக சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளது.

ஆலயத்தை ஆகம முறைப்படி புதிதாக அமைத்து அங்கு இறைவனைப் புதிதாக பிரதிஷ்டை செய்தல் "அநாவர்த்தனப் பிரதிஷ்டை" எனவும் பன்னெடுங் காலங்களிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு நிர்மானிக்கப்பட்ட ஆலயத்தில் நெடுங் காலமாக பூசைகள் நிகழ்ந்துவரும் வேளை எதிர்பாரதவாறு காடுபடர்தல், மண்மாரி, தீ பரவுதல், இயற்கை அனர்த்தம் முதலியவை நிகழ்ந்து ஆலயம் பாதிக்கப்பட்டபொழுது அவ் ஆலயத்தை வெளிக் கொணர்ந்தோ அல்லது முன்போல் ஆலயத்தை நிர்மானித்தோ நிகழ்த்தும் பிரதிஷ்டை "ஆவர்த்தனப் பிரதிஷ்டை" எனவும் ஆலயத்தில் விமானம், கோபுரம், மண்டபங்கள், பிரகாரம், ஆலய விக்கிரகங்கள் ஆகியவற்றில் எவையேனும் வெடித்தோ அல்லது பிளந்தோ சேதமடையின் பாலஸ்தாபனம் செய்து அவற்றை ஜீர்ணோத் தாரணம் செய்து (முன்போல் செய்து) பிரதிஷ்டை செய்தல் "புனராவர்த்தனப் பிரதிஷ்டை எனவும் ஆலயத்தில் மக்கள் எவரேனும் இறபப்பினும், மிருகங்கள் கொல்லப்படினும், விலக்கான பெண்கள் நுழையினும், கள்வர். நாய். கழுதை, பன்றி. குரங்கு, வேதாகமங்களை நிந்திப்பவர்கள் நுழையினும் செய்யப்படும் பிரதிஷ்டை அந்தரிதப் பிரதிஷ்டை ஆகும். இந்த அந்தரிதப் பிரதிஷ்டைக்கு சுபமுகூர்த்த நிர்ணயம் கிடையாது. மேற்கூறிய மூன்று பிரதிஷ்டை களும் நல்ல சுபமுகூர்த்தத்தில் நிகழ்த்துதல் வேண்டும். திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்து உறுப்புக்களான பஞ்சாங்க சுபமுகூர்த்தத்தில் இருத்தல் அவசியம். இலக்கணம் ஸ்திர ராசியாக அமைவது உத்தமம். கிரகங்கள் அனுகூலமான இடங்களில் இருக்கவேண்டும். கிரியைகளின் கிரமங்களை நோக்கும் போது கர்மாரம்பம் முதல் யாகாரம்பம் வரையுள்ள சாந்தி கர்மாக்கள், பூர்வாங்கம் எனவும் யாகபூஜை முதல் மண்டலாபிஷேகம் வரையான கிரியைகள் உத்தராங்கம் எனவும் அழைக்கப்பட்டும். கும்பாபிஷேகம் தொடக்கம் முதல் முடிவுறும் வரை நிகழ்வுகளை எட்டுப் பெரும் பிரிவுக்குள் உள்ளடக்கிக் கொள்ளலாம். இவற்றுள் முதலாவது வரித்தல் அனுமதிபெறல் பிரார்த்தித்தல் என மூன்று அம்சங்களைக் கொண்டிருக்கக் காணலாம்.

**அ) வரித்தல்**

ஒரு கும்பாபிஷேகத்தை நடத்தத்தக்க ஆசாரியாரைத் தேர்ந்தெடுத்தல் மனிதனுடைய வாழ்க்கை தெய்வப் பண்புடையதாய் அமைய வேண்டுமானால் முதலில் தகுந்த குருவைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியது இன்றி யமையாததாகும். அது போலவே இறைவனைப் பிரதிஷ்டை செய்யத் தகுதி வாய்ந்த சிவாச்சாரியார் ஒருவரை முதலில் தேர்ந் தெடுப்பது மிக முக்கியமானதாகும். ஆசாரியார் நல்லொழுக்கம் ஆகம சாஸ்திர அறிவு பக்தி என்பன நிறைந்தவராய் இருக்க வேண்டும். சிவாசாரியாருடைய தவவலிமை யாலும் நித்திய நைமித்திய பூசை முறையாக நடந்து வருவதாலும் உருவத்திரு மேனியை நன்கு அலங்கரித்துத் தூய்மையாக வைத்திருப் பதாலும் விக்கிரகம் தெய்வத் தன்மையுடைய தாய் விளங்குகின்றது என்று ஆகம சாஸ்திரம் கூறுகின்றது. அதில் சிவாசாரியாருடைய தவ வலிமையை முன்னதாக எடுத்தக் காட்டியிருப் பதால் கும்பாபிஷேகத்திற்கு முதலாவதாக ஆசாரியவரணம் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

**ஆ) அனுமதி பெறல்**

ஆசாரியார் பாலாலயம் சென்று இறைவனிடம் தருணாலயத்தில் பிரதிஷ்டை செய்ய அனுமதி தருமாறு வேண்டுதல். இதனை தேவாநுஞ்ஞை என்பர். அடுத்தது ஒழுக்கமும் சீலமும் பொருந்திய வேத மந்திரம் கற்றுணர்ந்த அந்தணர்களைக் கிழக்கு முகமாக மண்டபத்தில் அமரச் செய்து அவர்களுக்கு சந்தணத் தாம்பூலம் கொடுத்து மலரால் அவர்களை அர்ச்சித்து அவர்களிடம் அனுமதி பெறுவதாகும். கற்றுணர்ந்த சபையோர்களே இறைவனைப் பாலாலயத்திலிருந்து தருணாலயத்திற்கு கொண்டு சென்று பிரதிஷ்டை செய்ய இறைவனிடம் அனுமதி பெற்றோம். அக்கிரியை களில் மந்திரங்கள் விட்டுப் போகாமலும் கிரியைகள் மாறுபடாமலும் நடத்தித் தரவேண்டும். மேலும் எனக்கும் பிரதிஷ்டை செய்யக்கூடிய தகுதியையும் அருளவேண்டும் என்று ஆசாரியார் பிரார்த்திக்க அவர்களும் இறைவனின் பிரதிஷ்டாகர்மாவைச் செய்து முடிக்க உமக்கு ஆற்றல் உண்டாகுக என்று ஆசி கூறுவர். இதனைப் பிராமணானுமதி பெறல் என்பர்.

இறைவனைப் பிரதிஷ்டை செய்ய அந்தணர்கள் வாழ்த்து அனுமதி அவசியமா என்ற ஐயம் எழலாம். கண்ணன் கூறுகின்றான்.

"இவ்வுலகம் இறைவனருளால் இயங்கு கிறது. அந்த இறைவன் எங்கும் வியாபித் திருக்கிறான். ஆகாசவெளியிலும் கலந்து நிற்கிறான். அவனை வழிபட்டு அவனருளைப் பெற உருவத்திருமேனியில் மந்திரம் கூறி ஆவாகித்துப் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. ஆகவே அந்த இறைவன் மந்திரத்திற்குட் பட்டவன். அந்த மந்திரம் அந்தணர்களால் கற்கப்பட்டு விளங்குகின்றது. மந்திரம் அந்தணர் களுக்குரியதாகின்றது. அந்த அந்தணர்கள் எனக்குப் போற்றத்தக்கவர்கள். ஏனெனில் எல்லா உயிர்களும் வழிபட்டு உய்ய உருவத்திரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேனியில் என்னை ஆவாகிக்கும் மந்திரம் அந்தணரிடம் உறைவதால் அவர்கள் எனக்குப் போற்றத்தக்கவர்கள் என்று வியந்து கூறினான்.

தாய் தந்தையர் சேர்க்கையால் குழந்தை உண்டாகின்றது. அக்குழந்தை வளர்ந்து மனிதனாகின்றான். அவன் குருவினிடம் சென்று மந்திரத்தைக் கற்றுக்கொள்ளுகிறான் என்ற நியதி அளவில் மட்டிலும் அவன் அந்தணனாக மாட்டான். தாய் தந்தையர் சேர்க்கையால் உதயமாகின்ற மைந்தனுக்குத் தூய்மை உண்டு பண்ணக்கூடிய சில கிரியை முறைகள் விதிக்கப்பட்டுள்ளன. குழந்தை பிறந்த உடன் தங்கத்தை உரைத்து தேனில் கலந்து எல்லாத் தெய்வங்களும் உனக்கு நல்ல நிறைவைக் கொடுக்கட்டும் என்று மந்திர வாழ்த்துக்கூறித் தந்தை மைந்தனின் நாவில் தடவுகிறார். பின் மூன்று வேதங்களின் சாரமான பிரணவத்தைக் கூறித் தயிரையும் மைந்தனின் நாவில் தடவுகிறார். தேவமந்திரம் கற்கத் தகுதியுள்ள வனாய் என்று வாழ்த்துக் கூறுகின்றார். மேலும் இதுபோன்று சில கிரியைகளால் அக்குழந்தை தந்தையின் இந்திரியத்தால் வரும் தோஷமும், தாயின் கர்ப்பவாசத்திலுள்ள தோஷமும் நீங்கப்பெற்று பரிசுத்தமாக விளங்குகின்றது. பின் ஏழாம் வயதில் வேதசாரமான காயத்திரியைத் தந்தை மகனுக்கு உபதேசிக்கிறார். அவன் முறையாக ஜபித்து வருகின்றான். இதனால் அவன் உள்ளம் தூய்மை அடைகின்றது. பின் குருவை அடைந்து வேதத்தை முறையாகக் கற்கிறான். தாயின் கர்ப்பவாசத்திலிருந்தே தூய்மை பெற்று வளர்ந்து வருகின்ற பாலகன் வேதத்தைக் கற்பதால் அந்த வேதம் சித்தியுடையதாகின்றது. ஆகவே அந்தணர் அனுமதி என்பது அவர்கள் உள்ளத்திலிருந்து வருகின்ற வாழ்த்து அது வேதபுருஷனின் வாழ்த்து அனுமதியாகும். ஆகவே தான் இரண்டாவதாகப் பிராமணநுஞ்ஞை கூறப் பட்டுள்ளது.

**1) பிரார்த்தித்தல்**

எந்த ஒரு காரியத்தையும் இடையூறு இல்லாமல் நிறைவேற்ற விநாயகப் பெருமான் திருவருள் வேண்டும். காற்று, மடை, நெருப்பு முதலிய உத்பாதங்கள் நிகழாது மங்களகரமான கிரியைகள் நிறைவேற நவக்கிரகங்களின் அருள் வேண்டும். ஆகவே கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் இவ்விரண்டையும் சிவாசாரியார் செய்து முடிக்கின்றார். இது பிரார்த்தனையாகும்.

**2) சுத்திகரித்தல்**

எந்தவொரு காரியத்தை செய்து முடிக்கப் பொருள் இன்றியமையாதது. அருள் அல்லார்க்கு அவ்வுலகமில்லை. பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை என்ற முதுமொழியை யாவரும் அறிவர். ஆகவே சிவதர்மம் செய்து முடிக்கப் பொருள்மிக முக்கியமானது. அந்தப்பொருள் தூய்மையுடையதாய் இருக்க வேண்டும். அதாவத நேர்மை வழியில் அப்பொருள் ஈட்டியதாக அமையவேண்டும். சிவ தர்மத்திற்கு ஈட்டியபொருள் பலவழியாக வந்திருக்கக்கூடும். ஆகவே அப்பொருளைச் சுத்திகரித்தல் என்ற கிரியை குரு நடத்துகின்றார். சிவாஸ்திர மந்திர ஜெபம், ஹோமம் முதலியவற்றைச் செய்து கும்ப நீரால் தெளித்துச் சுத்தமாக்கிப் பதினொரு பாகமாகப் பிரித்து எஜமானிடம் கொடுத்து சிவதர்மத்தைச் செய்துமுடிக்குமாறு ஆசாரியர் தெரிவிக்கின்றார்.

பொருளைச் சுத்திகரித்தபின் குரு தன்னையும் இறைவன் உறைவிடமான ஆலயத்தையும் சுத்திகரிக்கின்றார். மதுபாகம் என்னும் கிரியைச் செய்து ஆன்ம சுத்தியைப் பெறுகிறார். நெய், தேன், பழம் இவைகளில் ஆன்ம தத்துவம் வித்யா தத்துவம், சிவதத்துவம் என்ற மூன்று தத்துவங்களையும் பூசித்து மதுபாகத்தை அருந்துகின்றார்.அறிந்தோ அறியாமலோ முற்பிறவியிலோ சிவநிந்தை, சிவ சாஸ்திர நிந்தை, சிவனடியார் நிந்தை இவைகளைச் செய்திருந்தாலும் அத்தோஷம் நீங்கப்பெற்றுக் குரு ஆன்ம சுத்தியுடையவராய் விளங்குகின்றார். பின் பத்துவகையாக நீராடிப் புறச் சுத்தியைச் செய்துகொள்ளுகின்றார். அதனால் உடல் ஆரோக்கியம் பல வகையான பாவங்கள் நீங்குதல், மனத்தில் ஒருமைப்பாடு, திரிகரணசுத்தி இவைகளைப் பெறுகின்றார். நல்லறங்களைச் செய்யத் தொடங்கும் பொழுது தீயவர் தீய சக்திகளை உபயோகித்து இடையூற்றை விளைவிப்பார். அத்தீய சக்தி களை நீக்க ரட்சோக்ந சாந்தியைக் குரு செய்கின்றார். நான்கு திசைகளிலிருந்த வரும் தீயசக்திகளை அழிக்கும் ஆற்றல் மிக்க தேவர்களே உங்களுக்கு வணக்கம் எம்மைக் காத்தருள் புரிவீர்களாக என்று பிரார்த்தனை அமைந்துள்ளது.

தீயசக்தியை நீக்கியபின் ஆலயத்தின் வெளிவீதியில் எண்திசைகளில் நின்று அமைதியை நிலையைக் குலைக்கும் யக்கர், அரக்கர், பூதங்கள், பிசாசுகள். பிரமராஷஸர், மஹாகாளி, சரஸீவடுகர் ஆகிய எண்மருக்கும் பலி உணவு கொடுத்து மரியாதை செய்து நீங்கள் இவ்விடத்தை விட்டு நீங்கி மலையடிவாரம், காடு, ஆற்றங்கரைகள், பாலைவனம். மயானம் முதலிய இடங்களிற் சென்று வசியுங்கள். இங்கே இறைவனுடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டை நடைபெறப் போகின்றது. என்று கூறிப் பிரவேசபலி என்ற கிரியையைக் குரு செய்கின்றார். தீய சக்திகளை விரட்டி அரட்டி அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவரைத் தூரச் சென்று வசிக்குமாறு குரு ஆணையிடுகின்றார். பின் கிராமசாந்தி என்ற கிரியையை நடத்துகின்றார். ஆலயம் மட்டும் சுத்தமானாற் போதாது அக்கிராமத்தில் வசிப்பவர்களும் நோய் பிணியற்றவர்களாய் அகால மரணமற்றவர்களாய் வறுமையற்றவர்களாய், தீமையற்றவர்களாய் விளங்க வேண்டும். அப்பொழுதுதான் ஆலயம் சிறப்புடையதாகும். அடியார்கள் வந்து தரிசிப்பதனாற்தான் ஆலயம் தெய்வ சாந்நித்யம் உடையதாய் விளங்கும். ஆகவே கிராமசாந்தி என்று பெயர் வழங்கப்பட்டது. அதனைச் செய்து அதன்பின் பிரமா, இந்திரன் அக்கினி முதலிய எண் திசைப் பாலகர்கள் அவ்விடத்தில் வந்து வசிக்கக்கூடியதாகப் பூமியைச் சுத்திகரிக் கின்றார். அதன் பொருட்டு வாஸ்துசாந்தி என்ற கிரியையைச் சிவாசாரியார் செய்கின்றார்.

**வாஸ்துவின் வரலாறு**

முன்னொரு சமயம் அந்தகன் என்ற அசுரனுடன் இறைவன் போர்செய்யும் பொழுது அவரது மேனியிலிருந்து வேர்வைத்துமி நிலத்தில் விழுந்தது. அத்துமி உலகம் முழுவதையும் தன்னுள் விழுங்கும் வலிமை பொருந்திய பூதமாகத் தோன்றியது. இறைவன் கட்டளையால் அந்தப்பூதம் அந்தகாசுரன் இரத்தத்தைப் பருகியபின் சிவபெருமான் மகழ்ச்சியுற்று அப்பூதம் விரும்பிய வரங்களைக் கொடுத்தார். வரங்களைப் பெற்றுப் பூதம் மூவுலகத்தையும் கொடுமைப்படுத்தியது. தேவர்கள் இறைவனிடம் தஞ்சம் புகுந்தனர். சிவபெருமான் உருத்திரனையும் பாசங்களையும் படைத்தருளினார். சிவபெருமான் பூதத்தின் வலிமையை ஒடுக்குமாறு கட்டளையிட்டார். உருத்திரனும் பாசங்களால் அப்பூதத்தை கட்டி நிலத்தில் வீழ்த்தி பிரமாதி தேவர்களை வாழச் செய்தார். இந்த வாஸ்து சாந்தியைச் சிவாசாரியார் செய்து ஆலயத்தைச் சுற்றிலும் தேவர்கள் வந்திருந்து இறைவன் பிரதிஷ்டையில் கலந்துகொள்ளும்படி செய்வதாக அமைகின்றது.

**3) விக்கிரகப் பிரதிஷ்டை**

உருவத்திருமேனி புதிதாக தாபிக்கப்படு வதாயின் குரு சிற்பியைக் கொண்டு (நயமோன்மீல நம்) கண் திறத்தல் என்ற கிரியை செய்விக்கின்றார். உருவத் திரு மேனியைச் சுற்றி திரையிட்டு சிற்பி குருவின் கையிலிருந்து ஆயுதத்தை பெற்று முதலில் நெற்றிக் கண்ணையும் அடுத்தது சூரிய நேத்திரத்தையும் அதன்பின் சந்திர நேத்திரத்தையும் இறை வனைத் தியானித்துக் கொண்டு ஆயுதத்தால் திறக்கிறார். வாய், மூக்கு, காது, கொப்புள், நகக்கண் முதலிய ஒன்பது இடங்களில் சிறுதுவாரத்தை உண்டுபண்ணுகிறார். பின் குரு மிம்பசுத்தி முடித்து பால், நெய், தேன், நெற், கண்ணாடி, யானை, அந்தணர், கன்னிப்பெண், தீபம், பசு, எஜமான், பங்காத்திரிகம் இவைகளை இறைவனுக்குமுன் வைத்து தரிசிக்கச் செய்கின்றார். அதனால் பசுச்செல்வம், தானிய வளர்ச்சி, இன்பவாழ்வு, வீரியம், மனோபலம், வேதநெறி, கற்பு, அறிவுச்சுடர், சிவதர்மம், ஐந்தொழில் இவை யாவும் நாட்டில் சிறப்பாக விளங்கும் என்பதாகும்.

பின் உருவத் திருமேனியை தண்ணீரில் மார்பு அளவில் வைத்துச் சக்தி வடிவமாக இருந்தால் காது அளவு வரை தண்ணீரில் வைத்து விசேஷ பூசை அபிஷேகம் இவைகளை ஆசாரியார் செய்கின்றார். இதனை ஜலாதிவாசம் என்பர். பின் தண்ணீரிலிருந்து எடுத்து தானியாதிவாசம் என்ற கிரியையை ஆசாரியார் செய்கின்றார். சுத்தமான தானியத்தை எடுத்து புண்ணியாக நீரால் தெளித்து முன்கூறிய அளவில் அத்தானியத்தால் மூடி, எண்மலரால் அர்ச்சித்து ஒரு முகூர்த்தகாலம் அவ்வாறு வைத்திருந்து பின் பிம்பத்தை எடுத்து ஒரு பீடத்தில் வைத்து அடியார்களைக் கொண்டு வீதிவலம் செய்விக்கின்றார். கோபுரவாயிலை அடைந்ததும் ஆசாரியார் (திரிஷ்டி தோஷ நிவர்த்தி) கண்ணூறு நீங்குதல் என்ற கிரியையைச் செய்கின்றார். பின் மாலையில் சயநாரோபணம் என்ற கிரியையும் செய்து முடிக் கின்றார். சுத்தமான விரிப்பில் தலையாணை முதலிய உபகரணங்களுடன் உருவத் திருமேனியை படுக்கவைத்து விஷேச பூசை, நியாஷம் முதலியவற்றை செய்கின்றார். இதனால் சயநாரோகணம் என்று கூறுவர். கண் திறத்தல், நீரில் வைத்தல், நெற்குவியலில் வைத்தல், வீதிவலம், படுக்கையில் விடுதலை இவ்வைந்து காரியங் களையும் ஆசாரியார் செய்துமுடிக்கின்றார்.

விவேக பூதாதி சராசராணி என்பது வேத மந்திரம். சரப்பொருள் அசரப்பொருள் எல்லாவற்றிலும் இறைவன் மறைந்து நிற்கின்றார் என்பது கருத்து. அந்த இறைவன் ஒளியாகவும், உணவாகவும், நீராகவும், காற்றாகவும் இருந்து உயிர்களை காத்துவருகின்றார் என்று போற்றப் படுகின்றார். அருவமாக பஞ்சபூதங்களைப் பரவி நிற்கும் இறைவனை உருவத் திருமேனியில் வந்து இணைந்து அருள்புரியுமாறு இவ் ஐந்து கிரியைகள் செய்யப்படுகின்றன. கண் திறத்தல் என்பதால் ஒளியிலிருந்து நீரில் வைத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதால் ஜலத்திலுருந்தும் நெற்குவியலில் வைத்தலால் நிலத்திலிருந்தும் வீதிவலம் வருவதால் ஆகாயத்திலிருந்தும் படுக்கையில் கிடத்தலால் காற்றிலிருந்தும் இறைவனுடைய சக்தி உருவத்தில் இணைந்துகொள்ளுகின்றது. ஆகவே புதிய உருவத் திருமேனிக்கு இவ் ஐந்து கிரியைகளையும் ஆசாரியார் செய்து முடிக் கின்றார். பின் சுபவேளையில் யந்திரஸ்தாபனம் செய்து பீடத்தில் உருவத் திருமேனியை ஸ்தாபித்து அஷ்டபந்தனம் என்ற கிரியையை நிகழ்த்துகின்றார். எட்டுப் பொருள் சேர்த்து இடித்து குழைவாக்கி அதனால் பீடத்திற்கும் உருவத் திருமேனிக்கும் இணைப்பை உண்டு பண்ணுகின்றார். எந்த ஆலயத்தில் பீடபந்தம் இல்லாது மூர்த்தி காணப்படுகின்றதோ? அங்கு செய்யப்படும் பூசை முதலிய யாவும் பயனற்றனவாகும் என்று ஆகம நூல் கூறுகின்றது.

திருக்கோயிலில் கடவுள் மங்களம் (பிரதிஷ்டை) செய்யப்பெறும். கல்லாளான தெய்வப் படிமங்கள் (விக்கிரகம்) ஆடாமல் நிலைபெற இருப்பிடம் (பீடம்) படிமத்தின் அடிப்பகுதி இரண்டையும் பொருத்தி படியச் செய்யும். ஒரு கூட்டுக் கட்டுப்பொருளாக அஷ்டபந்தனம் அமைகின்றது. கொம்பராக்கு, சுக்கான் தூள், குங்கிலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம். தேன்மெழுகு, எருமை வெண்ணெய் ஆகிய எட்டுப் பொருட்களால் தயாரிக்கப்பட்டு ஆசனக் கல்லையும், படிமத்தையும் இணைத்துப் பிணைப்பதால் அஷ்டபந்தனம் எனப் பெயர் பெறுகின்றது. அஷ்டபந்தனம் இலகுவாக்கு வதற்கும் செய் விருத்திக்காகவும் தைலாப் பியாங்கம் (எண்ணெய்க்காப்பு) இடம்பெறுகின்றது.

அடுத்தது பிம்பசுத்தி என்ற கிரியை நிகழும். தர்ப்பை, அடிமண், புற்றுமண், நாவலடிமண், ஆலடிமண், வில்வமரத்தடிமண், துளசியடி மண் இவைகளை ஒரு மண் கலசத்தில் இட்டு நீர் நிறைத்து அதுபோல அரசு, ஆல், அத்தி, வில்வம், நாவல், மா இவைகளின் துளிரை ஒரு கலசத்திலும் பட்டைகளை ஒரு கலசத்திலும் வைத்து நீர் நிறைத்து ஆத்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவதத்துவம் என்ற தத்துவ திரயத்தைப் பூசித்து அக்கலச நீரால் பிம்பத்தை அபிஷேகம் செய்தால் பிம்பசுத்தி ஆகும். பிம்பசுத்தி முறையாக செய்யப்படாவிடில் தெய்வ சாநித்தியம் உண்டாகாது.

**4. மிருத்சங்கிரகணம்**

பாலிகை தெளிப்பதற்காக புண்ணிய பூமிக்குச் சென்று மண்ணெடுத்து வருதல் என்பதையும் பின் அங்குரார்ப்பணம் பாலிகை தெளித்தல் என்பதையும் இவ்விரண்டு கிரியைகளை குரு செய்கின்றார். இவ்விரண்டும் படைப்பு என்ற தத்துவத்தைக் குறிக்கின்றது. ஆகவேதான் பூமாதேவியைப் பூசித்து வழிபட்டு பிரார்த்தனை முடித்து பூமிதேவியின் வயிற்றில் இருந்து மண் எடுக்கப்படுகின்றது. படைப்பிற்குரிய இடம் வயிறாகும். அதுபோலவே பாலிகை தெளித்து அங்குரம் நன்கு வளருவதால் நாட்டில் தானிய வளர்ச்சி உண்டாகி படைப்புக்கள் வளர்ச்சிபெறும். பின் ஆசாரியார் பாலாலயம் சென்று இறைவனுக்கு பிரஸந்நாபிஷேகம் செய்கின்றார். அதன் கருத்து "பாலாலயத்திலிருந்து யாகசாலைக்கு அழைத்து செல்ல கருதியுள்ளோம். இறைவன் எங்கள் அழைப்பை ஏற்று சகல கலாமுத்திகளுடனும் யாகசாலைக்கு எழுந்தருளவேண்டும்" என்று குரு பிரார்த்திக்க இறைவன் மகிழ்வுடன் யாக சாலைக்கு எழுந்தருள ஆயத்தமாகின்றார் என்பதாம் பின் கடஸ்தாபனம் என்ற கிரியை நிகழ்கின்றது.

குடத்தை மாவிலை, தேங்காய், கூர்ச்சம், வஸ்திரம், மாலை இவைகளால் வேதயந்திர பாராயணத்துடன் நன்கு அலங்கரித்து பாலாலயம் சென்று இறைவனுக்கு முன் கலசத்தை வைத்து (கலாகர்சனம்) விம்பத்திலிருந்து கலசத்தில் வந்து சகல கலைகளுடன் அமரும்படி பிரார்த்தித்து பூசித்து யாத்திராஹோமம் முடித்து வேதபாராயணத் துடன் சகல வாத்திய கோஷங்களுடன் வலமாக யாகசாலை சென்று கலசங்களை தானிய பீடத்தில் சிவாசாரியார் ஸ்தாபிக்கிறார். உருவத் திருமேனியில் இருந்த இறைவனை அருவுருவத் திருமேனியாய் அமைத்து கலசத்தில் ஆகாசித்து விஷேக பூசை, ஹோமம், ஜபம் முதலியவற்றை செய்து வழிபட யாகசாலைக்கு அழைத்துச் சென்றதாக கருத்தாகும். அருவுருவத் திருமேனி என்று குறிப்பிட்டது. இறைவனை நிஷ்களமாக ஆகாஷித்து ஷகளமாக பூசிக்கவேண்டும் என்ற ஆகம வாக்கியத்திற்கு பொருத்தமாம். நிஷ்கள ரூபத்தில் சாந்தி அதீத கலை சிரசாகவும், சாந்திகலை முகமாகவும், வித்தியாகலை மார்பாகவும், பிரதிஷ்டாகலை குஹ்யமாகவும், நிவிருத்திகலை முழங்கால் பாதமாகவும், புவநாத்துவக ரோமங்களாகவும், வர்ணத்துவா தோலாகவும், மந்திராத்துவா தத்துவாத்துவா எலும்பு இந்திரியங்களாகவும் நினைக்கப்பட வேண்டுமென்று ஆகம சாஸ்திரம் கூறுகின்றது.

**5.** யாகசாலையில் கும்பம் ஸ்தாபித்த பின் விதிமுறைப்படி குண்டதில் ஆசாரியர் அக்னியை உற்பத்தி செய்கின்றார். மறுநாள் காலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கி, காலை மாலை இரு நேரங்களிலும் பூஜை, ஹோமம் இவைகளைச் செய்து வருகின்றார். பூஜை, ஹோமம், ஜபம், பாராயணம் முதலியவற்றால் திருவருள் நிறைவு உண்டாகின்றது. அக்னியில் செய்யப்படும் ஹோமத்தால் இறைவன் பூரண திருப்தியடை கின்றார். "அக்நிமுகா : தேவா" என்று வேதவாக்கியம் உள்ளது. இறைவன் அக்னியை முகமாக உடையவர் என்ற கருத்து உருவேறத் திருவேறும் என்ற சான்றோர் வாக்கின்படி எவ்வளவு ஹோம எண் கூடுகின்றதோ அவ்வளவு அருள் நிறைவும் உண்டாகின்றது.

(ஸ்பர்சாகுதி) யாகசாலையில் வழிபடும் அருவுருவத் திருருமேனிக்கும் தருணாலயத்தில் வீற்றிருக்கும் உருவத் திருமேனிக்கும் முப்புரி நூலால் அல்லது தர்ப்பை கயிற்றால் தொடர்புபடுத்திச் சிவாக்கினியில் ஆகுதி செய்து சுருக் சுருவத்துடன் முப்புரி நூலைத் தொட்டுக் கொண்டு தருணாலயம் சென்று உருவத் திருமேனியைப் பிரமபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகம் என மூன்றாகப் பிரித்துப் பூசித்துச் சுருக்கசுருவத்தில் எஞ்சியிருக்கும் நெய்யை அந்தந்தப் பாகத்தில் ஹோமம் செய்கின்றார். இவ்வாறு மூன்று முறை நடைபெறுகின்றது. அக்கினிக்குக் குணம். உருவம், பரஞ்சோதியாகிய பேரொளி அருவும். அது உருவத் திருமேனியில் மறைந்து நிற்கின்றது. ஒரு சமயம் மால் அயனுக்கு அந்தப் பரஞ்சோதி உருவமாகக் காட்சியளித்தது. பின் அந்தச்சோதி குளிர்ந்து மலையாக மாறியது என்பதைப் புராணங்கள் மூலம் நாம் அறிவோம். அந்த மலையிலிருந்து எடுத்து உருவாக்கப் பட்டதே உருவத் திருமேனியாகும். உருவமான சிவாக்னியில் ஹோமம் செய்து பின் பரஞ்சோதியான உருவத் திருமேனியில் எஞ்சிய நெய்யை ஹோமம் செய்து யாகசாலையில் நிகழ்த்திய ஹோமத்தின் பலன்கள் யாவும் இந்த உருவத் திருமேனியில் நின்று அருள் புரியட்டும் என்பது கருத்தாகும். இவ்வாறு ஹோமம், ஜபம், பூசை முதலியவற்றால் யாகசாலையில் வேதிகையில் வைக்கப்பட்ட கலச நீர் அருளமுதாய் மாறுகின்றது.

**6) கும்பாபிஷேகம்**

விசேஷ பூர்ணாகுதி முடித்துத் தீபாராதனை செய்து, யாத்திராதானம் முடித்துக் கும்பம் தூக்கி அடியார்கள் புடைசூழ மேள வாத்தியங்களுடன் தருணாலயம் சென்று சுபமுகூர்த்தத்தில் கலசத்தின் அருளமுதை உருவத் திருமேனியில் சிவாசாரியார் அபிஷேகம் செய்கின்றார். தொடக்கம் முதல் பல கிரியைகள் நிகழ்ந்துள்ளன. இன்னும் இரண்டு கிரியைகள் நிகழ்ந்துள்ளன. அவ்வாறு இருந்தும் பிரதிஷ்டை என்று பெயரிட்டு அழையாமல் மகா கும்பாபிஷேகம் என்று பிரசித்தமாக வழங்கு வதன் காரணம் யாது?

படிகநிறம் வாய்ந்த சிவலிங்கம் பாதாளத் திலிருந்து வானளாவிப் புவனம் முழுவதும் வியாகித்து நிற்கின்றது. கூடிக்குறையாத பூரண சந்திரன் சிவலிங்கத்தின் சிரசில் விளங்கு கின்றது. அதிலிருந்து அமுதநீர் பெருகிக் கொண்டு இருக்கின்றது. அக்காட்சியை உள்ளத்தால் சிவாசாரியார் தியானித்துக் கொண்ட நமச்சிவாய என்ற ஐந்தெழுத்தை நடுமணியாகக் கொண்டு விளங்கும். ஸ்ரீகருத் தாரத்தைச் செபித்துக்கொண்டு அபிஷேகம் செய்வதாக அமைந்திருந்தபடியால் மஹா கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்ற விதிமுறையைப் பின்பற்றி, இயற்கையாகவே இறைவன் முடியிலிருந்து இடைவிடாது அருளமுதம் பொழியப் பூசை, ஹோமங்களால் அருளமுதமாக மாறிய கலசநீரை அத்துடன் சேர்த்து அபிஷேகம் என்ற பெயரிட்டு அழைக்கப்படலாயிற்று. மகா - போற்றத்தக்க, கும்பா அபிஷேகம் - கலச நீரால் அபிஷேகம் செய்தல் என்ற கருத்தாகும்.

**7. மகாபிஷேகம்**

கும்பாபிஷேகம் முடிந்தபின் பால், தயிர், இளநீர் முதலிய விசேஷ திரவியங்களால் இறைவனுக்கு அபிஷேகம் செய்தல் மகாபிஷேகமாகும். அதனால் இறைவன் உள்ளம் மகிழ்வு பெற்று பரிபூரண அருளைச் செய்கின்றார். இறைவன் அக்னியை முகமாக உடையவர் என்று முன் கூறப்பட்டது. அந்த அக்னிக்கு ஏழு நாக்குகள் உள்ளன. அந்தச் சிவாக்கினியில் பால். தயிர், பழவகை முதலியவை விசேஷமாக ஹோமம் செய்யப் பட்டுள்ளன. அதனால் இறைவன் கலசத்தில் அருள் பாலிப்பவராய் விளங்குகின்றார். பின் கும்பாபிஷேகம் முடிந்தது.

உருவத் திருமேனியில் மறைந்திருப்பது பரஞ்சோதி. அந்த அக்னிக்கு ஆயிரம் நாக்குகள் உள்ளன. ஆகவே ஏராளமாகப் பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம் முதலியவற்றால் அபிஷேகம் செய்து ஆசாரியார் திருவருள் நிறைவை உண்டுபண்ணுகிறார். இறைவன் தக்ஷிணாமூர்த்தியாயிருந்து ஸ்நகாதி முனிவர் களுக்கு ஞானத்தை உபதேசிக்கின்றார் என்று சாஸ்திரம் கூறுகின்றது முனிவர்களுக்கு குருவாக வந்த இறைவனும் முனிவராக விளங்குகின்றார். முனிவர்களுக்குரிய முக்கிய விரதம் (திரிஷவணம்) மூன்று நேரம் நீட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவேதான் (அபிஷேகப்ரிய : சிவ) அபிஷேத்தில் விருப்பமுடைவர் சிவன் என்று சான்றோர் போற்றியிருக்கின்றார்.

**8) மண்டலாபிஷேகம்**

நாற்பத்தைந்து நாட்கள் தொடர்ந்து அபிஷேகம் பூசை நடைபெறுகின்றன. பொருள் வசதி குறைந்தவர் வேறு வசதிக் குறைவுகளாலும் இருபது நாட்கள். பத்து நாட்கள் தொடர்ந்து அபிஷேகம் செய்து முடிப்பார்கள். கும்பாபிஷேகம் மஹாபிஷேகம், மண்டலாபிஷேகம் - மூன்று கிரியைகளிலும் அபிஷேகத்தில் விருப்பமுடையவர் சிவன் என்ற நியாயத்தை அனுசரித்து அமைந்தது மகாபிஷேகம், மண்டலாபிஷேகம். இவ்விரு கிரியைகளும் இறைவன் (சாந்நியத்தியத்தை) திருவருள் நிறைவை உண்டுபண்ணுபவனாய் அமைந்தவை.

**9. சங்காபிஷேகம்**

மண்டலாபிஷேகப் பூர்த்தி அன்று சங்கினால் செய்யப்படும் அபிஷேகம் சங்காபிஷேகம் எனப்படும். சங்காபிஷேகத்திற்கு செப்பினால் செய்யப்பட்ட குடத்தை பயன்படுத்தி செய்யும் அபிடேகம் 1000 மடங்கு பயன் கொடுக்கும். அதனிலும் வெள்ளிக் குடத்தில் வைத்துச் செய்தால் 10,000 மடங்கு பயனும் பொற்குடத்தில் வைத்துச் செய்தால் 200,000 பயனும் கிடைக்குமென்று கூறுவதுடன் இரத்தினம், காண்டாமிருகக் கொம்பு என்பவற்றால் செய்யப்படுகையில் அதைக் காட்டிலும் இரண்டுமடங்கு விஷேடம் அதைக் காட்டிலும் கடலில் தேங்கிய சங்கு கோடி மடங்கு விஷேடம் என ஆகமங்கள் கூறுவதன்மூலம் சங்காபிஷேகத்தின் சிறப்பு வெளிப்படுவதைக் காணலாம். சங்கு ஒன்றின் தேவதைகளாக அதிதேவதைகள் சூரிய, சந்திரர்களும் மத்தியில் வருணனும், நுனியில் கங்கா சரஸ்வதியும் அடியில் பிரம்மனும் நடுவில் புண்ணிய நதிகளும் வீற்றிருப்பதாக கூறப்படுகின்றது. சங்காபிஷேகமானது அஷ்டோத்திர சதம் - 108, அஷ்டோத்திர சகஷ்ரம் - 1008 ஆகிய இரு வகையில் இடம்பெறுவதுடன் வலம்புரிச் சங்கைப் பிரதானமாகக் கொண்டு நிகழ்த்தப்படும் சங்காபிஷேகமானது பாவங்களை நீக்கி மோட்சத்தை கொடுப்பதாக அமைகின்றது.

**10) கும்பாபிஷேகப் பயன்**

பிரதிஷ்டா பூசையை விதிமுறை தவறாது செய்தவர்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்கள், செய்யத் தூண்டியவர்கள். தரிசித்தவர்கள் யாவரும் சிவலிங்க பீடங்களிலும் யாகசாலை, அதிலுள்ள வேதிகைகள், குண்டங்கள் இவைகளில் எவ்வளவு பராமானுத் துளிகள் உள்ளனவோ அவ்வளவு காலம் போக போகியங்களை அனுபவிப்பார்கள். தம் தலைமுறை தாய் வம்சத்தின் பத்துத் தலை முறையாக இருபத்தொரு தலைமுறையினரும் சிவயோகத்தில் பெரும்போக போகியங்களை அனுபவித்து முடிவில் ஸ்ரீ சிவபெருமான் திருவடி நிழலை அடைவர். வியாதி நீக்கத்தையும் சூரியனிடமிருந்தும் பொருளைச் சிவாக்னி வளர்த்து ஹோமஞ் செய்வதிலிருந்தும் ஸம்ஷாரபந்த தீர்க்கத்தை விஷ்ணுவிடமிருந்தும் சிவஞானத்தை ஸ்ரீஸதாசிவப் பெருமானிடம் இருந்தும் அடையலாம் என்று நூல்கள் எடுத்தியம்புகின்றன.

தர்மங்களை ஒருவன் புதிதாக செய்வதைக் காட்டிலும் முன்னோர்கள் செய்தவற்றைக் காப்பாற்றுவது இரண்டு பங்கு புண்ணியத்தை தரவல்லது. பழைய ஆலயத்தையும் பிம்பங்களையும் விதிப்படி திருத்தியமைத்து மகாகும்பாபிஷேகம் செய்வித்தால் நான்கு மடங்கு புண்ணியம் கிடைக்கப் பெறுவதுடன் இறை உலகை அடைந்து இறைவன் திருவடி நிழல் வாழ்வைப் பெறலாம்.

சுபம்

✦ ✦ ✦

**திருப்புகழ்**

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகிவரும் சமய விழுமியங்களைப் பேணுவதில் இளைஞர்களின் பங்கு

**செல்வி தர்சினி இராசேந்திரம்**
**தரம் - 13**
**கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி**

சமயம் என்றால் வாழும்முறை அல்லது வாழ்க்கைநெறி எனப்படும். மனித வாழ்வானது உயர்வானதும் அரிதானதும் ஆகும். நாம் அத்தகைய வாழ்வின் அருமையை உணர்ந்து வாழ்வின் பல்வேறு கட்டங்களிலும் சமய ஒழுக்கலாறுகளை கடைப்பிடிக்க வேண்டும். எமது சமயநெறி முறைகள் மனிதனை வாழ்வாங்கு வாழச் செய்கின்றன. இதற்கேற்ப சமய விழுமியங்களைப் பேணுவதில் இளைஞர் களின் பங்கு முக்கியமானது.

சமயமும் வாழ்வும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. சமுதாயம் இன்றி சமயம் நிலைத்து நிற்க முடியாது. அவ்வாறே இன்றி சூழல் தனித்து இயங்க முடியாது. சமயம், இந்து சமயம் எமது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. உணவு. உடை மொழி என்பவற்றினூடாக அவை பயிற்றப் பட்டன மட்டுமல்லாமல் விழாக்கள், வழிபாடு களினூடாக அவை மரபாகப் பேணப்பட்டன.

சமயத்திற்கும், சூழலுக்கும் நிலைக் களனாக விளங்குபவை ஆலயங்களாகும். இவ்வாறு விளங்குகின்ற ஆலயமானது இளைஞர்களை மையமாகக் கொண்டே காணப்படுகின்றது. சமூகத்தில் ஒற்றுமையையும் நல்லொழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் வளர்க்கும் முயற்சிகளை ஆலயங்களின் மூலம் நிலைநிறுத்திக் காட்ட இளைஞர்கள் முன்வர வேண்டும். அவ்வகையில் சமய சமூகத் தொண்டுகளான பூசை, வழிபாடு கூட்டுப் பிராரத்தனை ஆலயத் தொண்டுகளில் ஈடுபடுதல், சிரமதானம், சமூகசேவைகள் சமுதாயத்தை முன்னேற்றும் பணிகள் முதலான தன்னலமற்ற சேவைகளில் பங்கேற்றல், தல யாத்திரை செய்தல் போன்றவற்றில் இளைஞர் கள் தம்மை ஈடுபடுத்த வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் ஆலயங்களில் சமய விழுமியங்களை வளர்க்க முடிகிறது.

நாம் இன்று சமய விழுமியங்களைக் கடைப்பிடிப்பதென்பது அருகிச் சென்று கொண்டிருக்கிறது. இதில் இளைஞர்களும் கவனம் செலுத்துவதில்லை. நாம் இறை வனுக்குச் செய்யும் தொண்டுகள் பொதுச் சேவைகளனைத்தும் ஆண்டவனுக்குச் செய்கின்ற வழிபாடாகும். "மக்கள் சேவையே முகேசன் சேவை" என்ற கூற்று இதனையே வலியுறுத்தி நிற்கின்றது. இதனை மனதார ஏற்றுக்கொண்டு செயற்படும், பக்குவத்தை எமது மதத்தின் ஆணிவேராக்கி சமயத்துடன் சமூகத்தையும் கட்டியெழுப்ப வேண்டியது இளைஞர்களாகிய எமது தலையாய பொறுப் பாகும். சமய நிறுவன்ங்களையும் சமயம் சார்ந்த செயற்பாடுகளையும் ஊக்குவிக்க வேண்டும். நால்வர் காட்டிய வழியில் நாமும் எமது சமயத்தையும் சமுதாயத்தையும் வளர்க்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதனையே நாயன்மார் களுள் அப்பர் சுவாமிகளும் மேற்கொண்டனர். அவர் உழவாரப்படையை ஏந்தி, ஆலயத்தில் உள்ள புல்லையும் பூண்டையும் களைந் தெடுத்து சூழலில் தூய்மையினை ஏற்படுத் தினார். அதனையே தெய்வத் தொண்டாகச் செய்தார். அப்பணியின் மூலம் தம்மிடமிருந்த அகங்காரத்தை தாமே துடைத்துத் தள்ளினார்.

நாவுக்கரசரைப் போன்றே ஸ்ரீ இராம கிருஷ்ணரும் சமுதாயத்தில் தூய்மையினை ஏற்படுத்தியவர். அவர் நள்ளிரவில் சேரிப் பகுதிக்குச் சென்று தம்முடியினால் துப்பரவு செய்தார்.

கூட்டுப்பிரார்த்தனையை ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் நடத்துவது அவசியமானது. இதன்மூலம் சிறுவர்கள், இளைஞர்கள், பெரியோர்கள் அனைவரும் ஈடுபட வாய்ப்பு ஏற்படும்.

அறம் அல்லது ஒழுக்கம் தான் வாழ்க்கையின் பூரணத்துவம் என அறிஞர் கூறுவர். சைவசமயம் இறைவனின் மேலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்களோடு இறைவனின் மேலான குணங்களோடு இறைவன்மீது பக்தி கொள்ளு வதையும் வலியுறுத்துகின்றது. சமய வாழ்வில் பக்தி என்பது ஒரு நெறி. அது தன்னை அறிவதுடன் இறைவனையும் உணர வழிகாட்டுகிறது. இதனை இளைஞர்கள் அனைவருக்கும் எடுத்தியம்ப வேண்டும். "ஒழுக்கம் இல்லான் கண் உயர்வு இல்லை" என்றும் "பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடுவாழ்வார்" என்றும் பொய்யாமொழிப் புலவன் கூற்றுக்கள் எடுத்தியம்புவதனைக் காணலாம். சமய வாழ்விலும் இதுவே அச்சாணியாக அமைகிறது. உயிரை இழந்தவன் சடமாகிறான். இவ்வாறு சமயத்தில் ஒழுக்கமே சிறந்தது என வள்ளுவப் பெருந்தகை கூறுவது சிறப்பிற் குரியதாகும்.

சைவசமயியாகிய ஒருவனிடத்தில் தியாக மனப்பாங்கு, ஏழைகளுக்கு இரங்குதல் பிறரில் நிறை காணுதல், பிறரை நேசித்தல் பிறரின் கஷ்டங்களுக்காக பிரார்த்தித்தல் முதலான நற்பண்புகள் காணப்படும். இத்தகைய பண்புநலம் உடையவர்களிடத்தில்தான் அன்பு, இனிமை, சாந்தம், அமைதி ஆகிய மனிதநேய இயல்புகளும் நிறைந்திருக்கும். இளைஞர்களாகிய நாங்கள் சுயநலத்தை குறைத்து, பொதுநலத்தை வளர்த்தல் வேண்டும். இதனையே

**"அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டால்**
**இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"**

என்று தாயுமானவர் பாடுகிறார்.

இதே போல பிறர்க்கு இரங்குவதும் உதவுவதுமான மனித நேயப் பண்பினைக் கந்தபுராணம் சிறப்பிக்கிறது.

**"ஏவர் எனினும் இடருற்றனராகி**
**ஓவில் குறையொன்று உளரேல் அது முடித்தற்கு**
**ஆவி விடினும் அறனே"**

திருவள்ளுவர் திருக்குறளில் பிறரின் துயரைத் தன் துயராகக் காண்கின்ற நற் பண்பினை,

**"அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்**
**தம் நோய் போல் போற்றாக் கடை"**

எனவும் குறிப்பிடுகிறார்.

பிரதேச ரீதியாக சமய அமைப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் சமயத்தையும் சூழலையும் வளர்ச்சியடையத் செய்ய முடியும். இந்து இளைஞர் மன்றம் போன்றவற்றை ஆரம்பித்து அதன்மூலம் இன்ப துன்பங்களில் ஈடுபடுவதுடன் பொதுவிழாக்கள் சமய விழாக்கள் என்பவற்றையும் முன்னின்று நடாத்துவதன்மூலம் அருகிச் செல்கின்ற சமயத்தினை கட்டியெழுப்ப முடியும்.

இன்றைய இளைஞர்கள் அனைவரும் கௌரவம் எனக் கருதி சமயத்தை கைவிட்டு விடாது ஒவ்வொரு உயிரிலும் இறைவனைக் காண்போம். நல்லன செய்திடுவோம் அதனை நன்றே இன்றே செய்திடுவோம்.

நாம் அனைவரும் கடவுளுடைய குழந்தைகள். எமக்குள்ளே பேதமின்றி அன்புடனும், பண்புடனும், இரக்கத்துடனும், ஈகையுடனும் நட்புறவை வளர்ப்போம். நல்லொழுக்கம் மனிதனை மனிதநேயம் உள்ளவனாக மாற்றும். ஏழை எளியவர்க்கு இரங்கும் மனப்பாங்கும் பிறரில் நிறை காணுதல் பிறரை நேசித்தல் போன்ற பண்புகளை வளர்த்து பிறரின் கஷ்டங்களுக்காக பிரார்த்தனை செய்து வாழ்வில் முத்தி இன்பம் அடைவோம்.

"இன்பமே சூழ்க ; எல்லோரும் வாழ்க"

**கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற கட்டுரை.**

✦ ✦ ✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயமும் தமிழர் வாழ்வும்

செல்வி குணசாந்தினி அருமைநாதன்
தரம் - 13
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

தமிழர் அறிவுத் திறம்பெற்று வாழத் தொடங்கிய காலத்தில் இருந்தே சைவம் என்ற கோட்பாடு உடன் வளர்ந்துள்ளது. பழங்கால மக்களிடையே சமய உணர்வு குறைவாகக் காணப்பட்டாலும் ஏதோ ஒரு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் வாழ்வு நடத்தி வந்தனர். பழங்கால திராவிடர்களாகிய தமிழர்கள் வாழ்க்கையோடு சமயத்தையும் சமயத்தோடு வாழ்க்கையையும் பிரிக்க முடியாதவாறு அத்திவாரம் அமைத்துவிட்டு சென்றமையால் அந்த அத்திவாரத்திலே இருந்து இன்றுவரை சைவசமயம் வளர்ச்சி கண்டு வருகின்றது. தென்னிந்தியா அல்லது ஈழத்தினுடைய கால கட்டங்களையோ எடுத்துக் கொண்டால் அங்கே சைவமும் தமிழர் வாழ்வும் பின்னிப் பிணைந்து உள்ளதை காண முடிகின்றது. அந்த வகையிலே தமிழர்கள் தம் வாழ்விலே சைவ சமயத்தையும் அதன் பண்பாட்டு பாரம்பரியங் களையும் எவ்வாறெல்லாம் பின்பற்றி வாழ்ந்தார் கள் என்பதையும் அவர்களுடைய சைவ வாழ்க்கையும் பற்றி அறிந்து கொள்வோம்.

சிந்துவெளி திராவிடர்களுடைய வாழ்வில் சைவசமய வழிபாட்டு எச்சங்கள் காணப்பட்டன. சிந்துவெளி மக்கள் தங்கள் வாழ்விலே உண்மைவழி நிற்றல், விருந்தினரைப் பேணுதல் கட்டுப்பாடும் ஒழுக்கமும் சமூகத் தொண்டும் குடும்பப் பற்றும் நிறைந்த எளிமையான வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். அதற்கு பல ஆதாரங்கள் தொல்பொருள் ஆய்வாளர்களினால் முன்வைக்கப்படுகின்றன. அத்துடன் சிவ லிங்கத்தை பரம்பொருளாக வழிபட்டிருந்தமை யால் அவர்கள் சைவத்தையே பின்பற்றியிருந் தமை அவதானிக்க முடிகின்றது. வாழ்வில் உயர்வையே சிந்தித்தனர். கல்வியை போற்றுதல், மாதா, பிதா, குரு, மூத்தோர் என்போரை வழிபடல் பிதிர்க்கடன் செய்தல் சமயக் கிரியைகளை தவறாது ஆற்றியுள்ளனர். அத்துடன் சைவசமயத்துடன் தொடர்பான கலைகளை வளர்த்துள்ளனர். இதன்மூலம் சைவம் ஆரம்பித்துவிட்ட சிந்துநதியிலே தமிழர் வாழ்க்கையும் அதனுடன் இணைந்துவிட்டது.

அடுத்துவந்த வேத காலத்திலேயும் சைவசமயம் முக்கியம்பெற்று விளங்கியிருந் தாலும் அங்கே வாழ்ந்தவர்கள் ஆரியர்கள் ஆவார்கள், தொடர்ந்து தென்னிந்திய வரலாற்று காலங்களிலே வாழ்ந்த தமிழர்களின் வாழ்வை பற்றி நோக்கும்போது அங்கேயும் வாழ்ந்த தமிழர்கள் தம் வாழ்விலே சைவ சமயத்தைப் போற்றி வளர்த்துள்ளதை இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

அந்த வகையிலே சங்க காலத்திலே மூவேந்தர்களின் ஆட்சி சிறப்பினால் தமிழர் வாழ்வு செழிப்புற்று விளங்கியது. நிலங்களை ஐவகையாக பாகுபடுத்தி காதலையும் வீரத்தையும் வளர்த்தைப் போல ஐவகை நிலங்களிலும் தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டுள்ளனர். சிவனை பெருந் தெய்வமாக வழிபட்டுள்ளனர்.. மண், மரம் போன்றவற்றாலான கோயில்களை அமைத்து உள்ளனர். தெய்வங்களை அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்களைப் படைத்துள்ளனர். எனவே சங்கத் தமிழர் வாழ்கையாலும் சைவசமயமே முக்கியம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

தொடர்ந்து வந்த சங்கமருவிய காலத் திலும் அவைதீக மதங்களின் தலையீடுகள் பிரச்சாரங்கள் இருந்தாலும் வைதீக சமயங் களில் ஒன்றாக சைவசமயத்தைப் போற்றினர். அதனை அடிப்படையாகக் கொண்டு பிற் காலத்தில் இலக்கியங்களும் தோன்றின. பக்தி என்ற உணர்வை சைவ சமயத்திலே பதிக முறையிலே பாடி வாழ்க்கை அனுபவங்களை எல்லாம் இலக்கியங்களில் வெளிப்படுத்திய காலமாக சங்கமருவிய காலம் விளங்கியது. ஆரம்பத்திலே சமய வாழ்வு நலிவடைந்திருந் தாலும் பிற்காலத்தில் அது அம்மையாரால் ஏற்றி வைக்கப்பட்டதை காணமுடிகின்றது. தமிழர்கள் தம் வாழ்விலே சைவத்தின் மூலம் தமிழையும் வளர்த்துள்ளதை காணமுடிகின்றது. இதன் மூலம் தமிழர்கள் அந்நியர் ஆட்சிக் காலத்திலும் சைவ வாழ்வு மேற்கொண்டுள்ளதை காண முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திநெறி காலம் எனப்படுகின்ற பல்லவர் காலத்திலேயும் தமிழர்கள் தம் வாழ்விலே கலை கலாச்சாரங்களை பின்பற்றி யுள்ளதை காணலாம். பல்லவ மன்னார்கள் ஆட்சி செய்திருந்தாலும் அவர்கள் தெய்வாம்சம் பொருந்தியவர்களாகவே விளங்கினர். இதனால் தமிழர்கள் தங்களுடைய சமயத்தை பேணுவதில் பெரும் பங்களிப்பு செய்தனர். இக்காலத்திலே நாயன்மார்கள் தோன்றி மக்கள் மத்தியிலே சைவசமய வாழ்க்கைக்கு வழிகாட்டினர். அவர்கள் இல்லறத்தின் ஊடாக இறைவனை அடையலாம் எனக்கூறி தமிழர் வாழ்வை வளப்படுத்தியுள்ளனர். பக்தி இயக்கம் தோன்றி மதமாற்றத்தை தடுத்து சைவத்தை நிலைநாட்டினர். இதனால் அக்காலத் தமிழர் வாழ்வை கூறும் இலக்கியங்கள் பக்திப் பரவசம் உடையனவாய் விளங்கின. அதிலும் சைவ பக்தியே சிறந்திருந்தது.

பக்தி நிறைவுக் காலம் எனப்பட்ட சோழர் காலத்தை ஆண்ட மன்னர்கள் அனைவரும் தமிழ் மன்னர்கள். அவர்கள் ஆட்சியினால் மக்கள் மகிழ்ச்சிகரமான வாழ்வை நடாத்தினார். கலைகளைப் பேணுவதிலும், கோயில்களை அமைப்பதிலும் அதீத அக்கறை காட்டியுள்ளனர். தேவாரத் திருமுறைகளை ஓதி வாழ்விலே பெரும் பயன்களை அடைந்தனர். இசை, நடனம் போன்றவை தினமும் ஆலயங் களில் இடம்பெற்றன. பதிகங்களிலே நாயன்மார்கள் தமது வாழ்வியல் அனுபவங் களைப் பாடியுள்ளனர். அத்தோடு மக்கள் வறுமையையும் போக்கியுள்ளனர். எனவே தமிழர் வாழ்க்கையும் சைவசமயமும் மிகவும் நெருங்கிய தொடர்பைக் கொண்டு காணப்படு கிறது. இக்காலத்தில் தமிழ் புராணங்கள் பலவும் எழுந்தன. இவையும் அக்கால தமிழர் வாழ்விலே பண்புகளை எடுத்துக் கூறுகின்றன. சோழர்கள் தென்னிந்தியாவில் மட்டுமன்றி அவர்கள் பரந்த ஆட்சியை மேற்கொண்டதனால் ஈழத்திலும் வாழ்ந்த தமிழர்களிடையேயும் சைவசமயத்தை விளக்கியதுடன் கலைக் கோயில்களை அமைத்தனர். இதனால் ஈழத் தமிழர் வாழ்விலே சைவ பக்தி வளர்ச்சிகாணத் தொடங்கியது.

சோழர் பேரரசு வீழ்ச்சியடைய தமிழகத்திலே அடுத்து நாயக்கர் காலம் தோற்றம் பெற்றது. இக்காலத்திலே நாயக்கர் வம்சத்தினர் ஆட்சிசெய்த போது இஸ்லாமியரின் படையெடுப்பு இடம்பெற்றது. இதனால் தமிழர் வாழ்வும் சைவப் பற்றும் முற்றாகச் சிதைந்து விடவில்லை. இக்காலத்திலே தோற்றம் பெற்ற பெருமளவான கோபுரங்களும், மடங்களும், ஆதீனங்களும் சான்றுபகர்கின்றன. நாயக்க மன்னர்களும் அக்கால புலவர்களும் சைவத்தை வளர்ப்பதிலே ஆர்வம் உடையவர்களாக விளங்கினர். சீர்திருத்த இயக்கங்கள் பலவும் தோற்றம் பெற்றன.

ஈழத்திலே சோழர்களின் ஆட்சியுடன் மேலோங்கிய சைவம் காலம்காலமாக பல இடர்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு வாழ்விலே பெரும் மாற்றங்களை உண்டுபண்ணியது. தமிழர்கள் சமய பண்பாட்டினை முறையாகப் பின்பற்றுபவர்கள். அவர்கள் தமது வாழ்விலே அனைத்து கால கட்டங்களையும் சமயசாரப்படி மேற்கொள் பவர்கள். இத்தகைய சைவத்தை தமிழ் மக்களிடையே வளர்ப்பதற்கு பல பெரியார்கள் தோன்றி நல்லுபதேசம் செய்துள்ளனர். வாழ்விலே கடைப்பிடித்து வாழுமாறு வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையிலே ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தினால் பிற சமயங்கள் பரப்பப்பட்டு தமிழ் மக்களை கட்டாய மதமாற்றம் செய்த போதுகூட ஒருசிலர் மட்டுமே மதம் மாறினார்கள். ஆனால் அவர்கள் முற்றுமுழுதாக மதம் மாறிக் கொள்ளவில்லை. அந்த அளவிற்கு தமிழர் வாழ்விலே சைவசமயம் வேரூன்றி இருந்ததைக் காணலாம். இலங்கைக்கு முதலில் வந்த அந்நியர்களான போர்த்துக்கேயர் தமது மதத்தைப் பரப்புவதற்காக இந்துக் கோயில் களை இடித்தழிக்க முற்பட்டபோது தமிழ் மக்கள் அங்குள்ள விக்கிரகங்களை எடுத்துச் சென்று மண்ணிலே புதைத்து மறைத்து வைத்தனர். அத்துடன் சமய அநுட்டானங்களை கூட செய்ய முடியாததுடன் சிவ சின்னங்களைத் தரிக்கமுடியாத நிலை காணப்பட்டது. இதனால் அக்காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெரியார்கள் தம்மைப் பாதுகாக்கும் பொருட்டு இந்தியாவிற்கு தப்பிச் சென்றனர். இதன்மூலம் தமிழர்கள் வாழ்விலே சைவசமயம் அழியாத செல் வாக்கைப் பெற்று விளங்குகின்றது.

அத்துடன் தமிழர்களுடைய வாழ்க்கை முறையிலேயும் சில சைவசமயப் பழக்கங்கள், கிரியைகள் என்பன சிறப்பிடம் பெற்றன. அந்த வகையிலே அவர்களுக்கென தனித்துவமான பண்டிகைகளும், விழாக்களும் உண்டு. அதனை அவர்கள் செய்யவும் கடைப்பிடிக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுவதில்லை. அவை பல சமய தத்துவங் களையும் விளக்குகின்றன. அதாவது தமது வாழ்வாற் அடிப்படையான உணவுற்பத்திக்கு உதவிய சூரியனுக்கு நன்றிசெலுத்தும் முகமாக பொங்கல் பண்டிகை செய்கின்றனர். இவ்வாறாக சில பண்டிகைகளைக் காரணம் கருதியும், கருதாமலும் தமது வாழ்விலே கடைப்பிடிக் கின்றனர். இத்தகைய பண்டிகைகள் விரதங்கள் போன்றவை சிறந்த பண்புகளை மேலோங்கச் செய்து தமிழர் வாழ்வில் புனிதத் தன்மைக்கு இட்டுச் செல்கின்றனர்.

அடுத்து ஒரு குழந்தை கர்ப்பமாக இருக்கும் பொழுதே சைவ மரபுகள் தொடங்கி பின்னர் இவ்வுலகிலே பிறந்து வளர்ந்து கல்வி கற்கத் தொடங்கி பின்பு திருமணம் போன்ற பல்வேறு சமயச் சடங்குகளை எல்லாம் முறைப்படி மேற்கொண்டு இறந்தபின்னர்கூட பிதிர்ச்சடங்கு என இறுதியான சமயச் சடங்குடன் வாழ்க்கை முடிந்து கொள்கிறது. இவ்வாறாக ஒரு தமிழனின் வாழ்வை தொடக்கி வைப்பதும் முடித்து வைப்பதும் சைவ சமயமே ஆகும். தமிழர்கள் எத்தகைய துன்பம் ஏற்பட்டாலும் தாம் எங்கெல்லாம் சென்று வாழ்ந்தாலும் தமது பாரம்பரியங்களையோ பண்பாடுகளையோ பின்பற்றாமல் விடுவதில்லை. என்றாலும் அவர்கள் மேலைத்தேய நாகரிகங் களுக்கு உட்பட்டு சைவத்தை கைவிடக்கூடாது என்பதற்காக காலந்தோறும் பல சமயப் பெரியார்கள் தோன்றி சைவத்தை வாழ்விலே பின்பற்ற வைத்துள்ளனர். அந்த வகையிலே இராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்றோரை குறிப்பிடலாம். இவர்கள் தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளுக்குச் சென்று பிரசங்கங்களையும், மகாநாடுகளையும் நிகழ்த்தியுள்ளனர். அத்துடன் தமிழர்கள் தாம் வாழ்கின்ற நாடுகளிலே ஆலயங்களை அமைத்து சமயத்திற்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளதை காணமுடி கின்றது. அதாவது தாம் வாழும் நாடெங்கும் தம் வாழ்க்கையோடு சைவத்தையும் பின்பற்றுவதை காணக்கூடியதாக உள்ளது.

தமிழர்கள் அண்மைக் காலங்களாக ஈழத்திலே பல துன்பங்களை அனுபவித்தனர். யுத்தம் காரணமாக பல இடப்பெயர்வுகளைச் சந்தித்தும், உறவுகளை இழந்தும், உடமை களை இழந்தும் அங்கவீனர்களாகி தவியாய்த் தவித்தனர். அச்சந்தர்ப்பத்திலும் தமிழர்கள் யாவருமே சைவத்தை தம் வாழ்விலிருந்து வேறுபடுத்தி வாழ்ந்து விடவில்லை. அவர்கள் மீண்டும் சொந்த இடங்களிலே குடியமர்ந்தவுடன் ஆலயங்களை திருப்பி அமைத்தனர். மீண்டும் வழிபாடுகளை மேற்கொண்டனர். பண்டிகை, விரதங்களை மேற்கொண்டனர். இவ்வாறாக அவர்கள் வாழ்விலிருந்து பிரிக்கமுடியாதவாறு சைவ சமயமானது தமிழர்களிடையே செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது.


எனவே சைவமும் தமிழர் வாழ்க்கையும் பின்னிப் பிணைந்து அறாத்தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு வருகின்றது. சமயம் வேறு வாழ்க்கைவேறு என்றில்லாமல் சமயத்தோடு வாழ்க்கையும் வாழ்க்கையோடு சமயமும் இணைந்து உலகெங்கும் உள்ள தமிழர் வாழ்விலே சைவமானது கிளை பரப்பி நிற்கின்றது. இத்தகைய பாரம்பரியங்களை எல்லாம் தமிழர்கள் வாழும் காலம்வரை பின்பற்ற வேண்டும். அவற்றை இளைய சந்ததியிடம் மாசுபடாது கையளிப்பதும் எம் அனைவரினதும் கடமையாகும்.

கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு
கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடாத்தப்பட்ட
கட்டுரைப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற கட்டுரை.


✦✦✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய உதவிப் பூசகர் பிரம்மஸ்ரீ ஜெ.ஜெகதீபன சர்மாவினது
குருமார்களின் கௌரவிப்பு நிகழ்வு



ஆலய பரிபாலன சபைச் செயலாளர் திரு.செ.செல்வரத்தினம்
அவர்களது நன்றியுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் முருக வழிபாடு

**செல்வி வி. அனுஷா**
A/L 2012 கலைப்பிரிவு
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி

அறுவகைச் சமயங்களுள் இடம்பெறும் கௌமார முருகக் கடவுளை முழுமுதற் கடவுளாக கொள்வதாகும். இச் சமயத்தில் முருகனை வழிபடுவோர் கௌமாரர் எனப் படுவார். முருக வழிபாட்டு முறைகளை ஈழத்தில் நோக்குவோமாயின் 1965ஆம் ஆண்டிலே புத்தளம் மாவட்டத்திலே நிகழ்ந்த புதைபொருள் ஆராய்ச்சியின் பயனாய் திருநெல்வேலி ஆதிச்ச நல்லூர் ஆகிய இடங்களிலே கிடைத்த ஈழத் தாழிகள் சேவைச்சிலை முதலியனவும் அங்கு கண்டெடுக்கப்பட்டன. எனவே பெரும் பண்பாட்டுப் பிரதேசமாய் இலங்கையென்பதும், இங்கு அக்காலத்திலேயே முருக வழிபாடு நிலவியது என்பதும் மறக்க முடியாத உண்மை களாயின. இவை இன்றியும் இத்தகைய சின்னங்கள் பொம்பரிப்பு, வளவகங்கைப் பள்ளத்தாக்கு, மாதோட்டம் ஆகிய இடங் களிலும் காணப்பட்டமையைக் கொண்டு முருக வழிபாடு இலங்கை முழுவதும் மிகத் தொன்மைக் காலத்திலே நிலவியது என்பது தெளிவாகத் தெரியவருகின்றது.

முருக வழிபாடு ஈழத்தின் பழைய காலத்திலே அதாவது தென்னிந்தியாவில் நாயக்கர் ஆட்சிக் காலத்திலேயே (16ஆம் நூற்றாண்டு) நடைபெற்றமைக்கு பழமை வாய்ந்த முருகன் கோயில்கள் சான்றுகளாக உள்ளன. அதாவது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், நல்லூர் கந்தசுவாமி கோவில், அசுவகிரி குடிரமலை, சித்திர வேலாயுதர் சுவாமி (வெருகல்), கதிர்காமம், திருக்கோயில் கந்தசுவாமி கோயில், மண்டூர் முருகன் ஆலயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் முதற் சிங்கள மன்னன் விஜயன். இவன் மனைவியான குவேனி என்ற இயக்கி இவனைக் கொலைசெய்ய முற்பட்ட பொழுது கதிர்காமத்துறை தெய்வமான கந்தகுமாரன் விஜனைக் காப்பாற்றி அருளினான் என்றசெய்தி "இராஜவலிய" என்ற இலங்கை வரலாற்று இலக்கிய நூலிலே காணப்படு கின்றது. துட்டகாமினி, தன் பகைவனும் தமிழ் மன்னனுமான எல்லாளனை வென்றால் நிறைவேற்றுவதாகக் குறித்த நேர்த்திக் கடனை எல்லாளனை கொன்று வெற்றிபெற்றபொழுது நிறைவேற்றி கதிர்காமத்து கந்தனை திருப்தி செய்ததாய் "கந்த உபத" (கந்தனின் தோற்றம்) என்ற சிங்கள நூல் கூறுவதும் குறிப்பிடத் தக்கது.

மேலும் கதிர்காம முருகனின் சிறப்பை நோக்குவோமானால் இவ் ஆலயத்தில் கதிர்காம சுவாமியுடன் வள்ளியம்மை தெய்வானையம்மன் இருந்து அருள்பாலிக்கின்றனர். இத் தலத்தில் முருகப் பெருமான் கார்த்திகேயன் என அழைக்கப்படுகின்றார். இப்பெயரின் பொருள் யானைவாழ் கிராமம் எனப்படுகின்றது. கதிர்காமம் கந்தனின் ஒளியும் அன்பும் சேர்ந்து இவ்வாறு அழைக்கப்படலாயிற்று. இத் தலத்தின் தீர்த்தம் மாணிக்ககங்கை. இதன் உற்சவங் களை நோக்குவாமானால் சித்திரைப் புத்தாண்டில் நிகழும் வள்ளியம்மை திருமணத் திற்கென பந்தற்கால் நாட்டுவிழா மற்றும் இதன் மகோற்சவம் ஆடி அல்லது ஆவணி 15 அல்லது 16 நாட்கள் நிகழும். கார்த்திகை விளக்கீடும் மிகச் சிறப்பாக நிகழும். இத்தலத்தின் பூசைகள்

**காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்**
**யாறுங் குளனும் வேறுபல வைப்பும்**
**சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்**
**மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையிலும்**

எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் முருகப் பெருமானுக்குச் சிவாகம முறைப்படியே கோயில் கட்டி வழிபடல் வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இதற்கு இத்தலம் ஓர் எடுத்துக்காட்டாயுள்ளது. இத்தலத்தில் பூசை செய்வோர் கப்புறாளை எனப்படுவார். இங்கு நடைபெறும் பூசைகளை ஈழத்திலுள்ள மக்கள் சென்று வழிபட்டு தாம் நினைத்த காரியம் நிறைவேற வேண்டும் எனவும் முருகனின் அருளைப்பெறுவதற்கும் இத்தலத்திற்கு வந்து வழிபட்டுச் செல்வர். அத்தோடு தலயாத்திரை சென்று வழிபடும் தலமாகவும் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. இத்தலத்தில் பல சிறப்புமிக்க நூல்கள் எழுந்தன. குறிப்பாக கதிர்காம புராணம், கந்த உபத (சிங்களநூல்), திருப்புகழ் (35 பாடல்கள்) என்பனவாகும்.

ஒல்லாந்தர் ஆட்சியைத் தொடர்ந்து இலங்கையில் சமயத்தைப் பேணும் முகமாக,

**குறவர்மகள் தனைநாடும் குமரன் றன்னை**
**குன்றாடிக் குன்றுருவக் குறித்து மாநற்**
**றிறலுடனே வேல்விடுத்த மயிலோன் றன்னைத்**
**தேவர்சிறை மீட்கவருதிகழி னானை....**

என்ற பாடலை வித்துவான் சரவணமுத்து இயற்றினார்.

மேலும் கந்தசுவாமி ஆயலம் (நல்லூர்) பற்றிய வழிபாட்டு முறையை நோக்கு வோமாயின் 1612இல் போர்த்துக்கீசத் தளபதி பிலிப்டி ஒலிவேறா என்பவன் நல்லூர் கந்தசுவாமி கோயிலை இடித்துத் தரைமட்ட மாக்கினான். யமினா ஏரியிலிருந்து அழிவுக் குள்ளாகிய இக்கோயில் 1793இல் ஒல்லாந்தர் அனுமதி பெற்று 1795இல் இன்றுள்ள இடத்தில் கட்டப்பட்டது. இன்று மிகவும் எளிச்சியுற்றுக் காணப்படுகின்றது. இவ்வாலயத்தில் கந்தசுவாமி, ஸ்ரீசுப்பிரமணியர், கந்தவேள், கந்தர் என்பன மூர்த்தியின் திருநாமங்களாகவும் ஸ்ரீ கஜவல்லி, ஸ்ரீ மகாவல்லி தேவியின் திருநாமங்களுமாகும். இத்தலம் யாழ்ப்பாண நகரிலிருந்து 1 மைல் தொலைவில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ளது. இத்தல தீர்த்தம் கோவிலின் ஆறுமுகசுவாமி வாயிலுக்குத் தெற்குப் புறமாகத் தீர்த்தக்குளமும் மண்டபமும் பழனியாண்டவர் சந்நிதியும் அமைந்துள்ளன. இத்தல உற்ஷவங்கள் ஆடி அமாவாசையின் 6ஆம் நாளன்று கொடியேறி 25 நாட்கள் நடைபெறும். மாதந்தோறும் கார்த்திகை நட்சத்திரத்தன்று பெருவிழா இடம்பெறுகின்றது.

இக்கோயிலின் பழமையை எடுத்துக் காட்டும் சான்றுகள் இல்லாவிடினும் கடந்த சில நூற்றாண்டுகளாய் நல்லூர்க் கந்தனை வழிபடும் அடியார்கள் தொகை பெருகிக்கொண்டே வருவது பெரும்சிறப்பாகும். நாள்தோறும் இங்கு வழிபடும் அடியார்கள் எண்ணிலடங்கா. ஈழத்தின் எல்லாத் திசைகளிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் வந்து உருகிஉருகி அழுது கதறித் தமிழர்தம் தெய்வமான முருகனை வழிபட்டு அமைதியும் நிறைவும் பெற்றுச் செல்கின்றனர்.

இதைப்போலவே மண்டூர்க் கந்தசுவாமி கோயில் பழமை வாய்ந்ததாகக் காணப்படு கிறது. இக்கோயிலின் சிறப்பால் மக்கள் மனமுருகி இவ்வால்யம் சென்று வழிபட்டு பல பயன்களைப் பெறுகின்றனர்.

இவைதவிர கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள கந்தசுவாமி ஆலயமும் பழமை வாய்ந்த ஆலயமாகும். இவ்வாலயத்தின் மகோற்சவம் கடைசியாக 2000ஆம் ஆண்டில் நடைபெற்றது. பின் போர்க்கால சூழலால் சிதைவுபெற்றிருந்த ஆலயம் தற்போது 2011இல் கும்பாபிஷேகத்துடன் மிகவும் சிறப்புற்று வழிபடப்படுகின்றது.

இவ்வாறு பல பழமைவாய்ந்த கோவில் களில் மக்கள் முருகனை வழிபடுகின்றனர். அதுமட்டுமல்லாது ஈழத்தின் அனைத்து இடங் களிலும் காணப்படும் முருகன் ஆலயங்களில் மக்கள் தம் எண்ணங்களை மற்றும் நாடு சிறப்புறுவதற்காகவும் சென்று மனமுருகி முருகப் பெருமானை வழிபடுகின்றனர். இவ்வாறே ஈழத்தில் முருக வழிபாடு சிறப்புற்று காணப்படுகின்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு
கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடாத்தப்பட்ட
கட்டுரைப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற கட்டுரை.

✦ ✦ ✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்பாபிஷேக பிரதமகுரு
சிவஸ்ரீ.கு.இரத்தினேஸ்வரக் குருக்களுக்கு
ஆலய பரிபாலன சபைத் தலைவர்
ச.ஸ்ரீகௌரிபாலாவினால் பொன்னாடை
போர்த்திக் கௌரவிக்கப்படுகின்றார்.



கும்பாபிஷேக முதலாவது சால்வையை
பரிபாலன சபைத் தலைவர் விநியோகிக்க
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்
திரு.N.சுதாகரன் பெறுகின்றார்.



கும்பாபிஷேக தினத்தன்று மகேஸ்வர பூஜை (அன்னதான நிகழ்வு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலய(24.01.2011 நடைபெற்ற) கும்பாபிஷேக விழாவில் வவுனியா இந்துமாமன்ற செயலாளர் சிவநெறிப் புரவலர் சி.ஏ.இராமஸ்வாமி அவர்களினால் வழங்கிய**

# வாழ்த்துப்பா

உலகுக்கு உணவு ஊட்டுகின்ற
உழவர் வாழும் கிளிநொச்சி
அலகில் துன்பம் பட்டபின்னே
உன் திருக்கோயில் புதுக்க வந்தார்
கலங்கிய நீரும் தெளிவதுபோல்
கலங்கிய மக்கள் துணிவு கொண்டார்
விலகவும் முடியா விதியதனால்
விளைவதுதானே இன்ப துன்பம்

வேலவனே உனை வேண்டி நின்று
வேதனை தீர்த்திடவேயும் வந்தார்
சாலையில் மருங்கினில் நீ இருந்து
சோதனை செய்தாய் ஏனோ எம்மை
சோலையும் அழிந்து சுடுகாடாய்
போனது ஏனோ நீ அறிவாய்
காலையும் மாலையும் உனைத் துதித்தார்
கஷ்டங்கள் தீர்ந்திட வேண்டுமைய்யா

எல்லாம் அவன் செயல்தான் என்றே
எடுத்தனர் உன்க்கு விழாவின்று
கல்லைக் கனியாய் ஆக்கும் உந்தன்
கருணைக்கு வேறு ஒன்று உண்டோ
வல்லான் சூரன் தனையளித்து
வணங்க வைத்தவன் நீ தானே
நில்லா உலகில் நிலைபெறவே
நின்னருள் இன்றி ஏதுமுண்டோ

இனிமேல் துன்பம் வராமல்
அடியினை தொழுவார் தனைக் காத்து
கனிபோல் வாழ்வை அமைத்திடுவாய்
கந்தா முருகா கதிரேசா
மனிதனை மனிதன் மதிக்கும் நல்ல
மார்க்கத்தை தந்து உதவிடுவாய்
பனியெனத் துன்பம் விலகும் என்றோ
பணிவிடை செய்திட நாமும் வந்தோம்

தாள்கள் பணிந்துனை வேண்டுகின்றோம்
தனிவேலவனே வாழ்க என்றே நன
ஊழ்கலியுதுவும் ஒழித்து நன்றே
உலகமும் ஓங்கிட அருள் புரிவாய்
நாள்வரை உன்னை நம்புகின்றோம்
நல்லருள் புரிந்திட வேண்டுமையா
வாழ்க எம்மக்கள் வளமுடனே
வாழ்க நின்பதமும் வாழ்க என்னோம்

**சிவநெறிப் புரவலர் சி .ஏ.இராமஸ்வாமி**
செயலாளர்
வவுனியா இந்து மாமன்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கிளிநொச்சி கந்தசுவாமி பேரில் திருவூஞ்சல்

**காப்பு**

சீரோங்கு மீழவள வடமாகாணத்
திருமாதின் இதயமெனச் சிறந்தோங்கி
நீரோங்கச் செந்நெல்விளை பழஞ் சூழ்ந்து
நிறையுமுயர் கிளிநொச்சி பதியின் மேவுந்
தாரோங்கும் வேலுறை செங்கரத்து மூர்த்தி
சவுந்திர சுப்பிரமணிய சாமி மீது
பேரோங்கு மூஞ்சலிசை யினிதினாற்றப்
பிரணவக் கணபதி தாள் காப்பதாமே

**நூல்**

சீர்மேவு நாதவிந்து கால்களாகச்
சிவமேவு சத்தியுயர் விட்டமாக
தேர்மேவு மகாம நூலிழையதாகத்
திருமேவு நால் வேதங் கயிறதாகப்
பேர்மேவு முபநிடதம் பலகையாகப்
பெருமைதரு பிரணவமாம் பீடமேறித்
தார்மேவு கிளிநொச்சிப் பதியின் மேவும்
சவுந்தர சுப்பிரமணியா ஆடீரூஞ்சல் (1)

மாதவனு மயனு மிருபாங்கின் மேவி
வரமருள்தா வள்ளி மணவாள வென்று
வேதமுறை துதிபுகல வருளும் மாதா
விமல சரவணபவனே விசாக வேலா
சோதிதரு மாரால் முலைப் பாலுண்டம்மை
முனை முலை வீழ்பாலுண்ட சுவாமிநாதா
சாதமதி கிளிநொச்சிப் பதியின் மேவும்
சவுந்தர சுப்பிரமணியா ஆடீரூஞ்சல் (02)

பாலனுமாய் விருத்தனுமாய் பரமுமாகிப்
பண்ணவரின் துயரமெல்லாம் பாறைவைத்தே
யாலவனு மாலவனு மயனுமாகி
அகில மெல்லாமளித்தருளு மாதிதேவா
கோலமயிலேறி வந்து தொண்டர் முன்னே
கூற்றகலக் காட்சிதருங் குமாரசாமி
சாலமிகு கிளிநொச்சிப் பதியின் மேவுஞ்
சவுந்தர சுப்பிரமணியா ஆடீரூஞ்சல் (03)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தினக ருறைபவரே யாடீரூஞ்சல்
திருவாவி னன்குடியீ ராடீரூஞ்சல்
பந்தமறு பரங் கிரியீ ராடீரூஞ்சல்
பழமுதிருஞ் சோலையரே யாடீரூஞ்சல்
சொந்தமுறு மேரகத்தீ ராடீரூஞ்சல்
சுபமருளுந் தணிகையரே யாடீரூஞ்சல்
சந்தமுறு கிளிநொச்சிப் பதியின் மேவுஞ்
சவுந்தர சுப்பிரமணியா ஆடீரூஞ்சல் (04)

அரகர வோங் கார்வொலி தழைக்குஞ் சோலை
அடர் கதிரை ஆண்டவரே யாடீரூஞ்சல்
புரமெரிய நகையருளு மீசன்றந்த
புத்திரமா மணியாரே யாடீரூஞ்சல்
கருணைதரு மாறுமுகங் கொண்டு தோன்றிக்
கன்மவினை தீர்த்தவரே யாடீரூஞ்சல்
சரவணமருள் கிளிநொச்சிப் பதியின் மேவுஞ்
சவுந்தர சுப்பிரமணியா ஆடீரூஞ்சல் (05)

ஆறுருவங் கொண்டுசர வணத்தின் மேவி
அருநடனஞ் செய்தவரே யாடீரூஞ்சல்
கூறு பிரணவப் பொருளைத் தாதைக்கோதிக்
குருவெனப் பேர் கொண்டவரே யாடீரூஞ்சல்
ஏறுமயி லேறியுல கெல்லாம் போற்றும்
ஞானசக்தி வேலவரே யாடீரூஞ்சல்
சாறு மலி கிளிநொச்சிப் பதியின் மேவுஞ்
சவுந்தர சுப்பிரமணியா ஆடீரூஞ்சல் (06)

செங்கமலன் தன்னைக் குட்டிச் சிறையிலிட்டுச்
சிருட்டியெல்லாஞ் செய்தவரே யாடீரூஞ்சல்
கங்கை பெற்ற பாலகரே யாடீரூஞ்சல்
கவுசியிளம் பாலகரே யாடீரூஞ்சல்
மங்கை தெய்வயானை மணவாள வள்ளி
மனமகிழும் காதலரே யாடீரூஞ்சல்
சங்கமலி கிளிநொச்சிப் பதியின் மேவுஞ்
சவுந்தர சுப்பிரமணியா ஆடீரூஞ்சல் (07)

பக்திமிகு தொண்டர் குழாம் புடையினின்று
பரமகுரு திருமுருகா அருள் தாவென்றே
எத்தினமும் பணிந்தேத்த வரங்களீயும்
ஏறுமயில் வாகனரே யாடீரூஞ்சல்
சித்தியொடு முத்திதரும் தேவதேவா
திருமகளின் குரமருகா ஆடீரூஞ்சல்
சக்திமிகு கிளிநொச்சிப் பதியின் மேவுஞ்
சவுந்தர சுப்பிரமணியா ஆடீரூஞ்சல். (08)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எச்சரிக்கை

பிரணவப் பொருள் உரைத்த பெருமான் எச்சரிக்கை
பிறை நுதலாள் வள்ளிபிரியா எச்சரிக்கை
சீரார் கங்கையில் உதித்தவரே எச்சரிக்கை
திருமேவும் கிளிநகர் வாழ்பவரே எச்சரிக்கை

### பராக்கு

ஆறுமுகம் கொண்ட எங்கள் ஆதி - பராக்கு
ஆனைமுகத்தார் பின் பிறந்த தம்பியே - பராக்கு
பங்கமுறா பன்னிரு கரத்தையா - பராக்கு
மங்காத கிளிநகர்வாழ் சோதியே - பராக்கு

### லாலி

குன்று தோறாடும் குமரா - லாலி
குறுமுனிக்குத்தமிழ் புகட்டியவா - லாலி
குறக்குலக்கொடி மணவாளரே - லாலி
கா மேவு கிளிநகர் காப்பவரே - லாலி.

### வாழி

சந்தமுறும் மறையோரும் பசுவும் வாழி
வருமறையும் செங்கோலும் மரசும் வாழி
வந்த கற்பு மாதரோடு தருமம் வாழி
வாய்ந்த சைவசமய நிலை புவியில் வாழி
முத்துத் திரு வெண்ணீற ணிந்தவரே வாழி
மும்மாரி பெய்துலகு செழித்து வாழி
பூசுரரும் நான் மறையும் புகழ்ந்து வாழி
தேசுடைய பணி செய்யுமடியார் வாழி வாழி.

## பழமுதிர்ச் சோலை

இராகம் : சிம்மேந்திமம் தாளம் : ஆதி

தனதன தான தனதன தான தனதன தான தனதான
தனதன தான தனதன தான தனதன தான தனதான

அகரமுமாகி யதிபனுமாகி யதிகமு மாகி
அகமாகி
அயனென வாகி அரியெனவாகி அரனெனவாகி
அவர் மேலாய்
இகரமுமாகி யெவைகளு மாகி யினிமையு மாகி
வருவோனே
இருநிலமீதி லெளியனும் வாழ எனதுமு னோடி
வரவேணும்
மகபதியாகி மருவும்வ லாரி மகிழ்களி கூரும்
வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர்காம
முடையோனே
சேககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு
மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு
பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய மகாகும்பாபிஷேக சிறப்பு மலரிற்கான கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர் விபரம்

**1. ஈழத்தில் முருக வழிபாடு**

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் இடம் | செல்வி அனுஷா | A/L 2012 கலை | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி |
| 2ஆம் இடம் | செல்வி S. நிஷாஜினி | A/L 2011 கலை | கிளி/ மகா வித்தியாலயம் |
| 3ஆம் இடம் | செல்வி ஆ. சுஜிதரணி | A/L 2010 கலை | கிளி/ மகா வித்தியாலயம் |

**2. அருகிவரும் சமய விழுமியங்களைப் பேணுவதில் இளைஞர்களின் பங்கு**

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் இடம் | செல்வி இ. தர்ஷினி | A/L 2010 கலை | கிளி/ மத்திய கல்லூரி |
| 2ஆம் இடம் | செல்வி சே. சயந்தனா | A/L 2012 வர்த்தகம் | கிளி/ கனகபுரம் மகா வித் |
| 3ஆம் இடம் | செல்வி நா. அனுஷா | A/L 2012 கலை | கிளி/ முழங்காவில் மகா வித் |

**3. சைவசமயமும் தமிழர் வாழ்வும்**

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் இடம் | செல்வி அ. குணசாந்தினி | A/L 2011 கலை | கிளி/ கிளிநொச்சி மகா வித் |
| 2ஆம் இடம் | செல்வி க. விமலேஸ்வரி | A/L 2011 கலை | கிளி/பிரமந்தனாறு ம.வித் |
| 3ஆம் இடம் | செல்வி செ. டியுற்றா | A/L 2011 கலை | கிளி/பிரமந்தனாறு ம.வித் |

## கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய மகாகும்பாபிஷேக விழாவை முன்னிட்டு சைவசமய அறிவுப் போட்டியில் பரிசில்களைப் பெறும் மாணவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் இடம் | சோமசுந்தரம் ஜனார்த்தனன் | தரம் 12 | கிளி/பூநகரி மகாவித்தியாலயம் |
| 2ஆம் இடம் | கிருஷாந்தினி அருமைநாதன் | தரம் 8 | கிளி/கனகாம்பிகை அ.த.க. பா |
| 3ஆம் இடம் | சுந்தரலிங்கம் தாருகா | 2012 கலை | களி/புனித திரேஷா பெண்கள். க |

ஆறுதல் பரிசில்கள் பெறுவோர்

| | | |
|---|---|---|
| 01) யோகரத்தினம் அனுசிகா | 2011 கலை | கிளி/புனித திரேஷா பெண்கள். க |
| 02) சிவக்கொழுந்து இந்துசேகர் | தரம் 10 | கிளி/முக்கொம்பன் அ.த.க. பா |
| 03) சுமித்திரா தெய்வேந்திரம் | 2011 கலை | கிளி/புனித திரேஷா பெண்கள். க |
| 04) சக்திவேல் சஜிதா | தரம் 13 | கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம் |
| 05) ரம்ஜா மயில்வாகனம் | தரம் 06 | கிளி/புனித திரேஷா பெண்கள். க |
| 06) சுகிர்தராசா சுகிர்தா | தரம் 11 | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி |
| 07) அ. தர்ஷிகா | தரம் 12 வர்த்தகம் | கிளி/புனித திரேஷா பெண்கள். க |
| 08) அ. கோபிகா | தரம் 2012 கலை | கிளி/புனித திரேஷா பெண்கள். க |
| 09) மகேந்திரன் யதுர்ஷனா | தரம் 08 | கிளி/புனித திரேஷா பெண்கள். க |
| 10) முருகையா கம்ஷனா | தரம் 06 | கிளி/புனித திரேஷா பெண்கள். க |
| 11) வடிவேல் பிரிந்தா | தரம் 11 | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி |
| 12) லதுர்ஷனா சதீஸ்குமார் | தரம் 06 | கிளி/ மகாவித்தியாலயம் |

**மகாசிவராத்திரி தினத்தன்று (02-03-2011) கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் வலயக் கல்விப் பணிமனையின் அனுசரணையுடன் திருநெறிக்கழகம் நடாத்திய சமய அறிவுப் போட்டியில் தெரிவாகி இறுதிப்போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்கள் விபரம்.**

| தரம் | நிலை | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| 4 | 1ஆம் இடம் | பாலச்சந்திரன் சேருஜா | கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை |
| 4 | 2ஆம் இடம் | கிருஷண்மூர்த்தி பிரியந்தன் | கிளி/ திருவையாறு மகாவித்தியாலயம் |
| 4 | 3ஆம் இடம் | குமாரவேல் ஜெனாலினி | கிளி/புனித பற்றிமா றோ.க.த.க.பா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தரம் | நிலை | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| 5 | 1ஆம் இடம் | பாலச்சந்திரன் பரணிதரன் | கிளி/திருவையாறு மகாவித்தியாலயம் |
| 5 | 2ஆம் இடம் | கமல்ராஜ் யனுசஜா | கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலம் |
| 5 | 3ஆம் இடம் | குகாநந்தன் தர்மிதா | கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம் |
| 6 | 1ஆம் இடம் | கிருபாநந்தன் றுசாந்தி | கிளி/புனித பற்றிமா றோ.த.க.பாடசாலை |
| 6 | 2ஆம் இடம் | சண்முகம் இசைவாணி | கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி |
| 6 | 3ஆம் இடம் | பாலச்சந்திரன் கிருசாலினி | கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை |
| 7 | 1ஆம் இடம் | தர்மகுலசூரியன் டிலக்சனா | கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி |
| 7 | 2ஆம் இடம் | நாகேந்திரம் ரபிகிஸ்ணா | கிளி/ திருவையாறு மகாவித்தியாலயம் |
| 7 | 3ஆம் இடம் | குமார் கீர்த்தனா | கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம் |
| 8 | 1ஆம் இடம் | தேவராசா ரவீஸ்பரன் | கிளி/ சிவநகர் அ.த.க. பாடசாலை |
| 8 | 2ஆம் இடம் | யுவராஜா கீர்த்திகா | கிளி/ திருவையாறு மகாவித்தியாலயம் |
| 8 | 3ஆம் இடம் | விஜயகுமார் மதுஷா | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி |
| 9 | 1ஆம் இடம் | திருவானந்தன் கிருஷாந்தி | கிளி/ உருத்திரபுரம் மகாவித்தியாலயம் |
| 9 | 1ஆம் இடம் | டனிந்திரகுமார் உமா | கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயம் |
| 9 | 3ஆம் இடம் | திலகநாதன் சண்கபி | கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை |
| 9 | 3ஆம் இடம் | கஜேந்திரன் தயூரா | கிளி/புனித திரேசா பெண்கள். பா |
| 10 | 1ஆம் இடம் | தே. சோமசுந்தரம் தேனுஷா | கிளி/ சிவநகர் அ.த.க. பாடசாலை |
| 10 | 2ஆம் இடம் | ரவீந்திரன் துஷந்தன் | கிளி/அக்கராயன் அ.த.க. பாடசாலை |
| 10 | 3ஆம் இடம் | கணேசலிங்கம் ஜெயவினுசன் | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி |
| 11 | 1ஆம் இடம் | கிருபைநாதன் சேயோன் | கிளி/ திருவையாறு மகாவித்தியாலயம் |
| 11 | 2ஆம் இடம் | கணேசன் சங்கவி | கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம் |
| 11 | 2ஆம் இடம் | நித்தியானந்தன் முகாயினி | கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம் |
| 12 | 1ஆம் இடம் | மகேந்திரராஜா ரஜிதா | கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயம் |
| 12 | 2ஆம் இடம் | மோகனதாஸ் ஜெனனி | கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம் |
| 12 | 3ஆம் இடம் | கிருஷ்ணராஜா தனோபா | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி |
| 13 | 1ஆம் இடம் | அருமைநாதன் குணசாந்தினி | கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம் |
| 13 | 2ஆம் இடம் | யோகரத்தினம் அனுசிகா | கிளி/புனித திரேசா பெண்கள். க |
| 13 | 3ஆம் இடம் | விஜயகுமார் அர்ச்சனா | கிளி/திருவையாறு மகாவித்தியாலயம் |

★★ ★★ ★★





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையின் அனுசரனையுடன் கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழகம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெறும் மகாசிவராத்திரி விழாவை முன்னிட்டு நடாத்திய சமயஅறிவு எழுத்துத்தேர்வில் இறுதிப்போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் விபரம் -2011

| தரம் | பெயர் | பாடசாலை பெயர் | நிலை |
|---|---|---|---|
| 4 | நடராசா தரணிகா | கிளி/கிளிநொச்சி மகா. வி | 1 |
| | துரைசிங்கம் சங்கவி | கிளி/புனித திரேசா பெ. க | 2 |
| | பாலச்சந்திரன் ரேருஜா | கிளி/சிவநகர்அ.த.க. பா | 3 |
| | கோணேஸ்வரன் லோஜன் | கிளி/உருத்திரபுரம் மகா. வி | 4 |
| | குமாரவேல் ஜெனாலினி | கிளி/புனித பற்றீமா றோ.த.க. பா | 5 |
| | கிருஸ்ணமூர்த்தி பிரியந்தன் | கிளி/திருவையாறு மகா. வி | 6 |
| 5 | கணேஸ்வரன் கஜநிதா | கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை | 1 |
| | அன்ரன் விமலராஜா பேபிசாலினி | கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா. வி | 2 |
| | கமல்ராஜ் யனுசஜா | கிளி/கிளிநொச்சி மகா.வி | 3 |
| | குகாநந்தன் தர்மிதா | கிளி/உருத்திரபுரம் மகா. வி | 4 |
| | பாலச்சந்திரன் பரணிதரன் | கிளி/திருவையாறு மகா. வி | 5 |
| | ரவச்சந்திரன் மதுஷா | கிளி/புனித திரேசா பெ. கல் | 6 |
| 6 | அருள்நாதன் சோஜினி | கிளி/புனித திரேசா பெ. கல் | 1 |
| | கிருபாநந்தன் றுசாந்தி | கிளி/புனித பற்றீமா றோ.க.த.க. பா | 2 |
| | திஸ்ஸநாயகம் நிலா | கிளி/கிளிநொச்சி மகா. வி | 3 |
| | இராசரட்ணம் சங்கவி | கிளி/உருத்திரபுரம் மகா. வி | 4 |
| | பாலச்சந்திரன் கிருசாலினி | கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை | 5 |
| | சண்முகம் இசைவாணி | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி | 6 |
| 7 | தர்மகுலசூரியன் டிலக்சனா | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி | 1 |
| | அருள்நாதன் சோபாஜினி | கிளி/புனித திரேசா பெ. கல் | 2 |
| | குமார் கீர்த்தனன் | கிளி/கிளிநொச்சி மகா. வி | 3 |
| | குணசேகரம் டினோசிகா | கிளி/ பாரதி வித்தியாலயம் | 4 |
| | அமிர்தலிங்கம் ஜனகா | கிளி/சிவநகர் அ.த.க. பா | 5 |
| | நாகேந்திரம் ரவிகிஸ்ணா | கிளி/திருவையாறு மகா. வி | 6 |
| 8 | பாலகுமார் அட்ச்சிகா | கிளி/புனித திரேசா பெ. கல் | 1 |
| | விஜயகுமர் மதுஷா | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி | 2 |
| | யுவராஜா கீர்த்திகா | கிளி/திருவையாறு மகா. வி | 3 |
| | தேவராசா ரவீஸ்வன் | கிளி/சிவநகர் அ.த.க. பா | 4 |
| | இராமச்சந்திரன் கேசாளினி | கிளி/அக்கராயன் அ.த.க. பா | 5 |
| | இதயசிவதாஸ் சங்கீர்த்தனா | கிளி/உருத்திரபுரம் மகா. வி | 6 |
| 9 | கிருபாநந்தன் கிருசாந்தி | கிளி/உருத்திரபுரம் மகா. வி | 1 |
| | கணேசமூர்த்தி கீர்த்திகா | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி | 2 |
| | திலகநாதன் சண்கவி | கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை | 3 |
| | டனிந்திரகுமார் உமா | கிளி/கிளிநொச்சி மகா. வி | 4 |
| | தஜேந்திரன் தயூரா | கிளி/புனித திரேசா பெண்கள். கல் | 5 |
| | சண்முகநாதன் சிந்துஜா | கிளி/புனித பற்றீமா றோ.க.த.க. பாடசாலை | 6 |
| 10 | ரவீந்திரன் துசந்தன் | கிளி/அக்கராயன் அ.த.க.பா | 1 |
| | செல்வராசா சேதுஜா | கிளி/உருத்திரபுரம் மகா. வி | 2 |
| | பாலசுப்பிரமணியம் ஶ்ரீப்பிரியா | கிளி/கிளிநொச்சி மகா. வி | 3 |
| | சோமசுந்தரம் தேனுஜா | கிளி/சிவநகர் அ.த.க பா | 4 |
| | கோணேசலிங்கம் ஜெயவிதுசன் | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி | 5 |
| | சபேசன் நிதுசன் | கிளி/திருவையாறு மகா. வி | 6 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தரம் | பெயர் | பாடசாலை பெயர் | நிலை |
|---|---|---|---|
| 11 | கிருபைநாதன் சேயோன் | கிளி/திருவையாறு மகா. வி | 1 |
| | கணேசன் சங்கவி | கிளி/கிளிநொச்சி மகா. வி | 2 |
| | நித்தியானந்தன் முகாயினி | கிளி/உருத்திரபுரம் மகா. வி | 3 |
| | விஸ்வநாதன் கிருசாயினி | கிளி/சிவநகர் அ.த.க. பா | 4 |
| | அம்பிகைபாகன் சௌமியா | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி | 5 |
| | லவன் லக்சனா | கிளி/அக்கராயன் மகா. வி | 6 |
| 12 | மகேந்திரராசா றஜிதா | கிளி/கிளிநொச்சி மகா. வி | 1 |
| | கிருஸ்ணராஜா தனோபா | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி | 2 |
| | விக்னேஸ்வரன் வின்சிகா | கிளி/புனித திரேசா பெண்கள். கல் | 3 |
| | மோகனதாஸ் ஜெனனி | கிளி/உருத்திரபுரம் மகா. வி | 4 |
| | நாகராசா பிரியங்கா | கிளி/திருவையாறு மகா. வி | 5 |
| 13 | அருமைநாதன் குணசாந்தினி | கிளி/கிளிநொச்சி மகா. வி | 1 |
| | நடராசா நிரஞ்சனா | கிளி/உருத்திரபுரம் மகா. வி | 2 |
| | வைத்தியநாதன் திவ்யா | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி | 3 |
| | யோகரத்தினம் அனுசிகா | கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி | 4 |
| | விஜயகுமார் அர்ச்சனா | கிளி/திருவையாறு மகா. வி | 5 |

☆ ☆ ☆

## கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக தொண்டரணியினர்

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | : | தவஞானபண்டிதர் டிலக்ஷாந் | (கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்) |
| உபதலைவர் | : | த. வசந்தகுமார் கஜானி | (கிளி/வேகானந்த வித்தியாலயம்) |
| செயலாளர் | : | வைத்தியநாதன் திவ்வியா | (கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி) |
| உபசெயலாளர் | : | ரா. நவீன்பிரசாத் | (கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்) |
| பத்திராதிபர் | : | மு. நிமலன் | (கிளி/பாரதி வித்தியாலயம்) |
| | | நி. சங்கீதா | (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி) |

செயற்குழு உறுப்பினர்கள் : நே. துஷ்யந்தி, க. கிரிகரன்,
லோ. நிரோஜன், ர. பிரதீபா,
சு. மேகலா, இ. கிருஷாந்தி,
பி. விதுசனா, செ. வக்சலா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது மாவட்ட கிளிநொச்சி அருள்மிகு முருகன் ஆலயம் இருமுறை யுத்தத்தால் பாதிக்கப்பட்டும் இவ்வாலயம் முதற்கண் மக்களுக்கு வணக்கத்துக்கு முக்கியம் என உணர்ந்த இம்மாவட்ட மக்கள் தமது சொந்த பல கஷ்டங்களின் மத்தியிலும் இத் திருப்பணி வேலைகளை நிறைவேற்றி தந்த அனைவருக்கும் நன்றி கூறி குடமுழுக்கு விழா 24.01.2011 காண்பதில் எமது நிர்வாகமும், மக்களும் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். இவர்களுக்கு எமது நீண்ட நெடிய நன்றியைத் தெரிவிக்கின்றோம். காலத்திற்குக் காலம் முருகன் கிருபையால் எமக்கு நல்ல ஆலயத்தின் தொண்டாற்றக் கூடிய தலைவர்கள் கிடைப்பதும் எம்மை வழிநடத்துவதும் மிகச் சிறப்பாகும். இந்த வழியில் இம்முறை எமக்குக் கிடைத்த தலைவர் திரு.ஸ்ரீகௌரிபாலாவாகும். பாரிய ஆலயத் திருப்பணி வேலைகளை எப்படி பொருளாதாரத்தைத் தேடி நிறைவேற்ற முடியும் என நிர்வாகம் சிந்திக்கும் போது முதன் முதல் மக்கள் வங்கி மேலதிகாரிகளை நாடி திருப்பணி நிதியைப் பெற்றுத் தந்தும், அடுத்து இம் மாவட்ட எல்லா மக்களின் பங்களிப்பு முக்கியமென உணர்ந்து இதற்கேற்ப செயற்பட வேண்டும் என இம் மாவட்ட எல்லாத் திணைக்களங்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் வசூல் எடுப்பதற்கான கடிதம் கொடுத்தும் வெளிமாவட்டம் வெளிநாடு கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மக்களை நாடி திருப்பணி நிதிகளைப் பெற்றும் இவ் திருப்பணி வேலைகளை நிறைவேற்றி உள்ளோம். இவர்கள் யாவருக்கும் நன்றி கூறுவதையிட்டு பெருமைப்படுகின்றோம்.

இம் மாவட்ட மக்கள், வர்த்தகர்கள், திருவிழா உபயகாரர்கள் மற்றும் ஆலய வெள்ளிக்கிழமை உபயகாரர்கள், விசேடதின உபயகாரர்கள், முக்கியமாக நீர்ப்பாசன இலாகா, கல்வி இலாகா, அரச திணைக்களங்கள், பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவு ஸ்தாபனம், நகர மத்தி பல நோக்கு கூட்டுறவு அதிகாரிகள் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதில் மனமகிழ்ச்சி அடைகிறோம்.

எனது வேண்டுதலைப் பரிசீலித்து ஆலய காணியை விடுவிப்பதற்கான அந்த இராணுவப் பகுதிக்கு அறிவித்தல் விடுத்த மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கட்கும் பிரதமமந்திரி அவர்கட்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். மேலும் இராணுவப் பிரிவின் 57ம், 58ம் பிரிவினர் எமது ஆலய வீதியைத் துப்பரவு செய்து மணல் கிரவல் போட்டுள்ளார்கள். இவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

மேலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் திரு.மகேஸ்வரன் இவ் ஆலயத்தை பேணி உதவி செய்ததமையை உணர்ந்து தற்போதய பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் செயற்பாட்டை தொடரவேண்டுமென இவ் ஆலயத்திற்கு அடிக்கடி வந்து நேரில் பார்வையிட்டு நிர்வாகத்துடன் கலந்துரையாடி இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த ஆலயக் காணியை மீட்டுத் தருவதற்கு பெருமுயற்சி எடுத்தார். அத்துடன் உதவியையும் செய்தார். இவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் திரு.சிவஞானம் ஸ்ரீதரன் இம் மாவட்டத்தில் பாடசாலை அதிபராக இருந்து மாணவச் செல்வங்கள் மூலம் நல்ல சமூகத்தைக் கட்டி எழுப்பி மாவட்டத்தை முன்னேற்ற பாடுபட்டார். ஆரம்ப காலத்தில் இருந்து இவ்விட ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை புரிந்தவர். தற்போது எமது ஆலயத்திற்கும் திருப்பணி நிதி உதவி புரிந்தும் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த ஆலய பிற்பகுதி காணியை மீட்டுத் தரவும் பெரும் முயற்சி செய்தார். இவருக்கும் நன்றியை தெரிவிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். நன்றி உரித்தாகுக.

மேலும் எமது அரச அதிபர், உதவி அரச அதிபர், மேலதிக உதவி அரச அதிபர், கலாசார உத்தியோகத்தர்கள், நகர பிரதேச சபை அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், கிராம உத்தியோகத்தர் இவர்களும் இவ் ஆலய நிலைமையை உணர்ந்து ஆலய பிற்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள ஆலயக் காணியைமீட்டுத் தருவதற்கான முயற்சி செய்தும், பாராளுமன்ற உறுப்பினர் திரு நாமல் ராஜபக்ஷ பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் ஆலயத் திருப்பணிக்கு சிபார்சு செய்து உதவி செய்தும் அவ்வப்போது ஆலயத்திற்கு வேண்டிய உதவிகளையும் செய்து தந்தார்கள். இவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் சில பரிவார மூர்த்திகளின் ஸ்தாபகரர்கள்(உபயகாரர்) அவ்வப் பரிவார மூர்த்திகளின் திருப்பணி செலவுகள் தந்துதவினார்கள். இவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மற்றும் முன்னாள் அரச அதிபரும், ஆளுனர் செயலாளருமாகிய திரு.தி.இராசநாயகம் அன்றிலிருந்து இன்று வரையும் இம் மாவட்ட முன்னேற்றத்தை கருத்தில் கொண்டும், ஆலய வளர்ச்சி, நலிந்த சமூகத்தைப் பேணிப்பாதுகாத்தல், சைவச் சிறார்களைப் பேணிப்பாதுகாத்தல், என்னும் பாரிய தொண்டுகளைச் செயற்படுத்தியும் எமது ஆலய பிற்காணி ஆலயத்திற்கு முக்கியமென உணர்ந்து நேரடியாக இராணுவ தலைமைப்பீடத்துடன் கதைத்து மீட்டுத்தர முயற்சி செய்தமைக்கும் இவ்வாலய பாலஸ்தாபன திருப்பணிக்கு உதவிகளைச் செய்தமைக்கு இருவருக்கும் எமது நீண்ட நெடிய நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் கணேசானந்தா மகாதேவா ஆச்சிரம குருமுதல்வர் தள்ளாத இம் முது வயதிலும், நல்ல சமூகத்தைப் பேணிப்பாதுகாத்து வளர்ச்சிகாண வேண்டும் எனும் ஆர்வத்தில் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார். எமது ஆலய ஆசியுரையை வழங்கியதுடன் மாணவச் செல்வங்கள், ஆன்மீகத் தொண்டர்கள் மிக ஆலய வளர்ச்சிக்கு வேண்டுமென்பதை எமக்கு உணர்த்தியும், பல ஆலயங்களில் பஜனைகள் பிரசங்கங்கள், ஆசியுரை, வாழ்த்துரை வழங்கிக் கொண்டுமிருக்கின்றார். இவருக்கு எமது ஆலய சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மற்றும் ஆலயத்தை ஆதியில் ஆரம்பித்த முகாந்திரம் வெற்றிவேலு குடும்பத்தின் அங்கத்தவராகிய கிராமசேவையாளர் தனபாலசிங்கம் குடும்பத்தினர் எமக்கு சனீஸ்வரன் விக்கிரகம் உபயமாக செய்தும் திருப்பணி உதவிகள் செய்தும் தந்துள்ளார்கள். இவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இக் குடமுழுக்கு விழாவை மிக பக்தி பூர்வமாக நிறைவேற்றியுள்ள (எமது ஆலய பிரதம குருக்களும்) கும்பாபிஷேக பிரதம குருக்கள் சிவஸ்ரீ இரத்தினேஸ்வரக்குருக்கள் குடும்பம், சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் குடும்பம், சிவஸ்ரீ சபாரத்தினம் குருக்கள், இவ்வாலய குருக்கள், சர்மா இவர்களுக்கும் மற்றும் இவ் விழாவில் பங்கேற்ற யாழ் மாவட்ட, கிளிநொச்சி மாவட்ட, வவுனியா மாவட்ட குருக்கள்மார்கள், சதாகாச்சாரியார்கள் யாபேருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். மின்சார ஒப்பந்தகாரர்கள், கட்டிட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பந்தகாரர்கள், ஆசாரி, சிற்ப ஆசாரி, வர்ணம் பூசுபவர் மேலும் ஆலய திருப்பணி வேலைகளின் ஒப்பந்தகாரர்கள், விக்கிரகங்களின் ஸ்தாபகர்கள் யாபேருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். மற்றும் மேளகாரர்கள், சாத்துப்படிகாரர்கள், மாணவர் தொண்டர்சபை, இதைப் பொறுப்பாக நடாத்திய மலர்க்குழுவினர், ஆலயத் திருப்பணி சபையினர், தேர்த் திருப்பணிச் சபை தர்மகர்த்தா சபையினர் இக் குடமுழுக்கு விழாவை சிறப்பாக நடாத்த உதவியவர்கள் யாவர்க்கும் நன்றி உரித்தாகுக.

இம் மாவட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய திரு.வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்கள் ஆரம்பகால தொண்டராக பட்டினசபை முதல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களுக்கு சேவையாற்றிய உத்தமர். தற்போது ஒதுங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இவருக்கும் எமது நிர்வாக சார்பில் நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியுடைகின்றோம். யாழ். பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ். பாராளுமன்ற உறுப்பினர் திரு.மு.சந்திரகுமார் இவர்களும் இவ்வாலய கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்கள். இவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

முக்கியமாக இந்துகலாச்சார அமைச்சு பணிப்பாளர் திருமதி.சாந்தி.திருநாவுக்கரசு எமது ஆலய விடயங்களைக் கண்ணும் கருத்துமாக கவனித்து நமது வேண்டுகோள்களை ஏற்று இயன்ற உதவிகளைச் செய்தும், கும்பாபிஷேக மலருக்கு ஆசியுரை அனுப்பியுள்ளார். இவருக்கும் இவரது அமைச்சுசார் அதிகாரிகள் எல்லோருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு எல்லாம் வல்ல முருகப் பெருமான் கருணையையும் வேண்டி நிற்கின்றோம்.

மேலும் கும்பாபிஷேக மலரை ஆக்கி அச்சேற்றி ஆசியுரை வாழ்த்துரைகளையும் ஆக்கங்களையும் சேர்த்து நிரைப்படுத்திய எமது மாவட்ட சமூக சமய தொண்டராகிய திருமதி.செ.சோமசேகரம்பிள்ளைக்கும், இவருடன் சார்ந்த மலர்க்குழுவிற்கும் எமது நன்றியுரையை தெரிவிக்கின்றோம்.

ஆலயவீதி காவல் கடமையிலும், பாதுகாப்புக் கடமையிலும் ஈடுபட்டுள்ள காவற்றுறை பகுதியினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

மற்றும் ஆலய காரியாலய முகாமையாளர் பல வேலைகள் செய்யும் இவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு தற்போது எமது மனத்தில் புலப்படாத அனைவருக்கும் எமது நன்றி உரையை தெரியத்தருகின்றேன்.

நன்றி.


**செல்லையா செல்வரத்தினம்**
செயலாளர்
தர்மகர்த்தா சபை உறுப்பினர்
கிளி/அருள்மிகு கந்தசுவாமிதேவஸ்தானம்,
கிளிநொச்சி.



பிரகாஷ் பதிப்பகம், கரவச்சை, அளவெட்டி வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக மலர் சிறப்புற வெளிவர வாழ்த்துகின்றோம்.

# பிள்ளையார் காட்வெயர் அன்ட் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்



**TP. No : 0213208011**

**A9 வீதி, கிளிநொச்சி**

---

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக மலர் சிறப்புற வெளிவர வாழ்த்துகின்றோம்.

# வேலும் மயிலும் ஸ்ரோர்ஸ்

## விவசாய உள்ளீடுகளின் விற்பனை நிலையம்



**353, கண்டி வீதி, கிளிநொச்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான
கும்பாபிஷேக மலர் சிறப்புற
வெளிவர வாழ்த்துகின்றோம்.

# பிள்ளையார் அருள் வண்ணச்சோலை



A9 கண்டி வீதி,
கிளிநொச்சி

TP. No : 0212285789



கும்பாபிஷேக மலர் வெளிவருவதையிட்டு
மகிழ்வடைகின்றோம்.

# அறிவுநதி புத்தகசாலை

விளையாட்டு
உபகரணங்கள்,
பயிற்சிப்புத்தகங்கள்,
கொப்பிகள், பாடசாலை
மாணவர்களுக்கான
உபகரணங்கள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ளலாம்.






டிப்போ றோட்,
கிளிநொச்சி.

போட்டிப் பரீட்சைகளிற்கான வழிகாட்டற்
கருத்தரங்குகளும் எம்மால்
மேற்கொள்ளப்படுகின்றது.



கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக மலர் சிறப்புற
வெளிவர வாழ்த்துகின்றோம்.

# எழிலகம் றேட் சென்ரர்

புகையிரத நிலையவீதி, கிளிநொச்சி

வயறிங் பொருட்கள்,
எலெக்றிக் பொருட்கள்,
மாபிள் வகைகள்,
பைப் பிற்றிங் பொருட்கள்
மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
ஒரே இடம்




## EZHILAGAM TRADE CENTRE

Station Road, Kilinochchi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடமுழுக்கு நிறைவுபெற்று அருள்பாலித்துக் கொண்டிருக்கும் எம்பெருமான்
கடந்தகாலம் போன்று தமிழ் மக்களுக்கு இன்னல்கள், இடையூறுகள், இடப்பெயர்வுகள்
போன்றவை இனிமேலும் ஏற்படாமல் காக்கவேண்டும் என இருகரம் கூப்பி
இவ்வினிய வேளையில் முருகப் பெருமானை
வேண்டிக் கொள்கின்றோம்.



தரமிக்க திருமணப் பட்டுப் புடவைகளின்
கைராசியானது
மங்கையர் மனங்கவரும் ஆடைத்
தெரிவுகளான
சோளிகிற், சேட்டிங் சூட்டிங்,
ஸ்கேட் அன்ட் பிளவுஸ்,
கவுண், பஞ்சாபி சூட், பட்டுவேட்டி,
பேபி சூட், சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற
ரெடிமேற் ஆடைகள்
மற்றும் அன்பளிப்புப் பொருட்கள்
ஆகியவற்றை
தரம் - நம்பிக்கை நியாய விலைக்குப்
பெற்றுக்கொள்ள
நீங்கள் நாட வேண்டிய இடம்

# முத்துப்பிள்ளையார்

# வண்ணச்சோலை



துணுக்காய் வீதி, மல்லாவி,
யாழ் சாலை, கிளிநொச்சி

**TP No :**
**0213207491**
**0212285137**
**0213207263**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேக மலார் சிறப்புற வெளிவர
எமது உளம் நிறைந்த வாழ்த்துக்கள்

**பவள அரசன்**

**நகைத்தொழிலகம்**



டிப்போ றோட்,
புதியசந்தை அருகாமை,
அம்பாள்குளம், கிளிநொச்சி.

கும்பாபிஷேக மலர் வெளிவருவதையிட்டு
மகிழ்வடைகின்றோம்.

**ஐங்கரன்**

**கொம்பியூட்டர்
ஸ்ரூடியோ &
வீடியோ**





ரைப் செற்றிங் அன்ட்
பிறின்ரிங், போட்டோப்பிரதி,
லெமினேற்றிங் போன்றனவற்றையும்,
புகைப்படங்கள், அடையாள
அட்டைப்படம் அனைத்தையும்
15 நிமிடங்களுக்குள்
பெற்றுக்கொள்ளலாம்.

கனகபுரம், கிளிநொச்சி

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக மலர் சிறப்புற
வெளிவர வாழ்த்துகின்றோம்.

**பிரகாஷ் பதிப்பகம்**

கரவச்சை, அளவெட்டி வடக்கு,
அளவெட்டி





சகலவிதமான அச்சுவேலைகள், ஸ்கிறீன் பிறிண்டிங்,
ஓப்ஃசெற் வேலைகளை சிறந்த முறையில்
செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக தினத்தை
முன்னிட்டு கும்பாபிஷேக சிறப்புமலர் மலர்வதையிட்டு
மனப்பூரிப்புடன் வாழ்த்துகின்றோம்.


# பிள்ளையார் புத்தகசாலை



தினசரிப் பத்திரிகைகள்,
பாடசாலை உபகரணங்கள், படிவ வகைகள்,
எழுது பொருட்கள், அறிவுசார் நூல்கள்,
போட்டோப்பிரதி,லெமினேற்றிங், சுருள் பைண்டிங்,
அன்பளிப்புப் பொருட்கள்,
பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்
போன்றவற்றை
மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

**பிள்ளையார் புத்தகசாலை**







**A9 வீதி,**
**கிளிநொச்சி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக தினத்தை
முன்னிட்டு கும்பாபிஷேக சிறப்புமலர் வெளிவருவதையிட்டு
மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

# குவி ஹாட்வெயர்

## A9 வீதி, கிளிநொச்சி




சகலவிதமான
கட்டடப்பொருட்கள்
அனைத்து வகையான
மோட்டார் உதிரிப்பாகங்களை
மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்

# Kuvi Hardware

A9 Road,
Kilinochchi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக மலர் சிறப்புற
வெளிவர வாழ்த்துகின்றோம்.

# பொன்னம்பலம்

## பல்வகை வாணிபம்




**A9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி**

---

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான
கும்பாபிஷேக மலர் சிறப்புற
வெளிவர வாழ்த்துகின்றோம்.

சிற்றுண்டி வகைகள்
சகலவிதமான
உணவுகள்



அனைத்தையும் மலிவாகவும்,
தரமாகவும் பெற்றுக் கொள்ள
நாடுங்கள்



## தேனூற்று உணவகம்

கிளிநொச்சி.

உரிமையாளர்:
ஆறுமுகம் ஜெயபாலன்

---


கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான
கும்பாபிஷேக மலர் சிறப்புற
வெளிவர வாழ்த்துகின்றோம்.

## இ.சு.வே. நாகரத்தினம்
## சக நிறுவனம்



**A9 வீதி, கரடிப்போக்கு,**
**கிளிநொச்சி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A.Ketheeswaran
Assistant Director Planning,
District Planning Secretariat,
Kachcheri, Kilinochchi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாஷ் பதிப்பகம், கரவச்சை, அளவெட்டி வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிக்கோபுரத்துக்கான
கும்பாபிஷேகக் காட்சி



மூலஸ்தான
கும்பாபிஷேகக் காட்சி